விடுதலைப்புலிகள்
குரல்: 123
சித்திரை – வைகாசி 2005
அன்பளிப்பு: 12/=

03 தம் கருவிலே தம்மையே - 02...
05 மூன்றுவருட போர்நிறுத்தம்...
06 சர்வதேச சமூகத்தை...
07 விலைகொடுத்த மக்களும்...
08 ஆயுதமேந்திய சிறுவர்களும்...
14 தனது உயிரைவிட தமிழர்...

# சிங்களதேசம் மீண்டுமொரு போரைத் திணிக்கின்றதா?

**தமிழர் தாயகத்தின் களநிலைமை மோசமடைந்து வருகின்றது. தமிழ்மக்களின் இயல்புவாழ்வும் சீரழிந்துவருகின்றது. இராணுவ அட்டூழியங்கள் அதிகரித்துள்ளன. தமிழர்கள் கொல்லப்படுவதும் - தொல்லைப்படுத்தப்படுவதும் திடீரென அதிகரித்துள்ளன. மக்கள் வாழ்விடங்களில் புதிது புதிதாக இராணுவ காவலரண்கள் அமைக்கப்படுகின்றன. புதிதாக பிரயாணத் தடைகளும் - பொருட்களுக்கான தடைகளும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.**

**கிழக்கு மாகாணத்தில் ஒரு நிழல் யுத்தத்தை அரசபடைகள் நடாத்தி வருகின்றன. தினம் தினம் போராளிகளும் - தேச பக்தர்களும் - ஊடகவியலாளர்களும் இதில் கொல்லப்படுகின்றனர்.**

போர்நிறுத்த ஒப்பந்தம் என்பது கேலிக்கிடமான ஒரு விடயமாக மாறி விட்டது. படையினரும் - அரசும் உடன்பாட்டை மதிக்கவேயில்லை. ஒப்பந்த மீறல்களுக்கு எதிராக எவரும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஒப்பந்த மீறல்களை மக்கள் தட்டிக்கேட்க முற்படுகின்றனர். அமைதி வழியில் அவர்கள் காட்டும் எதிர்ப்பு நடவடிக்கைகள் படையினரால் துப்பாக்கி முனையில் நசுக்கப்படுகின்றன. இந்த மக்கள் கொலைகளுக்கு அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. சாதாரண பார்வையாளர்களைப் போலவே அரசும் - கண்காணிப்புக் குழுவும் செயலாற்றுகின்றன.

அண்மையில் மட்டக்களப்பு - சந்திவெளியில் கண்காணிப்புக்குழு முன்னிலையிலேயே படையினர் மக்களைச் சுட்டனர். அங்கே நாடாளுமன்ற உறுப்பினர்களும் நின்றனர். படையினர் எவருக்கும் அஞ்சவில்லை. மக்களைக் கொல்வதிலும் - காயப்படுத்துவதிலும் படையினர் ஒரு வெறித்தனத்தைக் காட்டிவருகின்றனர். தமிழர் தாயகம் எங்குமே இதே நிலைதான் காணப்படுகின்றது.

போர்நிறுத்த ஒப்பந்தம் தங்களுக்கு விமோசனத்தைப் பெற்றுத்தரும் என்று ஆரம்பத்தில் தமிழ்மக்கள் எண்ணினர். ஒப்பந்தத்தைச் சரிவர அமுல்படுத்தவும் - ஒப்பந்த மீறல்களைத் திருத்தவும் முனைவது தங்களின் அரசியல் கடமை என்று மக்கள் நினைத்தனர். அதனால், ஒப்பந்த மீறல்களுக்கு எதிராக அவர்கள் எதிர்ப்புப் போராட்டங்களை நடாத்தினர்.

ஆனால், மக்கள் போராட்டத்தை சிங்களப் படைகளால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அவர்கள்மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து போராட்டங்களை ஒடுக்க முயற்சிக்கின்றனர். இதனால் மக்கள் போராட்டங்களும் தீவிரவடிவம் பெற்று வருகின்றன.

இதேவேளை மக்கள் போர்நிறுத்த ஒப்பந்தத்திலும் நம்பிக்கையிழந்து வருகின்றனர். சிங்கள அரசும் - சிங்களப் படையினரும் உடன்பாட்டை மதிக்காது நடந்துவருவதால் போர்நிறுத்த ஒப்பந்தமும் இப்போது கேள்விக் குறியாகியுள்ளது.

செய்யப்பட்ட உடன்பாடு வெறுமனே செயலற்றுக் கிடக்கின்றது என்பது பற்றி சிங்கள அரசும் அலட்டிக்கொள்ளவில்லை. மாறாக, தனது படை வலுவைப் பெருக்குவதிலேயே சிரத்தை காட்டுகின்றது. (02ஆம் பக்கம் பார்க்க)



ஈழம் வெல்லும் வேகத்தோடு காத்திருக்கின்றோம் - எங்கள்
தலைவன் சொல்லும் வேளை மட்டும் பார்த்திருக்கின்றோம்

# கானல் நீராகும் பொதுக்கட்டமைப்பு கூறுகின்ற உண்மைகள்

உலக சமூகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கிய ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டு ஐந்து மாதங்கள் ஆகின்றன. பாதிக்கப்பட்ட மக்கள் தமது வாழ்வைப் புதுப்பிக்க உதவும் நல்லெண்ணத்துடன், பெருமெடுப்பில் நிதி உதவிபுரிய உலக சமூகம் உடனடியாகவே முன்வந்தது.

இந்தப் பெருநிதியைச் சரிவரப்பகிர்ந்து - கண்காணிக்க சிங்கள அரசும் - புலிகள் இயக்கமும் ஒரு பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று உலகசமூகம் விரும்பியது. எனினும் இன்றுவரை அப்படி ஒரு கட்டமைப்பை ஏற்றுக்கொள்ள சிங்கள அரசு தயாராக இல்லை.

பொதுக்கட்டமைப்பொன்று உடனடியாகவே உருவாக்கப்படவேண்டும் என்பதில் புலிகள் இயக்கம் உறுதியாகவே உள்ளது. அதன் அடிப்படையிலேயே நோர்வே சமர்ப்பித்த பொதுக் கட்டமைப்பு மாதிரிவரைபில் பல குறைபாடுகள் இருந்தும் அதை ஏற்று நடைமுறைப்படுத்த புலிகள் இயக்கம் உடனடியாகவே சம்மதித்தது. ஆனால், சிங்கள அரசு இன்னமும் இழுத்தடிக்கும் மனோநிலையுடனேயே காணப்படுகின்றது.

சுனாமி அனர்த்தத்திற்கான இந்த உலக நிதியுதவியை பாதிக்கப்பட்ட மக்களுக்கு - இன பேதமின்றி பகிர்ந்தளிக்கும் இலக்குக்கொண்ட பொதுக்கட்டமைப்பு எந்தவித அரசியற் கலப்புமற்ற ஒரு மனிதாபிமானப் பணிக்கான கட்டமைப்பாகும்.

இப் பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டிற்கு சிங்கள அரசு விரைவில் வரவேண்டும் என்று உலகநாடுகள் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டும்கூட அது இணங்கிவர மறுக்கின்றது.

புலிகள் இயக்கத்துடன் போர்நிறுத்த உடன்பாட்டிற்கு வந்து இனப்பிரச்சினைக்கு ஒரு அரசியற்தீர்வு காணப்போவதாகச் சொல்லிக்கொள்ளும் சிங்கள அரசு, முற்றுமுழுவதும் மனிதாபிமான நோக்கம்கொண்ட பொதுக் கட்டமைப்பிற்கே இணங்க மறுத்துவருவது தமிழ்மக்களை முற்றுமுழுதாக விரக்திக்குள் தள்ளியுள்ளது.

விரைவில் பொதுக்கட்டமைப்பு வந்துவிடும் என்று சந்திரிக்கா அம்மையார் அறிக்கைகள் வெளியிட்டு வருகின்றார். அவரின் அறிவிப்புக்கள் உண்மைத் தன்மை கொண்டவை அல்ல. உலகப் பெரும் நிதியை பெற்றுவிடத் துடிக்கும் ஏமாற்று நோக்கம் கொண்டதாகவே அதை புலிகள் இயக்கம் கருதுகின்றது.

உலக சமூகத்தை ஏமாற்ற வாயளவில் பொதுக்கட்டமைப்பை ஏற்றுக்கொண்டதாகக் கூறிவிட்டு அதை நடைமுறைப்படுத்தாதுவிடும் வழமையான சதி அரசியலைச் செய்யவே சிங்கள அரசு முனைகின்றது.

ஆழிப் பேரலையால் எமது மக்கள் சந்தித்த அழிவுகள் ஒருபுறம் இருக்க, கடந்த 20 வருடத்திற்கும் மேலான இனப்போரில் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கான உதவித் திட்டங்கள் என்ற பெரும்பணியும் புலிகள் இயக்கத்தின் முன்னேயுள்ளது. அவற்றை மேற்கொள்ளும் தொடக்க நிலையாக போர்நிறுத்த உடன்பாட்டில் காணப்பட்ட இணக்கப்பாட்டையும் நடைமுறைப்படுத்த அரசு பின்னடித்து வருகின்றது.

போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு மூன்று வருடங்கள் கழிந்துவிட்டன. உடன்பாட்டில் இணக்கம் காணப்பட்டவையும் சரியாக நடைமுறைக்கு வரவில்லை. இந்தக் காலப்பகுதியில் பேச்சு வார்த்தை மேசைகளில் இணக்கம் காணப்பட்டவையும் செயல்வடிவம் பெறவில்லை.

ஒட்டுமொத்தத்தில் சர்வதேச சமூகத்தின் வேண்டுகோள்களையும் - வற்புறுத்தல்களையும் சிங்கள அரசு சிறிதும் கவனத்திற் கொள்ளாது தொடர்ந்தும் தனது இனவாத அரசியலை முன்னெடுத்து வருவது தமிழ்மக்களுக்கு பாரிய விசனத்தை ஏற்படுத்தி வருகின்றது.

போர் நடைபெறும்போதும் சரி - சமாதான அரசியற் காலத்திலும் சரி சிங்கள அரசு தனது பேரினவாத நிலைப்பாட்டை விட்டுக் கொடுக்காமலே ஆட்சிநடாத்த முனைகின்றது.

சிங்கள அரசு தொடர்பாக புலிகள் இயக்கம் கடந்த 20 வருடகாலமாக ஒரு குற்றச் சாட்டை முன்வைத்து வருகின்றது. தமிழருக்கு அது ஒருபோதும் நீதி வழங்கப்போவதில்லை என்பதுதான் அது. தொடர்ந்தும் இதேமாதிரி தமிழர்களின் அபிலாசைகளைக் கருத்தில் எடுக்காத ஒரு கடும்போக்கு - இனவாத அரசாகவே சிங்கள அரசு தொழிற்படப் போகின்றது.

சர்வதேச பங்களிப்புடன் நடைபெற்ற தற்போதைய சமாதான முயற்சிகளில் தமிழர்களுக்கு நீதியும், நியாயமும் கிடைக்கும் என்று நம்பிய தமிழ்மக்கள் இப்போது ஏமாற்றமடைந்து வருகின்றனர்.

ஒரு மனிதாபிமானப் பணியைக்கொண்ட பொதுக்கட்டமைப்பிற்கே இந்தக் கதியென்றால் புலிகள் இயக்கம் சமர்ப்பித்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை மற்றும் நிரந்தர அரசியற்தீர்வு என்ற அரசியல் விடயங்களைத் தமிழ்மக்கள் கற்பனை செய்துபார்க்கத் தேவையில்லை.

மொத்தத்தில் ஈழத்தமிழரின் இனப் பிரச்சினைக்கு அமைதிவழியில் அரசியற்தீர்வு காண்பது என்பது நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்றாகவே மாறிவருகின்றது. இத்தகையதொரு அரசியற்தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கையும் தமிழர்களிடம் இல்லாது போய்க்கொண்டிருக்கின்றது.

---

(01ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த சமாதான காலத்திலேயே பெருமளவு நிதியை ஆயுதக் கொள்வனவுக்கு ஒதுக்கிவருகின்றது. சிங்களத்தின் அபிவிருத்தி பற்றியும் அரசுக்குக் கவலையில்லை. படைப்பல பெருக்கத்திலேயே நேரத்தையும் - பணத்தையும் செலவிட்டு ஒரு போருக்கான மனநிலையையே வளர்த்துவருகின்றது.

சிங்கள அரசின் இந்தச் சமாதான விரோதச் செயற்பாடுகளை சர்வதேச சமூகமும் அவதானித்தபடி உள்ளது. சர்வதேச சமூகத்தின் வேண்டுகோள்களையும் சிங்கள அரசு செவிமடுக்கவில்லை. இலங்கைத்தீவில் இனவாத அரசியல்தளம் மேலும் பலமடைவதையே சர்வதேச இராஜதந்திரிகள் காண்கின்றனர்.

சமாதான வழியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் ஒரு அரிய வாய்ப்பை சிங்கள அரசு இழந்து வருகின்றது. சிங்கள அரசின் செயற்பாடுகளும் - இராணுவத்தின் அடாவடித்தனங்களும் தமிழ்மக்களை விரக்திக்குள்ளாக்கி வருகின்றன.

இதேசமயம், மீண்டும் ஒரு போரை சிங்களதேசம் தமிழ்மக்கள் மீது திணித்துவருகின்றது என்ற ஐயப்பாடு தமிழ்மக்களிடம் பலமாகத் தோன்றியுள்ளது. பயனற்ற சமாதானத்தைவிட தன்மானம்காக்கப் போரிடுவது சிறந்தது என்ற மனநிலைக்கு மக்கள் உள்ளாகி வருகின்றனர். ●

இப்போது தமது மூன்றாவது எழுச்சிக் காலகட்டத்துள் ஜே.வி.பியினர் பிரவேசித்துள்ளனர். 1971ம் ஆண்டு காட்டிய அதே முனைப்போடு அதே தமிழ்மக்கள் மீதான காழ்ப்போடும் அன்றும் அப்போதிருந்ததைவிட உறுதியான கட்டமைப்போடும் அதிகரித்த செல்வாக்கோடும் இன்று அவர்கள் செயற்படுகின்றனர். நன்கு வடிவமைக்கப்பட்ட அரசியல் மயப்பட்டும் சில விடயங்களிற்கு மிகச் சரியான நிலைப்பாடோடும் அவர்கள் செயற்படுவதாக மாமனிதர் சிவராம் போன்றோரே கருதுமளவு அவர்கள் தீவிரமாக இன்று இயங்கி சிங்களத்தின் மரபுசார்ந்த கட்சிகளை முடக்கிவிட்டுள்ளனர். எனவே இன்று எழுந்துள்ள கேள்வி **இம்முறையாவது அவர்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவார்களா?** இல்லவே இல்லை. அவர்கள் ஒரு அரசியல் விபத்து. அவர்களைப் பார்த்துக் கலங்கவோ, கற்கவோ என்னவுள்ளது? என கேட்பாருமுள்ளனர். எனவே உண்மை நிலையென்ன? இலக்கை அடைவார்களா? அல்லது ஏலவே இரண்டு தடவை நிகழ்ந்தது போன்று விபரீதத்தினை உருவாக்கப் போகின்றார்களா? வரலாறு சொல்லும் செய்தியென்ன? ஜே.வி.பியின் வரலாற்றினை எழுதியோர் சொல்வதென்ன?






# "...தம்மையே கருவறுக்க தாமே கருக்களைத் தாங்குவோர்" -02

"சிறிலங்கா: ஒரு தோற்ற புரட்சி" என்கிற நூலில் பயங்கரவாதம் அதன் முறியடிப்பு என்கிற மேற்குலகின் மிக விருப்பத்திற்குரிய துறைகளில் ஈடுபட்டு பிரபலமானவரான ரோகன் குணரத்தின ஜே.வி.பியின் 1989ம் ஆண்டு வன்முறைக்காலம் பற்றி இவ்வாறு குறிப்பிடுகின்றார். **"சர்வதேச அளவில் 20ம் நூற்றாண்டின் ஈவு இரக்கமற்ற குழுக்களில் ஜே.வி.பியும் ஒன்று. சிறிலங்காவின் மக்கள் வாழ்விலே முன்னெப்போதுமில்லாத அச்சத்தையும் ஒப்பிட முடியாத ளவு பயங்கரவாதத்தையும் அது செலுத்தியது."** அப்படி என்னதான் ஜே.வி.பி செய்தது என்கிற கேள்விக்கான பதில் மிகுந்த அவலத்தை, கலக்கத்தினை, வெறுப்பினை, அச்சத்தை ஏற்படுத்தவல்லது. **அரசியல் அதிகாரத்தினைக் கைப்பற்ற தடம்புரண்டு தயக்கமின்றி எதனையும் செய்ய ஜே.வி.பி ஆயத்தமாக இருப்பதையும் இருக்கிற அதிகாரத்தைக் காப்பாற்ற எந்த அளவு அரச பயங்கரவாதத்தினையும் பிரயோகிக்க மரபுசார் சிறிலங்கா அரசியலாளர் எவ்விதத் தயக்கமுமின்றிச் செயற்படுவர்** என்பதையும் 1989ம் ஆண்டின் வரலாறு நிரூபித்தது. எமக்கு மீண்டும் நினைவிற்கு வருவது "வரலாற்றின் அதிசயம் என்னவென்றால் அது திரும்பத் திரும்ப நிகழ்வதுதான்" "திரும்பிப்பார். எதிர்காலமென்று ஒன்றில்லை. ஏனெனில் இந்தக் காலமே எதிர்காலமாக உன்முன் வந்து நிற்கின்றது" என்கின்ற கூற்றுக்களே.

எனவே இம்முறை நடக்கப்போவது என்னவென்பதை நாம் இப்போதே உணர்கின்றோம். இத் துன்பியல் நிகழ்வுகள் **சிங்கள மக்கள் மீது இடியாக இறக்கப்போகும் பேரிடர்களை** நினைத்து உண்மையிலே நாம் வேதனைப்படுகின்றோம். இவ் வரலாற்றினை மீளவும் வாசிக்கும்பொழுதும் எழுதும்பொழுதும் **இழக்கப்பட்ட, இழக்கப்படுகின்ற** வாய்ப்புக்களையெண்ணி மேலும் மனத்துயர் அடைகின்றோம். ஏலவே நடந்த கிளர்ச்சிகளின் வடுக்கள் இன்னமும் மாறவில்லை. 1971ம் ஆண்டு ஏப்பிரல் கிளர்ச்சியின் விளைவுகள் 15,000 உயிர்கள் இழக்கப்பட்டதும் இலங்கையின் பொருண்மியம் பின்னடைவைச் சந்தித்ததும் 400மில்லியன் பெறுமதியான அரசாங்க சொத்துக்கள் அழிக்கப்பட்டதும்தான். மூவாயிரத்திற்கு மேற்பட்ட ஜே.வி.பியினர் நீதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபின் 390 பேர்வரை சிறைத் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதில் ரோகண உட்பட ஐவருக்கு ஆயுட்கால தண்டனை வழங்கப்பட்டது. ஆனால் கதை இத்தோடு முடியவில்லை. 1988, 89களில் ஜே.வி.பியினர் செய்த இரண்டாவது கிளர்ச்சியின் விளைவுகள் எண்ணிலடங்காதவை. 1987ம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் நாளாந்தம் சராசரி 10 பேர்வரை கொல்லப்பட்டனர். 1988 டிசம்பரின் பின் அது நாளாந்தம் 100பேர் வரையானது. அரச பயங்கரவாதமும் ஜே.வி.பியினரின் பயங்கரவாதமும் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டு 70-80 ஆயிரத்திற்கும் இடைப்பட்டோர் உயிர்களைப் பறித்ததாகக் கருதப்படுகின்றது. அரசாங்க உடமைக்கேற்பட்ட சேதவிபரமோ மிகப் பாரியவை. 9000மில்லியன் வரை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றினைவிட சோமவன்ச தவிர்ந்த ரோகண, உபதிஸ்ஸகமநாயக்க, கீர்த்தி விஜயபாகு போன்ற அனைத்து ஜே.வி.பியினரின் மத்திய குழு உறுப்பினர்களும் கொல்லப்பட்டனர். இவற்றினைவிட ஜே.வி.பியினரின் இரண்டாவது கிளர்ச்சி விளைவித்த மனவடுக்கள் சிறிலங்கா வரலாற்றின் மிகமிக இருண்ட பக்கங்கள். இரண்டாவது கிளர்ச்சி **தாம் இனி ஒருபோதும் இராணுவ ரீதியாக செயற்பட்டு அரசியலதிகாரத்தைக் கைப்பற்ற முடியாதென்பதையாவது** ஜே.வி.பியினருக்கு உணர்த்தியிருக்க வேண்டும். இத்தனை இழப்பும் ஜே.வி.பியினருக்கு எதனையாவது உணர்த்தியிருக்கின்றதா? எதுவுமேயில்லை. எப்படியாவது அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிவிட வேண்டுமென்பதில் மட்டும் அவர்கள் குறிமேலும் இறுக்கமடைந்ததைத் தவிர. இதற்குக் காரணமென்ன? இதற்கான பதிலை ரோகன் தனது நூலில் தருகின்றார். பொதுவாக சிங்கள அரசியலாளர் குறித்தும் சிறிலங்காவின் எதிர்காலம் குறித்தும் தனது நூலின் முடிவிலே அவர் புகழ்பெற்ற ஐரோப்பிய தத்துவ ஞானியான ஜோர்ஜ் சத்நாயானாவின் (GEROGE SATNAYANA) கூற்றினை மேற்கோள் காட்டுகிறார். **"வரலாற்றின் பாடங்களை மறப்போர் அதன் தவறுகளை மீளவும் செய்வதற்கு சபிக்கப்பட்டிருக்கின்றார்கள்."**

1988, 89ம் ஆண்டு நிகழ்வுகளை இங்கே மீள் நினைவூட்டிப் பார்ப்பதன்மூலம் சிறிலங்காவில் இனிமேல் நடக்கப்போகும் இழுபறியின் உச்சத்தை 2500 ஆண்டு காலமாக வளர்த்தெடுத்த பூதத்திற்கு இவர்கள் யாவரும் இரையாகப்போகும் வினாசத்தை எம் மக்கள் உணர்வர். **அந்தப் பொழுதே தமிழ் பேசும் மக்களின் விடிவின் பொழுது.** சிங்கள அரசியலாளரின் முண்ணான் எலும்பு மையத்திற்குள் பிரவேசித்த சன்னமாக, மூளைக்குள் புகுந்துவிட்ட அகற்றமுடியாத நச்சுக் கிருமியாக தொண்டைக்குள் சிக்கிவிட்ட கூர்முள்ளாக ஜே.வி.பி மாறிவிட்டது. ஆறு வருட சிறைவாசத்தின் பின் 1977 நொவம்பர் 20ம் திகதி சுதந்திர மனிதனாக ரோகண வெளியில் வருகின்றார். எவ்வாறு அவர் வெளியில் வந்தார்? 1977ம் ஆண்டு ஏனைய தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மை பெற்று பதவியேறிய ஜே.ஆர் நிரந்தர மன்னனாக முடிசூட முடிவெடுத்தார். சுதந்திரக் கட்சியை முற்றாக அழிக்க ஜே.வி.பியினரை வெளியில் விடுவதே பொருத்தமென நினைத்து அவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கினார். ரோகணவை வெளியில் விடாதிருந்தால் அவர் இன்னொரு மண்டேலாவாகியிருப்பார் என பகிடிவேறு விட்டார். அவர் எதிர்பார்த்தது நடந்தது: எதிர்பார்க்காததும் நடந்தது. சுதந்திரக் கட்சிபோடு ஜே.வி.பி முழுதாக முரண்பட்டது. அவர் எதிர்பார்த்தது. ஆனால் ஜே.வி.பியினரின் ஏறுமுக வளர்ச்சி அவரால் பொறுக்கமுடியாதது. 1987இல் ஒரு உடன்பாட்டின் பொழுது ஜே.வி.பியோடு மறைமுக உடன்பாட்டிற்கு சுதந்திரக் கட்சியினர் வந்ததும் ஜே.ஆர் முழுத் தோல்வியை இறுதியில் சந்தித்ததும் "கெடுவான் கேடு நினைப்பான்" கதையின் மறுவடிவம்தான்.

அளவிற்கு மீறிய சாணக்கியம் ஜே.ஆரை இறுதியில் அரசியற் சாக்கடைக்குள் தள்ளியது. ஜே.வி.பியினரின் இரண்டாம் கிளர்ச்சிக்கு வழிவகுத்தது. 1983, யூலை 31ம் திகதி ஜே.வி.பியினரை ஜே.ஆர் தடைசெய்தார். அரசாங்கத்தினைக் கவிழ்க்க சதி. யூலைக் கலகத்திற்கு பொறுப்பு என்பது இந்தச் சாட்டு. ஆனால் 1989களில் உண்மையிலே அரசாங்கத்தினை அவர்கள் கவிழ்க்க முயன்றனர். தனது அரசியல் இருப்பிற்காக தான் சார்ந்த சமூகத்தின் நிறைவேறாத கனவுகளின் ஏற்றத்தாழ்வின் வறுமையில் பிள்ளைகளையே பகடையாக அவர் பயன்படுத்த முயன்றமை வரலாற்றின் பாரிய தவறு. இதனை ஜே.ஆர் இறக்கமுன்னர் தன்னிடம் ஏற்றுக்கொண்டதாக ரோகன் கூறுகின்றார். எனவே 1983-87ம் ஆண்டிற் கிடைப்பட்ட காலகட்ட தலைமறை செயற்பாட்டின் வீச்சின் விளைவாக 1987களில் பலம்பெற்ற ஆயுத்த நிலையை ஜே.வி.பியினர் அடைந்தனர். பெருமளவு நிதியை கொள்ளைகள் மூலம் கையகப்படுத்தினர். "உள்வீட்டு உதவியோடு" கனிசமான ஆயுதங்களை சேகரித்தனர். DJV என பிற்காலத்தில் பெரும் அச்சத்தோடு சிங்களவரால் அறியப்பட்ட தேசப்பிரேமி சனதா வியாபாரய (மக்கள் தேசப்பற்று இயக்கம்) தமது இராணுவப் பிரிவினை கட்டியெழுப்பினர். தமக்கும் தமது தந்தையர் தாய்மாருக்கும் சிங்கள முதலாளிய ஆட்சியாளர் செய்த அநீதிகளுக்குப் பழிவாங்க பெருமளவு அச்சமூட்டும் வன்முறை வடிவங்களைக் கைக்கொண்டனர். அச்சமூட்டி செயற்கையாக மக்களைத் தம்பக்கம் சேர்க்கலாமென எண்ணினர். ஜே.வி.பியினரின் போக்கு எப்போதுமே மாறும் நிலைமைகளுக்கேற்ப தமது கருத்தியலை மாற்றி புதிய நெருக்கடிகளைத் தோற்றுவித்து அதன்மூலம் தமது இலக்கை அடைய முயல்வது என்பது இப்போது அவர்கள் பற்றிய ஆய்வுகளின் முடிவு. இதற்கேற்ப தமிழ்மக்கள் மனதுணர்வினை புறம்தள்ளி ஒடுக்கி இறுக்கினர். முற்றிலும் விருப்பமில்லாமல் வேண்டா வெறுப்பாக இல - இந்திய உடன்பாட்டில் கைச்சாத்திட ஜே.ஆரின் இரண்டக கையறு நிலையைப் பயன்படுத்தினர். (இப்பொழுது சந்திரிக்கா அம்மையாரினதும் நிலையுமிதுவே. புலிகளோடு வேண்டாவெறுப்பாக இணைந்து செயற்படுவது பற்றிய கருத்தும் அதனை ஜே.வி.பினர் பயன்படுத்துவதும் பழைய கதைதான்).

இம்முறை இந்திய ஏகாதிபத்திய விரிவாக்க எதிர்ப்புக் கருத்தியலால் புண்பட்ட சிங்கள தேசப்பற்றின் உணர்வுகளை நன்கு கிளறினர். எனவே இந்திய எதிர்ப்புவாதம் + பேரினவாதம் இரண்டையும் சம விகிதத்திற் கலந்து இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்குத் துணைபோகும் "ஏவல் நாய்களுக்கு எதிராக" கிளர்ந்தெழுந்து ஒருவகை ஒத்துழையாமை இயக்கத்தினை நடத்தி 1989 யூலை மாதமளவில் அரசாங்கத்தைக் கவிழ்க்க திட்டம் ஆயத்தமானது. இதற்கான வெளியரங்கம், ஊடரங்கு, கடையடைப்பு, அரசாங்க நிருவாகச் செயலிழப்பு, அச்சமூட்டும் வன்முறைவடிவப் பிரயோகம் என விரிந்தது. இவ்வாறாக 1989களில் இன்னொரு அரசாங்கமாக ஜே.வி.பி மாறியது. தமது இறுதிக்கட்ட நடவடிக்கையாக பாதுகாப்புப் படையினரை குறிப்பிட்ட திகதிக்குள் (1989 ஆகஸ்ட் 20) பதவி விலகுமாறு இறுதியறிவித்தல் கொடுக்கப்பட்டது. இதனை மீறுவோர் தண்டிக்கப்படுவர் என்கிற அவர்கள் அச்சுறுத்தல் நடைமுறையில் இராணுவத்தினரின் உறவுகளை கொல்லுமளவிற்குச் சென்றது.

ஆனால் ஜே.வி.பியினர் எதிர்பார்த்தது இம்முறையும் நடக்கவேயில்லை. மாறாக நடந்ததென்ன? 1989 நவம்பர் 12ம் திகதி உலப்பனை தோட்டவீட்டில் மறைந்திருந்த ரோகண கைதாகி மறுநாள் கொல்லப்பட்டார். அதனைத் தொடர்ந்து சோமவன்ச தவிர்ந்த மத்திய குழுவினர் யாவரும் கொல்லப்படுகின்றனர். மீண்டும் நிறைவேறாத கனவுகளுக்காக செயற்கையான கிளர்ச்சி நிலையைத் தோற்றுவிக்க அச்சமூட்டி அணிதிரட்டிய சிங்களத்தின் புதல்வர்கள் தம் குருதியால் தம் தேசத்தைக் கழுவினர். ஆயினும் நிறைவேறாத புரட்சியின் கனவுகள் அவர்கள் கண்களிலே இறந்த பின்னும் ஒளிர்கின்றது. எனவே இவர்கள் கொள்கை மூன்றாவது புரட்சியை (?) நடத்த சோமவன்ச மட்டும் இரண்டாம் தடவையும்

(தொடர்ச்சி 14ம் பக்கத்தில்)

**அரசியல் அதிகாரத்தினைக் கைப்பற்ற தடம்புரண்டு தயக்கமின்றி எதனையும் செய்ய ஜே.வி.பி ஆயத்தமாக இருப்பதையும் இருக்கிற அதிகாரத்தை காப்பாற்ற எந்த அளவு அரச பயங்கரவாதத்தினையும் பிரயோகிக்க மரபுசார் சிறிலங்கா அரசியலாளர் எவ்வித தயக்கமுமின்றி செயற்படுவர் என்பதையும் 1989ம் ஆண்டின் வரலாறு நிரூபித்தது. எமக்கு மீண்டும் நினைவிற்கு வருவது ''வரலாற்றின் அதிசயம் என்னவென்றால் அது திரும்பத் திரும்ப நிகழ்வதுதான்''.**

**- க.வே.பாலகுமாரன் -**

# அமைதியை நோக்கிய சூடானின் பயணம்

## - ஒரு மீள்பார்வை -

நிம்மதிப் பெருமூச்சை சூடான்மக்கள் விடத்தொடங்கியிருக்கிறார்கள். ஆபிரிக்காவிலேயே மிகப்பெரிய நாடு சூடான்தான். 4000 மைல்கள் அலைந்துகொண்டு வரும் நைல் நதியால் அதன் நிலப்பரப்புக்கள் வளம் கொழிக்கின்றன. தென்சூடானில் 'கறுப்புத் தங்கம்' அதாவது எண்ணெய்வளம் உள்ளது. மனித நாகரீகத்தின் தொட்டில் என்று வர்ணிக்கப்படுவதற்கு இயூபறேற்ஸைவிட சூடானே மிகப் பொருத்தமானது எனக்கூறும் அளவுக்கு புராதனமான வரலாற்றைக் கொண்டது. சூடானினுடைய வரலாறு எவ்வளவுக்குப் புராதனமானதோ அந்த அளவுக்கு அதன் துன்பங்களும் புராதனமானவைதான்.

17ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வடக்கே எகிப்திலிருந்து வந்த அரபு முஸ்லிம்கள் சூடானைக் கைப்பற்றிக் கொண்டார்கள். அதற்கு முன்பே கிறிஸ்தவ சமயம் சூடானில் பரவியிருந்தது. பல ஆதிவாசி அரசுகள் இப்படி கிறிஸ்தவ சமயத்திற்கு மாற்றப்பட்டிருந்தன.

**"தென்சூடான் கொள்கையைக் கைவிட்ட பிரித்தானியர்கள்" இரு சூடான்களையும் அரபு மேலாண்மைக் காட்டூம் அரசிடம் கையளிப்பதை அரசியல் தற்கொலைக்கு ஒப்பானது என்று தெரிந்துகொண்டே செய்ததன்மூலம் தெற்கு மக்களின் முதுகில் குத்தினார்கள். சுதந்திரம் கிடைத்ததைத் தொடர்ந்து சமஷ்டி அரசு அமைப்பதான வாக்குறுதியை காட்டூம் அரசு காற்றில் பறக்கவிட்டது. இதை எதிர்த்தே SPLMஇன் போராட்டம் ஆரம்பமானது.**

வடக்கே காட்டூமைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்த முஸ்லிம் பெரும்பான்மை அரசுகள் தெற்கை அடிமை நாடாகவே பார்த்தன. அடிமைகளை பிடிக்கும் களமாகவே பார்த்தன.

18ம் நூற்றாண்டின் இறுதி வருடங்களில் பிரித்தானியா காட்டூமைக் கைப்பற்றியது. 1899ம் ஆண்டில் சூடானை கூட்டாக ஆட்சி செய்வதற்கென பிரித்தானியாவும் எகிப்தும் செய்துகொண்ட ஒப்பந்தம் சூடான் தேசியவாதிகளின் கடும் எதிர்ப்புக்குள்ளானது.

1945ம் ஆண்டளவில் எகிப்தோடு சூடான் இணையவேண்டும் என்று கோரும் தேசிய ஒருமைப்பாட்டுக் கட்சியும் (NUP) நிபந்தனையற்ற சுதந்திரத்தைக் கோரும் உம்மா கட்சி (UP) சூடானில் உருவாகியிருந்தன.

அரபு முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட வடசூடானில் 22 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். ஆபிரிக்க கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக வாழும் தென்சூடானில் 8 மில்லியன் மக்கள் உள்ளனர்.

பிரித்தானிய ஏகாதிபத்தியம் வடக்கு, தெற்குச் சூடான்களை **வேறுவேறாகவே** ஆண்டுவந்தது. அவர்களது வசைப்புகழ் பெற்ற 1920ம் ஆண்டின் ''மூடப்பட்ட மாவட்ட'' ஆட்சிமுறையின் கீழ் தென்சூடான் மக்கள் வடசூடானோடு எந்தத் தொடர்புமற்று நுகர்வோராக இருக்க ஊக்கப்படுத்தப்பட்டார்கள். இந்த மக்கள் பிரித்தானிய கிழக்காபிரிக்காவிலேயே தங்கள் உயர் கல்வியைப் பெற்றார்கள். வட, தென் சூடான்களிடையேயான பயணத்துக்கு கடவுச்சீட்டுக்கள் அவசியமாக இருக்கும் அளவுக்கு இந்த'பிரிதாளும் கொள்கை' நடைமுறைப் படுத்தப்பட்டது. சூடானுக்கு சுதந்திரம் வழங்க முன்னதாக தென்சூடானை என்ன செய்வது என்ற பிரச்சினை பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் முன் எழுந்தது. அதற்கு சூடானில் நிலவிய பல்பரிமாண முரண்பாடுகளே காரணமாய் அமைந்தன.

(01) உண்மையைச் சொல்லப்போனால் வட சூடானில் வாழும் அரபு முஸ்லிம்களிடையே முரண்பாடுகள் உள்ளன. உதாரணமாக NUPக்கும் UPக்கும் இடையேயான முரண்பாடுகள் உள்ளன.

(02) தெற்கில் வாழும் ஆபிரிக்க கிறிஸ்தவர்களிடையே முரண்பாடுகள் இருக்கின்றன. எனினும் இந்த வேறுபாடுகள் முக்கியத்துவம் பெறாத அளவுக்கு காட்டூமின் அரபு மேலாண்மை அரசுக்கு எதிராக தெற்கின் SPLM இயக்கம் மேஜர் ஜெனரல் ஜோண் கறாஸ் தலைமையில் நடத்திய போராட்டம் அமைந்தது. இந்தப் போராட்டத்தை ஒடுக்கும் அரசின் முயற்சியில் 1983-1995 காலப் பகுதியில் மட்டும் 1.6 மில்லியன் தென்சூடான் மக்கள் கொன்றழிக்கப்பட்டனர். தென் சூடானின் வளங்களை முடிந்தளவு சுரண்டுவதற்குக் காட்டூம் அரசு முழுமுயற்சி செய்கிறது.

(03) சூடானிய இராணுவத்தின் முதுநிலை அதிகாரிகளான கபிரியல் தஸ்கின்யா (GAB-RIEL TANGINYA) போளினோ மாற்றிப் (PAULINO MATIB) ஆகிய இருவரும் மேல் நைல்நதிப் பிராந்தியங்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார்கள். இவர்கள் இருவருமே SPLNமீது வெறுப்புக் கொண்டவர்கள் என்பது வெளிப்படையான விடயம்.

(04) சஹாரா பாலைவனம் தங்கள் மேய்ச்சல் நிலங் களைக் காவுகொண்டதைத் தொடர்ந்து சூடானின் மேற்குப் பிராந்தியமான டார்பருக்குள் புலம்பெயர்ந்த அரபு நாடோடிகளுக்கும் அந்த மண்ணின் மைந்தர்களான ஆபிரிக்கர்களுக்கும் இடையேயான முரண்பாடுகள் உள்ளன. இந்த முரண்பாட்டைத் தீர்க்கும் வழியாக காட்டூம் அரசு ஜஞ்ஞாவிட் துணை இராணுவப் படையைப் பயன்படுத்தியதில் ஏற்பட்ட வன்முறைகளில் 400,000 மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இதில் ஆகக் குறைந்தது 150,000 பேராவது காட்டூம் அரசு ஆதரவிலான ஜஞ்ஞாவிட்களால் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அல்லது காணாமற் போயிருக்கிறார்கள். வல்லுறவுக் கொடுமைகளுக்கு பல ஆயிரம் பெண்கள் உட்படுத்தப் பட்டிருக்கிறார்கள். வல்லுறவு என்பது மக்களின் உளவுரணை உடைப்பதற்கான ஒரு போராயுதமாகவே அங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தங்கள் வாழ்விடங்களில் இருந்து துரத்தியடிக்கப்பட்டு பல நூறாயிரக் கணக்கானவர்கள் இடம்பெயர அவர்களின் வாழ்விடங்களை ஜஞ்ஞாவிட்கள் பறித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக அவர்களது 'கலாச்சாரம் சேதப்பட்டிருக்கிறது' என்று வோஷிங்ரனில் இருந்து செயற்படும் நீதிக்கான சர்வதேச இயக்கம் (INTERNATIONAL JUSTICE) கூறியுள்ளது.




(04) இவை எவற்றுள்ளும் சேராமல் மத்திய சூடான் பகுதிகளிலும் பதட்டம் நிலவுகிறது.

பிரித்தானியர் சூடானுக்குச் சுதந்திரம் வழங்கிய 1956ம் ஆண்டு காலப்பகுதியில் தெற்கில் அரசியற் கட்சிகள் எதுவும் உருவாகியிருக்காத்தைச் சாட்டாக வைத்து சுயநிர்ணயச் செயற்பாட்டில் தெற்கு மக்கள் புறக்கணிக்கப்பட்டனர்

'தென் சூடான் கொள்கையைக் கைவிட்ட பிரித்தானியர்கள்' இரு சூடான்களையும் அரபு மேலாண்மைக் காட்டூம் அரசிடம் கையளிப்பதை அரசியல் தற்கொலைக்கு ஒப்பானது என்று தெரிந்து கொண்டே செய்ததன்மூலம் தெற்கு மக்களின் முதுகில் குத்தினார்கள். சுதந்திரம் கிடைத்ததைத் தொடர்ந்து சமஷ்டி அரசு அமைப்பதான வாக்குறுதியை காட்டூம் அரசு காற்றில் பறக்கவிட்டது. இதை எதிர்த்தே SPLMஇன் போராட்டம் ஆரம்பமானது.


1991இல் இருந்து அண்ணள வாக இரண்டு வருடங்களுக்கொருமுறை என இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து 2002, யூலையில் மக்காகொஸ் ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டன.

இந்த 7 அம்ச ஏற்பாடுகளில் முக்கியமான அம்சங்களாக, தென்சூடானுக்கு 6 வருட இடைக்கால சுயாட்சியை வழங்குவதும் ஆறுவருட முடிவில் காட்டூம் அரசினால் தொடர்ந்து ஆளப்படுவதா அல்லது பிரிந்து செல்வதா? என்று தென்சூடான் மக்களிடையே கருத்துக்கணிப்பு இடம் பெறும் என்பதும் இருக்கின்றன.

பேசித் தீர்மானிக்க வேண்டிய விடயங்களில் முக்கியமானவையாக வளப் பகிர்வும் அதிகாரப் பகிர்வும் எப்படி அமைய வேண்டும் என்பது இருக்கின்றது.

2002 வரையான சூடான் மற்றும் டார்பர் பிரச்சினைகள் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 'விடுதலைப் புலிகள்' இதழின் தை, 2004 இதழிலுள்ள "ஆக்கிரமிப்பிலிருந்து மீளும் தென்சூடான்" மற்றும் ஆவணி, 2004 இதழிலுள்ள "சர்வதேச மயமாகும் டார்பர் பிரச்சினை" ஆகிய கட்டுரைகளைப் பார்க்கவும்.

மக்காகொஸ் ஏற்பாடுகளைத் தொடர்ந்து 30 மாதங்களாக இடம்பெற்ற



பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து 2005, ஜனவரி 9ஆம் திகதி ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் தென்புலத்தவர்கட்கு பெரும் வெற்றி என்று ஆய்வாளர்கள் வர்ணித்திருக்கின்றார்கள். இந்த ஒப்பந்தம் பல்வேறு விதங்களில் ஒரு வரலாற்றுச் சாதனையாகக் கருதப்படுகிறது.

* முதலாவதாக, ஆபிரிக்காவின் மிக நீண்ட போரை அது முடிவுக்குக் கொண்டுவந்திருக்கிறது. 1983இல் அடிஸ் அபாபாவில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தைக் காட்டூம் அரசு ஒருதலைப்பட்சமாகக் கைவிட்டதால் தூண்டிவிடப்பட்டதாக இந்த நீண்டபோர் இருக்கிறது.

* இரண்டாவதாக, தென்சூடானியர்களின் உண்மையான துன்பங்களுக்குத் தீர்வு காண்பதன்மூலம் முரண்பாட்டை நியாயமான முறையில் தீர்ப்பதற்கு அது வழிவகுத்திருக்கிறது.

* மூன்றாவதாக, கடந்த 15வருட காலமாக நாட்டை ஆட்சிசெய்யும் சர்வாதிகாரப் போக்கான ஆட்சிமுறைக்கு படிப்படியாக முடிவு கட்டும் விதத்தில் ஆட்சித்துறையில் உணரப் படக்கூடிய சனநாயக ரீதியான மாற்றங்களை அது எதிர்வு கூறியிருக்கிறது. சூடானை மீள் கட்டமைப்புச் செய்வதற்கான ஒரு ஆரம்பப் புள்ளியாக அது அமைகிறதெனினும் மாற்றத்துக்கான ஊக்கியாகவும் அது காணப்படுகிறது.

இந்த ஒப்பந்தமானது முன்னெப் போதுமில்லாத அளவுக்கு தென்புலத்தின்மீது பிரமாண்டமான அதிகாரங்களை SPLAற்கு வழங்குகிறது. இதற்கு அந்த அமைப்பு தனது ஒருமைப்பாட்டைப் பேணுவதோடு தன்னை ஒரு அரசியல் கட்சியாக மாற்றிக் கொண்டு சனநாயக ஆட்சிமுறை பற்றியும் கற்றுக்கொள்ள வேண்டும்.

டிங்கா இனத்தவர்கள் மேலாண்மை கொண்டுள்ள SPLA ஆனது சூடானிய இராணுவத்தோடு சமாந்தரமாகச் செயற்படும் என்பதோடு ஏனைய துணைப்படைகள் மற்றும் ஆயுதம் தாங்கிய இயக்கங்கள் முதலியவை காட்டூமில் தேசிய அரசு ஏற்படுத்தப் பட்டு 12 மாதங்களினுள் ஒன்றில் SPLAயுடன் அல்லது சூடானிய இராணுவத்துடன் இணைந்துகொள்ள வேண்டும்.

இந்த ஒப்பந்தப்படி காட்டூம் அரசும் SPLMஉம் எண்ணெய்வள வருமானத்தை 50:50 அடிப்படையில் பகிர்ந்துகொள்வார்கள். தேசிய ஒருமைப்பாட்டு அரசு காட்டூமில் உருவாக்கப்பட்டதும் தொடங்கும் இடைக்

(தொடர்ச்சி 13ஆம் பக்கத்தில்)

- வி.அருளாளன் -

# மூன்றுவருட போர்நிறுத்த ஒப்பந்தம் சாதித்தது என்ன!




சிங்கள அரசிற்கும் - புலிகள் இயக்கத்திற்குமிடையே போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி மூன்று ஆண்டுகள் முடிவடைந்துள்ளன. தமிழ்மக்களைப் பொறுத்தவகையில் இந்த மூன்று ஆண்டுகளும் பொறுமையுடனும் விரக்தியுடனும் செலவாகியுள்ளன. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதில் சிங்கள அரசு காட்டிய சிரத்தையை அதை அமுல்படுத்துவதில் காட்டவில்லை.

160 நாள் வேலைத்திட்டத்தை உடன்பாடு உள்ளடக்கியிருந்தது. போக்குவரத்துத்தடை நீக்கப்படுவது, பொருளாதாரத் தடைகள் அகற்றப்படுவது, இராணுவ பிரசன்னம் குறைக்கப்படுவது அரசியல்தீர்வு எட்டப்படுவது என்று தீர்க்கமான வேலைத் திட்டங்களை அது உள்ளடக்கியிருந்தது.

போக்குவரத்துத்தடை நீக்கம், பொருளாதாரத்தடை நீக்கம் என்பன சிங்கள அரசின் நலனுடன் சம்பந்தப்பட்டிருந்தது. எனவே அவற்றை நடைமுறைப்படுத்துவதில் அதற்குச் சிரமம் இருக்கவில்லை. மீன்பிடித்தலுக்கு இன்னமும் கட்டுப்பாடும் - தொல்லைகளும் இருக்கின்றன.

ஆனால் மக்கள் குடியிருப்புக்கள், ஆலயங்கள், பாடசாலைகள், பொதுக் கட்டடங்களில் நிலைகொண்டுள்ள படையினரை விலக்கிக்கொள்வது மற்றும் அரசியல்தீர்வு காண்பது என்ற விடயங்களில் அளித்த வாக்குறுதிகளை சிங்கள அரசு நிறைவேற்றவில்லை.

தற்போதைய போர்நிறுத்த உடன்பாடு உட்பட சிங்கள அரசுடனான எந்தவொரு உடன்பாடும் சர்வதேச கண்காணிப்பின் கீழ் நடைபெறவேண்டும் என்பது புலிகளின் அரசியல் நிலைப்பாடாகும். பேச்சுவார்த்தை என்ற போர்வையில் சிங்கள அரசு நடாத்த முனையும் சதி அரசியலை சர்வதேச சமூகத்திற்கு அம்பலமாக்கவே புலிகள் இயக்கம் இத்தகையதொரு நிலைப்பாட்டிற்கு வந்திருந்தது. புலிகள் கணித்தது போலவே அரசியல் ரீதியாக சிங்கள அரசு இன்று அம்பலமாகி வருகின்றது.

சமாதான முயற்சிக்கு குறுக்கே நின்று இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்கு முட்டுக்கட்டை போடுவது புலிகள்

**- எல்லாளன் -**

இயக்கம்தான் என்று சிங்கள அரசு செய்து வந்த பிரச்சாரம் இன்று அடியோடு அற்றுப் போகும் நிலை உருவாகிவருகின்றது. இனப்பிரச்சினை தொடர்பில் என்றுமில்லாத வகையில் சர்வதேச அழுத்தத்திற்கு சிங்கள அரசே உள்ளாகிவருகின்றது. இருந்தாலும் தமிழரின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றி அவர்களின் ஜனநாயக உரிமைகளை வழங்குவதில் சிங்கள அரசு தொடர்ந்தும் மறுத்து வருகின்றது.

போர்நிறுத்த உடன்பாட்டின் அடிப்படையில் சிங்கள அரசிற்கும் - புலிகள் இயக்கத்திற்கும் இடையில் ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. ஒவ்வொரு சுற்று அமர்வின்போதும் ஒவ்வொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. ஆயினும் எவையும் நடைமுறை வடிவம் பெறவில்லை. படைத்தரப்பின் ஒத்துழையாமை பேரினவாத சக்திகளின் எதிர்ப்பு என்று அவற்றிற்கு சிங்கள அரசு காரணங்கள் கூறியது. உண்மையில் தான் ஒப்புக்கொண்டபடி செயற்படச் சிங்கள அரசே மறுத்துவருகின்றது என்பதே மெய்யாகும். இந்தவகையில் ஆறுசுற்றுப் பேச்சுக்களும் அர்த்தமற்றுப் போய்விட்டன.

பேச்சு முறிவடையப் போகின்றது - அதற்கு சிங்கள அரசையே சர்வதேச சமூகம் குற்றம்சாட்டப் போகின்றது என்ற ஒரு கட்டத்தில் உபகுழுக்கள் என்றதொரு தீர்மானத்தை அரசு முன்மொழிந்து சர்வதேச சமூகத்தின் கவனத்தைத் திருப்பியது. மக்களை மீளக்குடியமர்த்த ஒரு உபகுழு, இராணுவப் பிரசன்னத்தைக் குறைக்க ஒரு உபகுழு, பொருண்மிய அபிவிருத்திக்கு ஒரு உபகுழு, அரசியல் தீர்வுதேட ஒரு உபகுழு என்று வெற்று ஆவணங்களை சிங்கள அரசு வரைந்து தள்ளியது.

எனினும் எந்த ஒரு உபகுழுவும் செயற்பாட்டுக் கட்டத்திற்கு வரவேயில்லை. வடக்கு - கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு விடயங்களுக்கு “சிரான்” என்றதொரு கட்டமைப்பை நிறுவிய சிங்கள அரசு கொழும்பில் ஒரு அலுவலகத்தையும் திறந்திருந்தது. அதுவும் செயற்படாமலே செத்துப்போனது. இவைபற்றி சிங்கள அரசு கூச்சப்பட்டதாகவே தெரியவில்லை.

புலிகள் இயக்கத்தை உடன்பாடு வாயிலாக சமபங்காளிகளாக ஏற்றுக் கொண்டே போர்நிறுத்த ஒப்பந்தத்தை வரைந்தது. ஆனால் போரால் சிதைந்த இலங்கைத்தீவை புனரமைத்து அபிவிருத்தி செய்யும் இலக்குடன் உதவி வழங்கும் நாடுகள் கூட்டிய வாஷிங்டன் மற்றும் டோக்கியோ மாநாடுகளுக்கு புலிகளையும் அழைத்துச் செல்ல சிங்கள அரசு தவறிவிட்டது. தனியே சென்று பங்குபற்றியது. சிங்கள அரசின் இந்த ஏமாற்று அரசியலை புலிகள் கடுமையாக ஆட்சேபித்தனர். இறுதியில் இலங்கைக்கு உதவுவதாக வாக்களிக்கப்பட்ட அந்த பெரும் நிதியும் முடங்கிப்போனது.

தமிழர் தேசியத்திற்கு எதிராக தமிழ்க் குழுக்களைப் பயன்படுத்தி சமாதான முயற்சிகளைக் குழப்புவது சிங்கள அரசின் வழமை. இதை கருத்திற்கொண்டு சமாதானத்தின் ஆயுளை உறுதிப்படுத்தும் நல்லெண்ணத்துடன் தமிழ்க் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு தமிழர் தாயகத்திற்கு வெளியே அவை அப்புறப் படுத்தப்பட வேண்டும் என்று புலிகள் விரும்பியதை உடன்பாட்டில் இணைத்து சிங்கள அரசும் ஏற்றுக்கொண்டது.

ஆனால் அதையும் சரியாக அமுல்படுத்த அரசு முனையவில்லை. அமுல்படுத்தாதது மட்டுமல்ல புதிய தமிழ்க்குழு ஒன்றையும் உருவாக்கி - அதற்கு ஆயுதங்கள் வழங்கி புலிகள் இயக்கத்திற்கு எதிராக ஒரு நிழல் யுத்தத்தையும் அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளது. இந்த அரச வன்முறைகளுக்குப் பல போராளிகளும் தேசப்பற்றாளர்களும் ஊடகவியலாளர்களும் பலியாகியுள்ளனர்.

கிழக்குமாகாணத்தைப் பொறுத்த வகையில் போர்நிறுத்த ஒப்பந்த விதிகளை சிங்கள அரசு சிறிதும் கடைப்பிடிக்க வில்லை. புலிகளை மீண்டும் போருக்கு இழுக்கும் ஒரு சதிக்களமாகவே கிழக்கு மாகாணத்தை அரசு பயன்படுத்துகிறது. அங்கே போராளிகளைப் படுகொலை செய்தல், மக்களைக் கொல்லுதல், தேசப் பற்றாளர்களை அழித்தல் என்று ஒரு கொலை அரசியலை நடாத்தி வருகின்றது.

காஞ்சூரன்குடா படுகொலை (9பேர் சாவு), திருமலைப் படுகொலை (3பேர் சாவு), அண்மையில் மட்டக்களப்பு சந்திவெளியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூடுகள் என்று சமாதானப் படுகொலைகளைச் சிங்களப் படைகள் அங்கே நிகழ்த்தியுள்ளன. அண்மைக் காலமாக போக்குவரத்துத் தடைகளையும், சில பொருட்களுக்கான தடைகளையும் விதித்து படையினர் நடைமுறைப்படுத்தி வருகின்றனர். இராணுவ கட்டுப்பாட்டுக்குள் உள்ள புலிகளின் அரசியல் அலுவலகங்கள் மீதும் ஆயுதத் தாக்குதல்களை அவை தொடர்ச்சியாக நடாத்திவருகின்றன. தமிழ் - முஸ்லீம் உறவைச் சீர்குலைக்கும் வகையில் திட்டமிட்ட கொலைகளையும் படையினர் செய்கின்றனர். சில தமிழ்க்குழு உறுப்பினர்களை வீதிச் சோதனைச்சாவடிகளில்

**காஞ்சூரன்குடா படுகொலை (9பேர் சாவு), திருமலைப் படுகொலை (3பேர் சாவு), அண்மையில் மட்டக்களப்பு சந்திவெளியில் மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடுகள் என்று சமாதானப் படுகொலைகளை சிங்களப் படைகள் அங்கே நிகழ்த்தியுள்ளன. அண்மைக் காலமாக போக்குவரத்துத் தடைகளையும் சில பொருட்களுக்கான தடைகளையும் விதித்து படையினர் நடைமுறைப்படுத்தி வருகின்றனர். தமிழ் – முஸ்லீம் உறவைச் சீர்குலைக்கும் வகையில் திட்டமிட்ட கொலைகளையும் படையினர் செய்கின்றனர். சில தமிழ்க்குழு உறுப்பினர்களை வீதிச் சோதனைச்சாவடிகளில் பகிரங்கமாகவே நிறுத்தி மக்களை அச்சுறுத்தி ஒப்பந்த விதிகளை அப்பட்டமாக மீறிவருகின்றன.**

பகிரங்கமாகவே நிறுத்தி மக்களை அச்சுறுத்தி ஒப்பந்த விதிகளை அப்பட்டமாக மீறி வருகின்றன.

அரசியல்தீர்வு என்ற விடயத்தில் அதன் ஆரம்ப கட்டத்திற்குள் நுழைவதையே சிங்கள அரசு விரும்பவில்லை. தீர்வுத்திட்டம் என்ற பெயரில் சிங்கள அரசு சமர்ப்பித்த திட்டங்கள் தமிழர் தேசியத்தைச் சிதைப்பதையே குறியாகக் கொண்டுள்ளன. போர் இல்லாமல் - அமைதிவழியில் சிங்கள மேலாண்மைக்குள் தமிழ்மக்களைக் கொண்டுவரும் அரசியல் சதிகளாகவே அந்தத் தீர்வுத்திட்டங்கள் அமைந்துள்ளன.

இவற்றையெல்லாம், புலிகள் இயக்கம் அடியோடு நிராகரித்தபோது புலிகள் இயக்கம் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்மொழியவேண்டும் என்று சர்வதேச சமூகம் எதிர்பார்த்தது. அதற்கமைய தமிழ் அறிஞர்கள் சர்வதேச சட்டவல்லுனர்கள் துணையுடன் ஒரு அரசியல் திட்டத்தை புலிகள் முன்வைத்தனர். இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை என்று பெயர் சூட்டி புலிகள் இயக்கம் முன்வைத்த தீர்வுத்திட்டத்தை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டது.

ஆனால் சிங்களதேசம் அதை ஒட்டுமொத்தமாக நிராகரித்தது. சிங்களத்தின் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. சந்திரிக்கா அம்மையார் தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணியும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

இலங்கைத் தீவின் இறையாண்மைக்குக் குறுக்கே நிற்காது, அதேசமயம் தமிழரின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற முனையும் அந்த மாதிரி அரசியல் வரைபை சிங்களதேசம் நிராகரித்த விதம் சர்வதேச சமூகத்தை விசனத்திற்குள்ளாக்கி விட்டது

அமைதி வழிமுறையில் தமிழ் - சிங்கள தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதேடும் நோக்குடன் உருவாக்கப்பட்ட போர்நிறுத்த உடன்பாடு இவ்விதம் செயலற்ற தன்மையுடன் நகர்ந்தது. காலம் கழிவதை புலிகள் இயக்கம் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அது இன்றுவரை பொறுமைகாத்து வருகின்றது. சிங்கள அரசுக்கு மேலும் மேலும் சந்தர்ப்பங்கள் வழங்கும் நோக்குடன் அடுத்தடுத்து விட்டுக்கொடுப்புக்களைச் செய்து பல ஆலோசனைகளையும் புலிகள் முன் வைத்து வருகின்றனர்.

ஆயினும் தனது கடும் போக்கிலிருந்து இனவாத சிந்தனையிலிருந்து சிங்கள அரசு விடுபடுவதாகத் தெரியவில்லை.

இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் மூன்றாந் தரப்பாக இருந்துகொண்டு சமாதானப் பேச்சுக்களுக்கு மத்தியத்துவராகச் செயற்பட்டுவரும் நோர்வே அரசின் பிரதிநிதிகள் பலதடவைகள் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து கலந்துரையாடி கருத்துப் பரிமாற்றங்கள் செய்துள்ளனர்.

சிங்கள அரசு ஒப்பந்த மீறல்களைச் செய்து கடலிலும் - தரையிலும் புலிகள் இயக்கத்திற்குப் பல உயிர் இழப்புக்களை ஏற்படுத்தி வருகின்றபோதும் சமாதான முயற்சிகளை அர்த்தமுள்ளதாக மாற்றச் செய்வதில் தலைவர் பிரபாகரன் காட்டும் அக்கறையை விட்டுக் கொடுப்புக்களை நோர்வே தரப்பு புகழ்ந்துரைத்து வருகின்றது. சமாதான முயற்சிகளின் தற்போதைய தேக்கநிலைக்கு புலிகளை எவரும் குற்றம் சாட்டவில்லை. மாறாக சிங்கள அரசையே அவை குறைகூறி வருகின்றன. இதனால் மேற்குலக நாடுகள் மீது சிங்களப் பேரினவாதிகள் வசைமாரி பொழியத் தொடங்கியுள்ளன.

முற்றிலும் மனிதாபிமான சேவைகளை நோக்காகக் கொண்ட சுனாமி அனர்த்த பொதுக் கட்டமைப்பையே ஏற்றுக் கொள்ளாது முரண்டுபிடிக்கும் சிங்கள அரசு எவ்வாறு தமிழருக்கான ஒரு அரசியல் நிர்வாக அலகு தொடர்பாக பேசப்படுகின்றது என்பதே இன்றைய கேள்வியாகும்.

இந்தக் கேள்வி இதுவரை காலமும் தமிழர் தரப்பையே வாட்டிவந்தது. இப்போது முதற் தடவையாக இக்கேள்வி சர்வதேச சமூகத்தையும் வாட்டத்தொடங்கி விட்டது.

# சர்வதேச சமூகத்தை சந்திரிக்கா ஏமாற்ற முயல்கிறார் யதார்த்தம் பொறுமையை கேள்விக் குறியாக்கி விட்டது

**- சாரணன் -**

"**ஆயுதப்** போராட்டத்தைக் கைவிட்டு ஜனநாயக வழிமுறைக்குத் திரும்பவும்."

"ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு அரசியல் நீரோட்டத்திற் கலக்கவும்."

இப்படிக் கருத்துக்கள், கோரிக்கைகள், வேண்டுகோள்கள் முன்வைக்கப்படுவதை நாம் காண்கிறோம். இவற்றை நாம் கோட்பாட்டு ரீதியாகப் பரிசீலிக்கவேண்டியது அவசியம்.

தமது நல்வாழ்விற்கும் வளர்ச்சிக்குமாக சிங்கள மேலாதிக்கத்திலிருந்து தாம் விடுபட்டுச் சுதந்திரமாக வாழவேண்டுமென ஈழத் தமிழ்மக்கள் தீர்மானித்துவிட்டால், அத்தீர்மானத்தின்பால் செயற்படத் துணிந்துவிட்டால் அத்தகைய தீர்மானமும் அத்தீர்மானத்திற்கான செயற்பாடுகளும் ஜனநாயக வழிமுறையே ஆகும்.

1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது ஈழத்தமிழர் தாம் பிரிந்துசெல்வதற்கான தீர்மானத்தை அத்தேர்தல் மூலம் தெளிவாக்கினர்.

தமிழ்மக்களுக்கு எதிரான அரசியல் யாப்புக்களும், சட்டதிட்டங்களும், அவற்றின்பாலான பொலிஸ், இராணுவ ஒடுக்குமுறைகளுமே தமிழரை வேறுவழியின்றிப் பிரிந்துசெல்லுமாறு நிர்ப்பந்தித்தன.

தமிழ்பேசும் மக்கள் பொறுத்து, முதலாவது அர்த்தத்தில் இலங்கையின் அரசியல் யாப்பு ஜனநாயக விரோதமானது. இலங்கையின் மொத்த சனத்தொகையில் சிங்கள மக்கள் 2/3 பங்கிற்கு மேலுள்ளனர். தமிழ்பேசும் மக்களை விடவும் தாம் எண்ணிக்கையில் அதிகமானவர்கள் என்ற ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு தமிழ்பேசும் மக்கள் அனைவரையும் கடலிற்குள் தள்ளுமாறு நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றிவிட்டால் அது ஜனநாயகமாகாது. இந்த வகையில் தமிழ்மக்களுக்குரிய தேசிய இன உரிமையை மீறி அதற்கு எதிராக நாடாளுமன்றத்தில் யாப்பை நிறைவேற்றுவது, சட்டங்களை நிறைவேற்றுவது என்பதெல்லாம் ஜனநாயக விரோதமானவைகளேயாகும்.

தமிழ்பேசும் மக்களுக்கு எதிரான யாப்பின் விதிகளை நாடாளுமன்றத்தின் 2/3 பெரும்பான்மைப் பலம், விகிதாசார வாக்குமுறை, பொதுஜன வாக்கெடுப்பு, ஜனாதிபதியின் அதிகாரங்கள் என்ற அனைத்து வகைகளினாலும் நெகிழ்ச்சியற்ற முறையில் வலுக் கெட்டியாக்கியுள்ளனர்.

இந்தவகையில் யாப்பு, மாற்றங்களைச் செய்ய இயலாத வகையில் ஜனநாயக விரோதம் மிக்கதாய் அமைக்கப்பட்டுள்ளது. இந்த யாப்பை பாதுகாக்கின்ற பாதுகாவலர்களே பொலிசாரும், இராணுவத்தினரும். ஆதலால் அமைதிவழியில் இந்த யாப்பை மாற்றுவதற்கு இடமில்லை என்பதால் ஆயுதம் தாங்கிய சிங்கள யாப்பின் ஒடுக்குமுறைக்கு எதிராக ஆயுதம் தாங்கிப் போராடவேண்டியது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. அத்தகைய கட்டத்திற்தான் ஆயுதப்போராட்டம் எழுந்தது. இலங்கையின் காட்டுமிராண்டித்தனமான யாப்பிற்கு எதிராக, அந்தக் காட்டுமிராண்டித் தனத்தை அமுல்படுத்துகின்ற கொடிய பொலிஸ், இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிராக ஈழத்தமிழர் ஆயுதம் தாங்கிப் போராடுவது அவர்களின் ஜனநாயக மீட்சிக்கான போராட்டமேயாகும்.

தமது ஜனநாயக உரிமைகளை நிலைநாட்ட ஆயுதம் தாங்கிய வழிமுறையில் போராடக்கூடாதென்றால் உலகின் எந்தவொரு நாடும் தத்தமது ஜனநாயக உரிமைகளை தற்காப்பதற்கு ஆயுதங்களை வைத்திருக்கவும் முடியாது. எந்தொரு நாட்டிற்கும் எதிராக அவர்கள் ஆயுதம் தாங்கிப் போரிடவும் முடியாது. கிட்லரின் நாசிப் படைகளுக்கு எதிராக நேசநாடுகள் எப்படி ஆயுதம் தாங்கிப் போராடியமை ஜனநாயக மீட்பு நடவடிக்கையாகுமோ அப்படியே சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராக தமிழ்மக்கள் ஆயுதம் தாங்கிப் போராடுவதும் ஜனநாயக மீட்பு நடவடிக்கையேயாகும்.

தூய கோட்பாட்டடிப்படையில் ஜனநாயகம் என்பது ஆயுதம் தாங்காமை தானென்றால் எந்தொரு நாடும் தமக்கெதிராக எத்தகைய ஆக்கிரமிப்புக்கள் ஏற்படும்போதும் அதற்கெதிராகத் தமது ஆயுதங்களைத் தாங்காது விடவேண்டும். அதன்படி பார்க்கையில் எந்தொரு நாடும் படை, பட்டாளங்கள், ஆயுதங்கள் என்பவற்றை வைத்திருக்கக்கூடாது என்றாகிவிடுகின்றது.

அடுத்த விடயத்தைப் பார்ப்போம். ஆயுதங்களைக் கைவிட்டு "அரசியல் நீரோட்டத்தில்" கலத்தல் பற்றிக் கதைக்கிறார்கள். ஆயுதம் என்பது அரசியலின் ஒரு பகுதி. இராணுவமின்றி அரசுகளில்லை. பொலிஸ், இராணுவம் என்ற ஆயுதம் தாங்கிய அம்சங்கள் இல்லாமல் அரசு என்பது பூமியில் இல்லை. எனவே அரசியல் என்பது ஆயுதத்தையும் ஓர் அங்கமாகக்கொண்ட பகுதியாகும்.

இலங்கைத்தீவில் ஈழத்தமிழரின் உரிமைகளும் அபிலாசைகளும் அவற்றின் பாலான தீர்மானங்களும் ஜனநாயக அம்சங்களேயாகும். அத்தகைய ஜனநாயக அம்சங்களை அமைதிவழியில் அடையத் தமிழ்மக்கள் முற்பட்டபோதெல்லாம் அவர்கள் இராணுவ வழிமுறையில் அடக்கி ஒடுக்கப்படலாயினர். ஆதலால் தமிழ்மக்களின் ஜனநாயகத்திற்கான போராட்டம் ஆயுதம் தாங்கிய ஒன்றாய் அமைய நேர்ந்தது.

அடுத்து அமைதிவழியில் தமிழ்மக்கள் தமது உரிமைகளை நிலைநாட்ட வழியிருந்ததா என்பதைப் பார்ப்போம்.

தமிழ்மக்களின் அமைதிவழிப் போராட்டம் எதனாலும் சிங்கள அரச இயந்திரத்தை ஸ்தம்பிக்கச் செய்யமுடியாது. தமிழீழ மண்ணில் நிகழும் எந்தொரு அமைதிவழிப் போராட்டத்திலும் சிங்கள அரசின் அரச இயந்திரத்தைப் பொருளாதார ரீதியில் ஸ்தம்பிக்கச்செய்ய முடியாது. அதாவது சிங்கள அரசை பொருளாதார ரீதியாகப் பாதிக்கக்கூடிய அளவிற்கு தமிழீழப் பொருளாதார ஏற்பாடுகளில்லை.

தலைநகர் கொழும்பில் ஊர்வலங்கள் உண்ணா விரதங்களையாவது மேற்கொண்டு நிர்வாக ரீதியில் சில ஸ்தம்பிதங்களை ஏற்படுத்த முயன்றபோதெல்லாம் காடையர்களைக் கொண்டு அதனையெல்லாம் முறியடித்தார்கள். ஆதலால் எத்தகைய அமைதிவழிப் போராட்டங்களின் மூலமும் சிங்கள அரச இயந்திரத்தைப் பாதிக்கக்கூடிய பின்னணிச் சூழல் இலங்கையில் இல்லை என்பதால் ஆயுதம் தாங்கிய வழி மட்டுமே ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான வழியாக உள்ளது.

தமிழ்மக்களின் எத்தகைய கோரிக்கைகளையும், போராட்டங்களையும், வாதங்களையும் பொருட்படுத்தாது சிங்கள அரசு தமிழ்மக்களுக்கு எதிராகத் தனது அரசியல் யாப்பை மேலும் மேலும் வலுவாக்கிச்சென்ற வரலாற்றையே நாம் காணலாம். உதாரணமாக 1947ஆம் ஆண்டு அரசியல் யாப்பானது

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)



**வரலாற்றனுபவங்களின் பிரகாரம் விடுதலைப்புலிகள் சிங்கள அரசை நம்பத் தயாரில்லை. ஆனால் சிங்கள அரசு இம்முறை சர்வதேச சமூகத்தை ஏமாற்றிக் காரியம் சாதிக்க முற்படுகின்றது. கடந்த மூன்றாண்டு காலமாக பேச்சுவார்த்தைகளில் எதுவித முன்னேற்றமும் இல்லாமல் சிங்கள ஆட்சியாளர்கள் தமது ஏமாற்று வித்தைகளை சர்வதேச சமூகத்தின் முன் அரங்கேற்றி வருகின்றனர். உட்கட்சிப் பிரச்சினைகள் என்றும் அரசாங்கத்தை அமைத்துள்ள கூட்டணிக் கட்சிகளுக் கிடையேயான பிரச்சினைகள் என்றும் வசதிக் கேற்ப பிரச்சினைகளைக் கூறி, பிரச்சினைகளுக்கு வியாக்கியானங்களைக் கூறி ஒட்டுமொத்த ஏமாற்று வித்தையை ஜனாதிபதி சந்திரிக்கா அரசாங்கம் புரிந்துவருகிறது.**

# விலைகொடுத்த மக்களும் விட்டுக்கொடுக்கும் புலிகளும் எங்குபோய் முடியும்?

– பிரபந்திரன் –

நம்பிக்கையற்றுப்போன எதிர்காலத்திற்கும் சர்வதேச சமூகத்தின் கரிசனைமிக்க ஒத்துழைப்பிற்குமிடையே யுத்த நிறுத்தம் ஊசலாடிக்கொண்டிருக்கிறது.

அளப்பெரிய மனிதத் தியாகங்களைக் கோரும் ஆயுதப் போராட்டம் தவிர்ந்த மாற்றுவழி இலங்கை அரசியல் யதார்த்தத்திற்கு முரணானது என்பதை, பயனற்றுப்போன கடந்த மூன்று வருடகால சமாதானப் பயணமும் சுனாமிப் பேரனர்த்த அவலத்தின் இழிந்த அரசியல்முகமும் மனித சுதந்திரத்தைக் கோரும் தமிழருக்கு இடித்துரைத்திருக்கிறது.

சுனாமி நிவாரணப்பணி என்பது அவசரமானது மட்டுமல்ல மனிதாபிமானதுமான அறச் செயற்பாடாகும். ஆனால், இது விடயத்திலும் இனத்துவேச அரசியலை விட்டுவிடமுடியா அரசியல்த்தனம், நாகரீகமான ஜனநாயக உலகிற்கு சிங்கள ஜனநாயக அரசியல் கலாச்சாரம் என்றால் என்ன என்பதைக் கற்பித்திருக்கிறது.

சமரசம் செய்வதுபற்றிய சர்வதேச சமூகத்தின் முன் அனுபவமோ இத்தகைய இயற்கைப் பேரனர்த்தம் சமாதானத்தை முன் தள்ளவும், பகை தணிவிக்கவும், இணைந்த செயற்பாட்டிற்கும், வலுச்சேர்க்க வல்லமை பொருந்திய காரணி என்று கண்டறிய, சிங்களதேசமோ தனது அரசியல் கலாச்சாரத்தில் அறமதிப்பீடுகளுக்கும் இடமில்லை என்பதைக் காண்பித்திருக்கிறது.

**சர்வதேசத்தின் கரிசனையும் அதனுடனான எமது இணைந்த செயற்பாடும் இந்த மூன்று வருடத்தில் எம் மக்களது வாழ்வின் அமைதி, பாதுகாப்பு, முன்னேற்றம் என்பவற்றில் ஒரு அடியைத்தானும் முன்னேற்றுவிக்கவில்லை. இனியும் முன்னேறுவதற்கான அரசியல்விதி இல்லையென்பது திட்டவட்டமாக நிரூபனமாகுமென்றால் பெரும் தியாகங்களுக்கோ அல்லது சர்வதேசத்தின் கவலைகளுக்கோ அஞ்சி யதார்த்தத்தைப் புலிகள் புறந்தள்ளமுடியாது. யுத்தத்தைப் புறக்கணிக்க இயலாது.**

இத்தீவில் இரு அதிகார மையங்கள் என்ற யதார்த்தத்தை யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் ஏற்றுக்கொண்ட பின்பும்கூட, இயற்கையான பேரனர்த்த அவலத்தின் மீள்கட்டுமானத்திற்காக புலிகளுடன் அரசு இணைந்து செயற்படமுடியாமல் போனமை யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் உள் நோக்கத்தை கண்டறியத் தூண்டுகிறது.







விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட பொதுக் கட்டமைப்பு அரசினால் மறுதலிக்கப் பட்டபோதும், அனுசரணைத் தரப்பான நோர்வேயினால் முன்வைக் கப்பட்ட கட்டமைப்பை சமாதானத்தில் சர்வதேச சமூகத்தின் முக்கியத்துவம் மிக்க பாத்திரத்தை மதித்தும், ஒத்துழைப்பதன் பொருட்டும் புலிகள் ஏற்றுக் கொண்டனர்.

ஆனால், அரசாங்கமோ நோர்வே வரைந்த கட்டமைப்பில் புனர்நிர்மாணப் பணிக்கான அதிகாரங்கள் குறித்து புதுவிதமான புனைவுகளை கண்டறிவதில் ஆர்வம் கொண்டது. புனைவுகளை அடிப்படையாகக் கொண்டு சந்தேகங்களை எழுப்பியது. தனது ஓரங்கட்டும் உள்நோக்கிற்கு வியாக்கியானங்களை அழித்தது.

ஆயினும் உதவி வழங்கும் நாடுகளின் உன்னிப்பான அவதானிப்பும், புரிதலும் விளை திறன் உள்ள இராஜதந்திர அழுத்தத்தை சிங்கள அரசாங்கம் மீது செலுத்த வகைசெய்தன. அதன் பயனாய், அரசாங்கம் தனது நிலைப்பாட்டிற்கு வியாக்கியானம் அளித்தது. நோர்வே திருத்தத்தைக் கேட்டது. அரசு தனது திருத்தத்தை முன்வைத்தது. இது, முன்னர் ஒப்புக் கொள்ளாமையைக் கடைப் பிடித்ததற்குப் பதிலாக இப்போது ஒத்துழையாமையைக் கடைப் பிடிக்க உத்தேசித்துள்ளதைக் காட்டுவதேயன்றி வேறில்லை.

புலிகள் இத் திருத்தத்தையும் ஏற்றுக்கொள்வதாய் நோர்வே மூலம் அறிவித்து விட்டனர். எம் மக்களுக்கு நேர்ந்த பேரழிவு அனர்த்தம் கோருவது நிவாரணத்தையும் மீள் கட்டுமானத்தையுமேயன்றி சட்டவித்துவத்தையும் இறைமை பற்றிய விவாதங்களையுமல்ல. தவிரவும், பொதுக் கட்டமைப்பு என்பது தீர்வுக்கான பகுதியல்ல, அது ஜனநாயகக் கலாச்சாரத்தின் பகுதி. அது மனிதநேயப் பணிக்கானது என்பதுடன் தற்காலிக மானதுமாகும்.

சமாதான முயற்சிகளில் சர்வதேச சமூகத்தின் கரிசனை முக்கியத்துவமான அரசியலை பாத்திரம் வகிப்பது என்ற வகையில் அதன் ஒத்துழைப்புக்கள் மாத்திரமல்ல கவலைகளும் பெறுமதி வாய்ந்தவைகளே. அதனுடன் பிணைந்தும், இணைந்தும் செயற்படவேண்டிய அவசியத்தைப் புலிகள் ஓரங்கட்டிவிட வில்லை.

விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட கட்டமைப்பு மறுதலிக்கப்பட்டபோது நோர்வே முன்வைத்த கட்டமைப்பையும் அரசு முன்வைத்த திருத்தத்தையும் சேர்த்து புலிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர். புலிகளின் இத்தகைய நிலைப்பாடு இலங்கையரசின் மீது சர்வதேச சமூகம் பிரயோகித்த, மேலும் பிரயோகிக்கக்கூடிய இராஜதந்திர அழுத்தத்திற்கு ஒரு தார்மீக நியாயத்தைச் சேர்த்திருக்கிறது. இதனால் இராஜதந்திர நலன் நோக்கில் மட்டுமல்ல, நியாய நோக்கிலும் பதில் சொல்லவேண்டிய கடப்பாட்டை இலங்கையரசிற்கு உருவாக்கியிருக்கிறது.

இதன் நிமிர்த்தமாகவே கடந்த மூன்றாந்திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான தேசிய ஆலோசனைக் கவுன்சிலின் சமய, சமூகத் தலைவர்களுக்கான கூட்டத்தில் ஜனாதிபதி "யார் எதிர்த்தாலும் பொதுக் கட்டமைப்பை அமைக்கவேண்டிய தேவையுள்ளது அமைத்தே தீருவேன்" என்று திருவாய் மலர்ந்திருக்கிறார்.

ஆனால், யதார்த்தத்தில் இப்படியேதாவது நிகழ்ந்தேறுவது சாத்தியம் என நம்புவது அரசியல் குருட்டுத்தனம் மிக்கதும், ஒரு வகை அர்த்தத்தில் மூட நம்பிக்கையானதும் என்று எண்ணும் அளவிற்கே சந்திரிக்காவின் கடந்தகால அரசியல் கலாச்சாரம் இருந்து வந்திருக்கிறது.

அழுத்தம் அரசியல் நெருக்கடியாகும்போது ஒப்புக் கொள்வது, ஆனால் ஒப்புக் கொண்டதை ஒத்திப்போடுவது - நீட்டிப்பது அதன்மூலம் பிரச்சினையை உக்கி உலர்ந்துபோக வைப்பது, இதன் இராஜதந்திர மெருகுக்காக காலப்பொருத்தமான காரணத்தைக் கண்டறிவது, அல்லது உருவகிப்பது, கால மாற்றத்தில் வசதியான ஒரு விவகாரம் கைக்கெட்டும்வரை காத்திருப்பது என்று கைவண்ணமிக்க இராஜதந்திர கலைமரபு சிங்கள ஆட்சியாளர்களிடம் உண்டு.

**அழுத்தம் அரசியல் நெருக்கடியாகும்போது ஒப்புக் கொள்வது, ஆனால் ஒப்புக்கொண்டதை ஒத்திப்போடுவது - நீட்டிப்பது அதன்மூலம் பிரச்சினையை உக்கி உலர்ந்துபோக வைப்பது, இதன் இராஜதந்திர மெருகுக்காக காலப் பொருத்தமான காரணத்தைக் கண்டறிவது, அல்லது உருவகிப்பது, காலமாற்றத்தில் வசதியான ஒரு விவகாரம் கைக்கெட்டும்வரை காத்திருப்பது என்று கைவண்ணமிக்க இராஜதந்திர கலைமரபு சிங்கள ஆட்சியாளர்களிடம் உண்டு.**

தமிழர்களிற்கும் இந்தியாவிற்கும்கூட சிங்கள தேசத்துடனான இந்த அனுபவம் வாய்த்திருக்கிறது. இப்போது மேற்குலகிற்கு இது புதிது. ஆயினும் மூன்றாண்டுகால முயற்சியால் ஏதும் சாதிக்கமுடியாதது பற்றிய தற்கான காரணங்களைக் கண்டறிந்து புள்ளிகளிட்டால் பெரு வெட்டான ஒரு சிங்கள இராஜதந்திர மனோபாவ உருவரைபைப் பெறமுடியும். ஆயினும்கூட, புலிகள் அரசு சமர்ப்பித்த திருத்தத்திற்கு ஆமோதித்திருக்கின்றனர்.

இதன்மேலும் பொதுக் கட்டமைப்பு ஒரு பொய்யென்றாகினால், பிறகு, தமது கூட்டு வாழ்வையும் மனித சுதந்திரத்தையும் அவாவும் தமிழர்களுக்கு இறுதித் தீர்வுக்கான சமாதானப் பயணத்திற்காய் எங்கேனும் ஒரு பாதை இருக்கென யாரும் கண்டறிவார் களேயானால் அவர்கள் மாயக் காட்சிகாணும் ஒருவகை மன நோயாளிகளேயன்றி வேறலர். அத்தகைய ஒரு பாதை இருக்கிறது என யாரும் காட்டுவார்களேயானால் அவர்கள் கண்கட்டு வித்தைக்காரர்களேயன்றி வேறு யாருமல்லர்.

உயிரழிவு, சொத்தழிவு என இரத்தமும் கண்ணீரும் சிந்த வைத்து மகத்தான தியாகங்களைக்கோரும் யுத்தம் உரிமையை அடைவதற்கான வழிமுறையில் நிச்சயமாய் முதற் தெரிவாய் இருக்கமுடியாது. யுத்தம் கோரும் விலையை மட்டுமல்ல அதன் விளைவையும் நாம் நன்கறிவோம். மாற்றுவழி பற்றிய சர்வதேசத்தின் ஆர்வத்தையும் கரிசனையையும் எமக்கான ஒத்துழைப்பாகப் பெற்றிடமுடியும் என்பதில் நம்பிக்கையும் அதற்கான தார்மீக நியாயமும் எம்மிடம் உண்டு என உறுதியாக எம்மால் சொல்லமுடியும்.

ஆனால், சிங்கள தேசத்துடனான நீண்டகால அரசியல் அனுபவம் எமக்குண்டு. சிங்கள தேசியத்தின் அரசியல் இலட்சியத்தையும், அதன் அரசியல் கலாச்சாரத்தையும் இதில் அதற்குள்ள திறமையையும் எமது ஒடுக்குமுறையாளர் என்றவகையில் எம்மைவிட யாரும் சிறப்பாகக் கண்டறிந்துவிட முடியாது.

சர்வதேசத்தின் கரிசனையும் அதனுடனான எமது இணைந்த செயற்பாடும் இந்த மூன்றுவருடத்தில் எம் மக்களது வாழ்வின் அமைதி, பாதுகாப்பு, முன்னேற்றம் என்பவற்றில் ஒரு அடியைத்தானும் முன்னேற்றுவிக்கவில்லை. இனியும் முன்னேறுவதற்கான அரசியல்விதி இல்லையென்பது திட்டவட்டமாக நிரூபனமாகுமென்றால் பெரும் தியாகங்களுக்கோ அல்லது சர்வதேசத்தின் கவலைகளுக்கோ அஞ்சி யதார்த்தத்தைப் புலிகள் புறந்தள்ள முடியாது. யுத்தத்தை புறக்கணிக்க இயலாது.

ஏனெனில் விலைகொடுத்த மக்களின் குரல்களுக்கே புலிகள் முதலில் பதில் சொல்லவேண்டி வரும்.

**"எமது போராளிகள் குடும்பத்தைத் துறந்து, இளமையின் இன்பங்களைத் துறந்து, சுதந்திரம் என்ற இலட்சியத்திற்காகத் தமது உயிரையும் துச்சமாக மதித்துப் போராட்ட களத்தில் குதித்திருக்கிறார்கள். இவர்களை ஆயுதப்போராட்ட பாதைக்குத் தள்ளியது சிங்கள அரச பயங்கரவாதமேயன்றி வேறொன்றுமில்லை."**

**- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் -**

# ஆயுதமேந்திய சிறுவர்களும் அரசியலும்



கலாநிதி க. சோமாஸ்கந்தன்

மேற்கு ஆபிரிக்க எழுத்தாளர் அகமது குரூமா தனது பரிசுபெற்ற 'கடவுளுக்கு ஒருவிதமான பொறுப்புமில்லை' என்ற நாவலில் இருபதாம் நூற்றாண்டின் மிகப் பிரபலமான கதாநாயகன் 'போராளிச் சிறுவன் தான்' என்று எழுதியுள்ளார். (AHAMADOU KOUROVMA : GOD IS'NT UNDER ANY OBLIGATION) அவுஸ்திரேலிய நாட்டில் இவ்வருடம் ஒரு 103 வயதுப் போர்வீரன் இயற்கை எய்தியபோது அவரைக் கௌரவிக்க முழுநாடும் திரண்டெழுந்தது. முதலாம் உலகப்போரில் இவர் தனது வயது பதினாறாக இருக்கையில் பதினெட்டும் நான்கு மாதமும் என்று பொய்சொல்லி அவுஸ் திரேலிய இராணுவத்தில் இணைந்தார். அப்போது அவுஸ்திரேலிய இராணுவத்தில் இணைவோருக்கு விதிக்கப்பட்ட ஆகக் குறைந்த வயது இருபத்தியொன்று. பெற்றாரின் அனுமதிக் கடிதத்துடன் வரும் பதினெட்டு வயதினருக்கு இராணுவத்தில் இடம் வழங்கப் பட்டது. மேற்கூறிய இளைஞன் தனது பெற்றாருடன் போராடிப்பெற்ற பதினெட்டு வயது என்ற பொய்யுரைக்கும் கடிதத்துடன் இராணுவ வீரனாகி அந்த நாட்டு வரலாற்றில் இடம்பிடித்தான்.

இந்த முதியவரின் மரணச்செய்தி அறிந்தவுடன் சீனாவுக்கு அரசுப்பயணம் மேற்கொண்டிருந்த அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹோவாட் தனது பயணத்தை இடைநிறுத்திவிட்டு நாடு திரும்பினார். மரணச் சடங்கன்று நாடு பூராகவும் தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. மரண ஊர்வலத்தில் நாட்டின் பிரதமர், ஆளுநர்கள், அரசியல் உறுப்பினர்கள், முப்படை அதிகாரி கள் பங்குபற்றினர். இறந்தவரின் வாழ்நாளிலே அவருடைய படம் நாட்டின் அஞ்சல் தலையில் வெளியிடப்பட்டது. தன்னுடைய உயரத்திலும் பார்க்க உயர்ந்த துவக்கை தூக்கிப் பிடித்தபடி நிற்கும் அவருடைய சிறுவயது விம்பம் அவருடைய நினைவாக வெளியிடப்பட்ட அவுஸ்திரேலிய நாணயத்தில் புடைப்புச் சித்திரமாக பொறிக்கப்பட்டுள்ளது. அவருடைய வயதையோ சிறப்பையோ குறைப்பதற்கு அவுஸ்திரேலிய அரசு எவ்வித முயற்சியும் எடுக்காதது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் புகழ்பூத்த தனியார் துறை ஆய்வு நிறுவனமான புறூக்கிங்ஸ் அமைப்பில் (BROOKINGS INSTITUTION) அரசியல் விஞ்ஞானியாகப் பணியாற்றும் பி.டபிள்யூ.சிங்கர் இவ்வருடம் சிறுவர்கள் ஏன் போருக்குச் செல்கிறார்கள் என்ற தலைப்பில் ஒரு ஆய்வுநூலை எழுதி வெளியிட்டுள்ளார். (CHILDREN AT WAR : P.W.SINGER. PANTHEON PRESS. 2005) "இன்று உலகில் நடக்கும் எல்லாச் சண்டைகளையும் கணக்கில் எடுத்துப் பார்த்தால் அவற்றில் எழுபத்தைந்து வீதமானவற்றில் பதினெட்டு வயதிலும் குறைந்தவர்கள் போரிடுவதைப் பார்க்கலாம்." என்ற ஆய்வு முடிவை சிங்கர் இந்த நூலில் தருகிறார். மேலும் அவர் சிறுவர்கள் அதாவது பதினெட்டு வயதிலும் குறைந்தோர் போரில் பங்குபற்றுவது இன்று சர்வ சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது என்றும் கூறுகின்றார். "சிறுவர்களின் பங்கேற்பு புத்தம் புதியதோர் போரியல் கோட்பாடாக ஏற்க வேண்டிய நிலைக்கு வளர்ச்சி கண்டுள்ளது." என்பதை சிங்கர் தனது நூலின் முடிவாக வலியுறுத்துகிறார்.

இந்த ஆய்வுநூலில் சிறுவர்கள் ஏன் படையில் சேர்கிறார்கள் என்ற வினா எழுப்பப் பட்டு அதற்கான விடையும் தரப்படுகிறது. வறுமைதான் முக்கிய காரணம் என்பது சிங்கரின் நிலைப்பாடு. ஆபிரிக்க நாடுகளான லைபீரியா, சியராலியோன், கொங்கோ, யுகான்டா ஆகியவற்றில் தமது பசிப்பிணியைப் போக்குவதற்காகவே சிறுவர்கள் படையில் சேர்கிறார்கள் என்பது அவருடைய முடிவு. தோல்விகண்ட நாடுகளில் (FAILED STATES) அரச நிர்வாகம் செயலிழந்து காணப்படும்போது கிளர்ச்சிகள் வெடிப்பது இயல்பு. அவற்றில் சிறுவர்கள் இணைவதும் இணைக்கப்படுவதும் தவிர்க்கமுடியாத நிகழ்ச்சி என்று சிங்கர் சுட்டிக்காட்டுகிறார். அரச இயந்திர உடைவும், வறுமையும் போராளிச் சிறுவர்களை உருவாக்குவதற்குப் போதுமானவையல்ல. இதை சிங்கர் ஆய்வுக்கு உட்படுத்தத் தவறியுள்ளார். வட கிழக்கில் அதாவது தமிழீழத்தில் நாம் எமது தேசியத்திற்காகக் போராடுகிறோம். தமிழ் மக்களின் போராட்டம் தன்னாட்சி உரிமையை பெற்றெடுப்பதற்கான போராட்டம். எமது அரசியல் தலைவிதியை நாமே நிர்ணயித்துக் கொள்ளும் சுதந்திரத்திற்கான போராட்டம் என்பது வெளிப்படை.

இரண்டாம் உலகப்போரில் வீர வரலாறு படைத்த அமெரிக்கரான டொன் பியர்ஸ் இவ்வருடம் வெளியிட்ட 'ஒருவரும் திரும்பி வருவதில்லை' என்ற நாவலில் (NOBODY COMES BACK : DONN PEARCE) தோபி பார்க்கர் (TOBY PARKER) என்ற பதினாறு வயதுப் போர் வீரனை கதாநாயகனாகப் படைத்துள்ளார். படையில் சேர்ந்தவுடனேயே ஐரோப்பா செல்லும் அமெரிக்கப் படைகளுடன் தோபி பாக்கர் அனுப்பப்படுகின்றான். கப்பலில் இருந்து இறங்கியவுடன் களமுனைக்கு அனுப்பப்படும் இவ்விளைஞன் சுடுகிறான், சூடு வாங்குகிறான். பசியாலும் பயத்தாலும் கடும் குளிராலும் நடுநடுங்குகிறான். உயிர்தப்பி வாழ்வதற்காகவே போராடுகிறான். ஈற்றில் தனது இளமையை இழந்து அவன் போர்க் குணம் மிக்க ஆண்மகனாகப் பரிணமிக்கிறான். அமெரிக்கப் படைகளில் இணைந்துள்ள சிறுவர்கள் பற்றி சிங்கர் தனது நூலில் குறிப் பிடாது தவிர்த்துள்ளமை நன்கு புலப்படுகிறது.

காயும் கனியுமாகப் பொலிவுடன் நிற்கும் மரத்திற்குக் கல்லெறி விழுவது இயற்கையே. சிறுவர்களைப் படையில் சேர்க்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு சிறிலங்கா அரசினாலும் வேறுசில அமைப்புக்களாலும் எல்ரிரிஈ மீது சுமத்தப்படுகிறது. சொல்வதற்கு வேறொன்றும் இல்லாதபோது இதையே மீண்டும் மீண்டும் இவர்கள் சொல்லியபடி இருக்கின்றனர். நியூஸ்வீக் சஞ்சிகை தனது மே 13, 2002 இதழில் வெளியிட்ட தரவு களின்படி 300,000 போராளிச் சிறுவர்கள் அதாவது 18 வயதிலும் குறைந்தவர்கள் 30 உலகநாடுகளில் நடைபெறும் ஆயுதப்போரில் நேரடியாகப் பங்குபற்றுகின்றனர். சியரா லியோன் நாட்டில் 10,000 போராளிச் சிறுவர் கள் ஆயுதப்போர் புரிகின்றனர். இவர்களில் பெரும் எண்ணிக்கையினர் பலவந்தமாக இணைக்கப்பட்டுள்ளனர். உலகின் மிகக் கூடுதலான போராளிச் சிறுவர்களை மியன் மாரின் அரசபடைகள் கொண்டுள்ளன. மியன் மார் அரசபடையில் இணைக்கப்பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை 50,000. கொலம் பியா நாட்டில் அரசபடைகளும் கிளர்ச்சி யாளர்களும் 8 வயது வரையிலான சிறுவர் களைத் தமது படையணிகளில் இணைத் துள்ளனர். இஸ்ரேலிய நாட்டுப் படைகளில் 18 வயதிலும் குறைந்த போர்வீரர்கள் காணப்படுகின்றனர்.

உலகளாவிய ரீதியில் சிறுவர்கள் பாதுகாப்பு மற்றும் உரிமை கள் சம்பந்தமான விழிப் புணர்வும் கரிசனையும் பெரு மளவில் இருப்பினும் சிறுவர் களின் துயரம் தணிந்த பாடில்லை. முழுநேர ஊழி யர்களாக உலகின் பல பாகங்களில் 5-15 வரையிலான வயதுக்குட் பட்ட சிறுவர்கள் குறைந்த ஊதியத்திற்குக் கடுமையாக உழைக்கின்றனர். ஆசியா வின் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் மிகவும் ஆபத்தான இரசாயனத் தொழிற்சாலைகளில் சிறுவர் சிறுமிகள் பணியாற்று கின்றனர். இந்திய தொழிற்சாலைகளில் 20 மில்லியன் சிறுவர்கள் பணியில் ஈடுபடு கின்றனர். இதை நிறுத்தும்படி இந்திய அதியுயர் நீதிமன்றம் உத்தரவிட்டபோதும் அது தொடர்ந்தபடியே இருக்கின்றது. பாகிஸ் தானில் பல்லாயிரக்கணக்கான குழந்தைத் தொழிலாளர்கள் கால்பந்து தயாரிக்கும் தொழிற்சாலைகளிலும், கம்பளம் நெசவு செய்யும் ஆலைகளிலும் மிகக்குறைந்த ஊதியம் பெற்று வேலைசெய்கின்றனர். ஏழைக் குடும்பங்கள் தமது சிறுவர்களை இடைத் தரகர்கள் மூலம் கால்பந்து தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு விற்பனை செய்கின்ற னர். தெற்கு அமெரிக்காவில் சுரங்கங்களி லும் மேற்கு ஆபிரிக்காவில் கல்லுடைக்கும் தொழிற்சாலைகளிலும் வட அமெரிக்காவி லுள்ள பெருந்தோட்டங்களிலும் சிறுவர்கள் கூலிவேலை செய்கின்றனர். அரசியல் இலாபம் தேடுவோர் மாத்திரம் காலத்திற்குக் காலம் இவர்கள்பற்றிக் குரல் கொடுக்கிறார்கள். உலகின் மொத்த சிறுவயதுத் தொழிலாளர் கள் எண்ணிக்கை 211 மில்லியன் என்று மதிப்பிடப்படுகிறது.

இவ்வருடம் மார்ச்சு மாதத்தில் நடந்த 61ம் மனித உரிமைகள் ஜெனிவாநகர் மாநாட்டில் உரையாற்றும்போது சிறி லங்காவின் வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தனது வழமையான புலிகள் சிறுவர்களைத் தமது படையணிகளில் சேர்க்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை முன் வைத்தார். தமிழ்ச் சிறுவர்கள் மீதான பச்சாதாபத்தில் அவர் பேசவில்லை, புலிகளை மட்டந்தட்டுவதுதான் அவருடைய முக்கிய இலக்காக இருந்தது. ஐ.நாவின் செயலாளர் நாயகம் ஐ.நா பாதுகாப்புச் சபைக்கு சிறுவர்களைப் படையில் சேர்ப்போருக்கு எடுக்கவேண்டிய பரிந்துரைகளை தனது அரசு எதிர்ப்பதாகவும் கதிர்காமர் அங்கு பேசினார். பரிந்துரைகளுக்கு என்ன நடந்தது என்பதைப் பற்றி பிறிதோர் பகுதியில் பார்ப்போம். இப்பரிந்துரைகள் இறுக்கமாக அமுலாக்கப் பட்டால் சிறுவர்களைப் படையில் சேர்க்கும் வழமை உலகில் முற்றாக மறைந்துவிடும் என்று கதிர்காமர் நம்பிக்கை தெரிவித்தார்.

மனித உரிமைகள் சம்பந்தமான முன்னணி வழக்கறிஞரும் சர்வதேச கல்வி மேம்பாடு - மனிதநேய நீதி முன்னெடுப்பு (INTERNATIONAL EDUCATIONAL DEVELOPMENT - HUMANITARIAN LAW PROJECT) என்ற அமெரிக்க என்.ஜி. ஓவின் முதன்மைப் பிரதிநிதியுமாகிய திருவாட்டி கரென் பார்க்கர் கதிர்காமரின் கூற்றை மறுத்துரைத்தார். ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை நெடுங்காலமாக ஆதரிக்கும் இவர் கதிர்காமரின் தமிழ்ச் சிறுவர்கள் பற்றிய கரிசனை போலியானது என்று வாதிட்டார். சிங்கள இராணுவத்தால் தமிழ்ச் சிறுவர்கள் தமது வாழ்விடங்களிலும், கல்வி நிலையங்களிலும் வகை தொகையாகக் கொல்லப்பட்டபோது கதிர்காமர் ஏன் வாய் திறக்கவில்லை என்று அவர் கேட்டார். பொதுவாக சிறுவர்களைப் படையில் சேர்க்கும் விவகாரம் அரசியல் நோக்கங்களுக்காகவே பயன்படுகிறது.

சிறுவர் உரிமைகள் - மாற்று விதிமுறைகள் (OPTIONAL PROTOCOL ON THE RIGHTS OF THE CHILD) ஏற்கனவே நிறுவப்பட்ட நாடுகளும் ஆயுதம் தரித்துப் போரிடும் அமைப்புக்களிடையில் வேறுபாடு காட்டுவதை கரென் பாக்கர் (KAREN PARKER) தனது உரையில் விரிவாக விளக்கினார். நாடுகளுக்குச் சொந்தமான தேசிய இராணுவத்திற்கு 16 வயதினரைச் சேர்க்கமுடியும். அவர்கள் தாமாகவே வந்திணையவேண்டும் என்ற முன்நிபந்தனையை இந்த விதிமுறைகள் விதித்துள்ளன. ஆனால் ஆயுதம் தரித்துப் போரிடும் அமைப்புகள் மாத்திரம் 18 வயதிற்குக் குறைந்தோரைத் தமது படையில் சேர்க்கவோ, போரில் பயன்படுத்தவோ முடி யாது. அவர்கள் தாமாகவே வந்திணைந் தாலும் சேர்க்கவோ பயன்படுத்தவோ முடியாது என்பது கடுமையான முன்நிபந்தனை. உரிமைச் சமத்துவத்திற்கும், நீதிக்கும் முன்னால் யாவரும் சமம் என்ற கோட்பாட்டிற் கும் இந்த வேறுபாடு மிகவும் முரணானது என்று கரென் பார்க்கர் சுட்டிக்காட்டினார். அதோடு சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் செயற்பாட்டையும் இந்த வேறுபாடு பாதிப்ப

***1998ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது முன்னாள் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, "15 வயது பள்ளிச் சிறுவர்களை இராணுவத்தில் சேரும்படி ஊக்குவிப்பதற்காக பாதுகாப்புப் படையினர் பள்ளிக் கூடங்களில் பிரசாரம் செய்கின்றனர். இதுபற்றி நான் குறிப்பிடும்போது என்னைத் துரோகி என்று சாற்றுகின்றனர்" என்று உரையாற்றினார்.***

தாகவும் அவர் எடுத்துக் கூறினார்.

சிறிலங்கா ஆயுதப்படைகள் வயது குறைந்த சிறுவர்களைப் படையில் சேர்ப்பது பற்றி ஏன் ஒருவரும் பேசுவதில்லை என்ற வினாவை அவர் எழுப்பினார். இதுபற்றி சில முன்னணி சிறிலங்கா அரசியல் தலைவர்கள் குறிப்பிட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார். 1998ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது முன்னாள் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க "15 வயது பள்ளிச் சிறுவர்களை இராணுவத்தில் சேரும்படி ஊக்குவிப்பதற்காக பாதுகாப்புப் படையினர் பள்ளிக்கூடங்களில் பிரசாரம் செய்கின்றனர். இதுபற்றி நான் குறிப்பிடும்போது என்னைத் துரோகி என்று சாற்றுகின்றனர்." என்று உரையாற்றினார். ஐ.நா பொதுச்சபையின் ஒப்புதலோடு ஐ.நா செயலாளர் நாயகத்தினால் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் நலன் காக்கும் விசேட பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட ஒலாரா ஒட்டுனு (OLARA OTUNNU, UNSG SPECIAL REPRESENTATIVE FOR CHILDREN AND ARMED CONFLICT-CAAC) ஈழத்தமிழர் தாயகத்திற்கு வந்திருந்த அதேகாலப்பகுதியிலேயே ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்ட படையினரின் ஆட்சேர்ப்பு நடைபெற்றிருக்கிறது. அதாவது அவர் இங்கு நிற்கையிலே இளவயதினர் ஆட்சேர்ப்பை இராணுவம் மேற்கொண்டிருக்கிறது.

ஐ.நா செயலாளர் நாயகம் பதவிக்கு கோபி அனானுடன் போட்டியிட்ட ஒலாரா ஒட்டுனு ஐ.நா பொதுச்சபைத் தீர்மானத்திற்கு அமைவாக கோபி அனானினால் மேற்கூறிய பதவியில் 1997இல் நியமிக்கப்பட்டார். இவர் பெப்ரவரி, 2005இல் சிறுவர்கள் படையில் சேர்ப்பு சம்பந்தமான முக்கிய ஆவணத்தை ஐ.நா பாதுகாப்புச் சபைக்கு சமர்ப்பித்தார். இதை ஐ.நா செயலாளர் நாயகம் வரவேற்புப் பரிந்துரை செய்தார். சிறுவர்களைத் தொடர்ந்தும் படையில் சேர்க்கும் அமைப்புக்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கும்படியும் சில அமைப்புகளுக்கு குறிப்பிட்ட இலக்குடன் நடவடிக்கை எடுக்கும்படியும் ஒலாரா ஒட்டுனு கேட்டுக்கொண்டார். நடைமுறைப் படுத்தக்கூடிய நடவடிக்கைகளை எடுக்கும் படியும் அவர் பாதுகாப்புச்சபையை, தனது அந்தச் சபைக்கான அறிக்கையில் கேட்டுக் கொண்டார். இந்த அறிக்கை பற்றித்தான் 61ம் மனித உரிமைகள் ஆணையகத்தின் முன் உரையாற்றும்போது கதிர்காமர் பிரஸ்தாபித்தார்.

ஐ.நா பாதுகாப்புச்சபை ஒலாரா ஒட்டுனுவின் அறிக்கையையும் கோபி அனானின் பரிந்துரையையும் மிகவும் கவனமாகப் பரிசீலனை செய்தது. ஆனால் ஐ.நா பொதுச்சபை இது சம்பந்தமாக நிறைவேற்றிய தீர்மானம் உப்புச் சப்பற்றதாகவும் இருவருக்கும் யாதொரு விதத்திலும் திருப்தியளிக்காததாகவும் இருந்தது. கடும் நடவடிக்கை எடுப்பதை பொதுச்சபை தவிர்த்துக்கொண்டது. பொதுச்சபை நிறைவேற்றிய தீர்மானம் பின்வருமாறு: சிறுவர்களைப் போருக்கு ஆட்சேர்ப்பதையும் போரில் பயன்படுத்துவதையும் சர்வதேச சட்டத்திற்கு அமைவாக நிறுத்துவதற்கும் போர் நடவடிக்கையால் பாதிப்புற்ற சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள், துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்காகவும், சமுதாயத்தில் அவர்களை மீளிணைப்பதற்கும் மறுவாழ்வு அளிப்பதற்கும் தீர்மானிக்கப்படுகின்றது. இந்த இராசதந்திர சொற்றொடரில் ஆட்சேர்ப்பிற்கும் போரில் பயன்படுத்துவதற்கும் தண்டனை வழங்குவதுபற்றி ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. இது ஒலாரா ஒட்டுனுவுக்கு ஏமாற்றம் அளித்தது. கதிர்காமர் பற்றிச் சொல்லத்தேவையில்லை.

2004ஆம் ஆண்டிலும் ஐ.நா பாதுகாப்புச் சபைக்கு வழங்கிய தனது அறிக்கையில் சிறுவர்களைப் படையில் சேர்த்தல், போரில் பயன்படுத்தல் குற்றங்களைப் புரிந்த அமைப்புக்களின் பட்டியலை ஒலாரா ஒட்டுனு வழங்கியிருந்தார். இதில் எல்ரிரிஈ அமைப்பின் பெயரும் உள்ளடங்கும். குற்றம் சாட்டப்பட்ட ஒரு அமைப்பாவது அது சம்பந்தமாக ஒலாரா ஒட்டுனுவுடன் தொடர்புகொள்ளவில்லை. தொடர்புகொள்ளவேண்டிய அவசியமும் இல்லை. ஆனால், 2005ஆம் ஆண்டின் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஒருநாள் முன்பாக "இது சம்பந்தமாகப் பேசுவதற்குத் தமது தயார்நிலையை வெளிப்படுத்தும்" கடிதமொன்று தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு.சு.ப.தமிழ்ச்செல்வன் ஒலாரா ஒட்டுனுவுக்கு அனுப்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது. தன்னோடு தொடர்புகொண்ட ஒரேயொரு அமைப்பு எல்ரிரிஈ ஒன்று மாத்திரமே என்று தனது 2005ஆம் ஆண்டு அறிக்கையில் ஒலாரா ஒட்டுனு சுட்டிக்காட்டுகிறார். இராசதந்திர ரீதியாகப் புலிகள் அடைந்த வளர்ச்சியையும் உலக அரங்கில் தமக்கென அந்தஸ்த்தை உருவாக்குவதில் அவர்கள் காட்டும் அக்கறையையும் இது காட்டுவதாக அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.




தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பில் அதன் அரசியல்துறைப் பொறுப்பாளர் ஒலாரா ஒட்டுனுவுக்கு எழுதிய மேற்குறிப்பிட்ட கடிதம் தமிழீழம்வாழ் சிறுவர்கள் தொடர்பான புலிகளின் நிலைப்பாட்டை மேலும் தெளிவு படுத்துகிறது. எங்களுடைய மக்கள் நலனுக்காகப் போரிடும் ஒரு விடுதலை அமைப்பான நாம் எமது அடுத்த சந்ததியினரின் நலனில் தீவிர அக்கறை கொண்டுள்ளோம். வடகிழக்கின் 70வீத நிலப்பரப்பை எமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நாம் அங்குவாழும் மக்களுக்கு சிறுவர்கள் உட்பட சமூக, பொருளாதார சேவைகளை வழங்குகிறோம். போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் சம்பந்தமான சர்வதேச சட்டங்களின் பயன்பாடு, அது தொடர்பான எல்ரிரிஈயின் அந்தஸ்து பற்றிய விளக்கங்களை நாம் பெற்றுக்கொள்ள விரும்புகிறோம். கண்காணித்தல் (MONITORING), அறிக்கையிடல் (REPORTING), அனுசரித்தல் (COMPLIANCE) திட்டங்களை போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் இணைந்து பணியாற்ற விரும்புகின்றோம். சிறுவர்கள் சம்பந்தமான நோக்கங்கள் அரசியல் இலாபத்திற்காகப் பயன்படுத்தலாகாது என்பதில் நாம் உறுதியாய் உள்ளோம். அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் பரப்பப்படும் வதந்திகள் ஆதாரமற்ற தகவல்கள் சிறுவர் பாதுகாப்புத் திட்டத்திற்கு உதவமாட்டா. உதாரணத்திற்கு சம்பந்தப்பட்ட சிறுவர்களின் வயதை உறுதிப்படுத்தாமல் செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் கண்டனங்கள்.

இது இவ்வாறு இருக்கையில், கொழும்பிற்கான யூனிசெப் எனப்படும் ஐ.நாவின் சிறுவர் நிதியம் புலிகள்மீது ஆதாரமற்ற பல பாரதூரமற்ற குற்றச் சாட்டுக்களைச் சுமத்துவதில் காலத்தைச் செலவிடுகிறது. "இந்த நாட்டில் ஊழல் குற்றத்திற்காக உடனடியாக விசாரிக்க வேண்டிய ஒரேயொரு அரசசார்பற்ற நிறுவனமாக யூனிசெப் இடம்பெறுவதாக" சன்டேலீடர் இதழ் (டிசெம்பர் 12,2004) தனது முழுப்பக்கக் கட்டுரையில் தெரிவிக்கின்றது. வடகிழக்கிற்கு மருத்துவ உபகரணங்கள், மருத்துவமனை வாகனங்கள் கொள்வனவு செய்வதில் பெருந்தொகைப் பணம் யூனிசெப் அதிகாரிகளால் கையாடப்பட்டதாக அது குற்றம் சுமத்துகிறது. தனது நிர்வாகச் சீர்கேடுகளை மறைப்பதற்காக ஒருவகை திசைதிருப்பல் நடவடிக்கையாக புலிகள்மீது அது வீண்பழி சுமத்துகிறது.

உலகின் மிகப்பெரிய சிறுவர்கள் பாதுகாப்புத் தொண்டு நிறுவனமான ஐக்கிய இராச்சியத்தின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (SAVE THE CHILDREN FUND U.K ) தனது ஏப்பிரல், 2005 ஆண்டறிக்கையில் தமிழீழ விடுதலைப்புலிகளை புகழாவிட்டாலும் கண்டிப்பதைத் தவிர்த்துள்ளது. ஆபிரிக்க நாடுகளில் போரில் ஈடுபடுத்தப்படும் சிறுவர்களுக்கு போதைப்பொருள் ஊட்டப்படுவதாகவும் பெண்போராளிகள் பாலியல் அடிமைகளாக போர்க்குழுத் தலைவர்களாலும் பிற ஆண்போராளிகளாலும் பயன்படுத்தப்படுவதாகவும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. இக்குற்றச் செயல்களை புலிகள் அமைப்பில் காணமுடிவதில்லை என்றும் அது கூறுகின்றது. 1919இல் நிறுவப்பட்ட இந்த நிதியம் உலக அரங்கில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றது.

***தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பில் அதன் அரசியல் துறைப் பொறுப்பாளர் ஒலாரா ஒட்டுனுவுக்கு எழுதிய மேற் குறிப்பிட்ட கடிதம் தமிழீழம் வாழ் சிறுவர்கள் தொடர்பான புலிகளின் நிலைப்பாட்டை மேலும் தெளிவுபடுத்துகிறது....... .......போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் சம்பந்தமான சர்வதேச சட்டங்களின் பயன்பாடு, அது தொடர்பான எல்ரிரிஈயின் அந்தஸ்து பற்றிய விளக்கங்களை நாம் பெற்றுக்கொள்ள விரும்புகிறோம். கண்காணித்தல் (MONITORING), அறிக்கையிடல் (EPORTING), அனுசரித்தல் (COMPLIANCE) திட்டங்களை போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் இணைந்து பணியாற்ற விரும்புகின்றோம். சிறுவர்கள் சம்பந்தமான நோக்கங்கள் அரசியல் இலாபத்திற்காகப் பயன்படுத்தலாகாது என்பதில் நாம் உறுதியாய் உள்ளோம். அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் பரப்பப்படும் வதந்திகள் ஆதாரமற்ற தகவல்கள் சிறுவர்கள் பாதுகாப்புத் திட்டத்திற்கு உதவமாட்டா.***

தெற்கு ஆசிய மனித உரிமைகளுக்கான ஆவண மையம் (SOUTH ASIA HUMAN RIGHTS DOCUMENTATION CENTRE) தனது புதுடில்லி அலுவலகத்தில் வெளியிட்ட 13-18 ஏப்பிரல், 2004 செய்தித்தாளில் சிறிலங்காவின் பொலிஸ் படையினருக்கு எதிராகப் பொதுமக்கள் செய்யும் முறைப்பாடுகளில் சித்திரவதை முதலிடம் பெறுவதாகவும், சிறுவர்களும் பொலிஸ் நிலையத்தில் சித்திரவதை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறுவர்களுக்கு எதிரான சிறிலங்கா பொலிசாரின் குற்றச்செயல்கள் எண்ணிக்கையிலும் கொடூரத்திலும் உயர்ந்து செல்வதாகவும் இந்த ஆவண மையச் செய்தித்தாள் தெரிவிக்கிறது.

அமெரிக்கா படைநடவடிக்கை எடுத்த வளைகுடாப் போர், சோமாலியா மற்றும் பொஸ்னியா போர்களில் 17 வயதுப் போர் வீரர்களைப் பயன்படுத்தியதாக அந்த நாடு ஒத்துக்கொண்டுள்ளது. 1989இல் நிறைவேற்றப்பட்ட ஐ.நா சிறுவர் உரிமைச் சட்டத்தின்படி (UN CONVENTION ON THE RIGHTS OF THE CHILD) எந்தவகைப் போர் நடவடிக்கையிலும் அரசுகளும் கிளர்ச்சியாளர்களும் 18 வயதுக்குக் குறைந்தோரைச் சேர்க்கக்கூடாது. 18 வயதுக்குக் குறைந்த போராளிகள் சிறுவர்களாகக் கணிப்பிடப்படுவர். ஐக்கிய இராச்சியமோ தனது 17 வயதுப் போர் வீரர்களை களத்திற்கு அனுப்புவதைத் தனது வழமையாகக் கொண்டுள்ளது. 2003 ஆண்டில் 9,515 பத்தொன்பது வயது வரையிலான புதிய படையினர் ஐக்கிய இராச்சியப் படைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் 3,225 பேர் பதினாறு வயதினராவர். படைக்கு ஆட்சேர்க்கும் ஐக்கிய இராச்சிய இராணுவ அதிகாரியான கேணல் அலிஸ்ரேயர் லூடன் (COL.ALISTAIR LOUDON) கூறுவது யாதெனில் "இளவயதில் இணைவோர் கூடுதல் காலம் இராணுவத்தில் தங்கியிருக்கின்றனர், அவர்களுக்குப் பயிற்சி வழங்குவதும் எளிதாக இருக்கிறது." படையில் இணைய ஊக்குவிக்கும் ஒரு இணையத்தளத்தை ஒரு மில்லியன் பவுண் செலவில் 13வயதுச் சிறுவர்களைக் குறிவைத்து ஐக்கிய இராச்சிய இராணுவம் இன்றும் நடத்துகிறது.

1989இல் நிறைவேறிய ஐ.நா உரிமைச் சட்டத்தின்பின் 2000இல் சிறுவர் உரிமைகள் - மாற்று விதிமுறைகள் என்பன ஐ.நாவால் நிறைவேற்றப்பட்டன. இது நிறைவேறியபோது 'இராணுவ நடவடிக்கைகளுக்குத் தேவை ஏற்படும்போது போராளிச் சிறுவர்களைப் பயன்படுத்தும் உரிமையைத் தனது நாடு விட்டுக்கொடுக்காது' என்று ஐக்கிய இராச்சிய அரசு தெரிவித்தது. சிறுவர்களைப் படையில் சேர்ப்பதற்கும், போரில் பயன்படுத்துவதற்கும் எதிரான கூட்டமைப்பை ஐக்கிய இராச்சியத்தின் இந்த நிலைப்பாட்டை கடுமையாக எதிர்த்தது. அனைத்துலக அபய ஸ்தாபனமும் ஐ.சி.ஆர்.சியும் இக் கூட்டமைப்பு உறுப்பினராவர். மாற்று விதிமுறைகள் நிறைவேற்றப்படுமுன் நடந்த பேச்சுக்களின்போது அமெரிக்க, ஐக்கிய இராச்சிய, அவுஸ்திரேலிய அரசுகள் 18 வயதிலும் குறைந்தோரை சேர்ப்பதில்லை, போரில் பயன்படுத்துவதில்லை என்ற உத்தரவாதத்தை வழங்க மறுத்து விட்டன. அத்தோடு 18 வயதிற்குக் குறைந்தோரை மேற்கூறிய தேவைகளுக்குப் பயன்படுத்துவதை முற்றாகத் தடைசெய்யும் முயற்சியையும் மூன்று நாடுகளும் கூட்டாக நிறுத்திவிட்டன.

ஆகையால் போராளிச் சிறுவர்கள் விவகாரம் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. விடுதலைப்புலிகள் போன்ற அமைப்புக்கள் மீதான கடுமையான குற்றச்சாட்டுக்களும் இதன்பால் எழுந்தவையே என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை.

(06ம் பக்கத் தொடர்ச்சி...)

நடைமுறையில் ஒற்றையாட்சி யாப்பாக அமைந்தபோதிலும் அது ஓர் ஒற்றையாட்சி யாப்புத்தான் என்ற சட்ட வரையறையைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் 1972ஆம் ஆண்டு யாப்பில் இலங்கை ஓர் "ஒற்றையாட்சி" நாடுதான் என்ற இறுக்கமான வரையறை வகுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து உருவான 1978ஆம் ஆண்டு யாப்பில் மேற்படி ஒற்றையாட்சி நாடு என்ற இறுக்கமான வரையறை இருந்ததுடன் மேலும் இரண்டு வரையறைகளினால் அது இன்னும் கெட்டியாக்கப்பட்டது. அதாவது ஒற்றையாட்சி முறையை மாற்றுவதாயின் நாடாளுமன்றத்தின் மொத்த ஆசனங்களில் 2/3 பங்கு பெரும்பான்மை தேவை என்பது மட்டுமே இருந்ததென்பதற்குப் பதிலாக 1978ஆம் ஆண்டு யாப்பில் அந்த 2/3 பங்கு பெரும்பான்மையுடன் கூடவே பொதுஜன வாக்கெடுப்பிலும் மாற்றத்திற்கான அங்கிகாரம் பெறவேண்டும் என்ற அம்சம் சேர்த்துக்கொள்ளப்பட்டது. அத்துடன் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் எந்தொரு கட்சியும் 2/3 பங்கு பெரும்பான்மைப் பலத்தை பெறமுடியாது என்பது மேலும் ஒரு விடயம்.

ஆதலால் இத்தகைய தலைகீழ் வளர்ச்சிக்கு எதிராக பேசித் தீர்வுகாண முடியாது என்ற நிலையில் ஆயுதம் தாங்கிப் போராடுவதே ஜனநாயகமாகியது.

யதார்த்தம் இப்படி இருக்கையில் ஆயுதப் போராட்டத்தின் மூலம் தமிழ்மக்களின் கரங்கள் பலப்பட்டுச் செல்லும் பின்னணியில் சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் நோக்கில் சிங்கள அரசு பேச்சுவார்த்தை மூலமான தீர்விற்கு தயார் என்று பாசாங்கு செய்த பின்னணியில் தமிழீழ விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை மூலமான ஒரு தீர்விற்கான வாய்ப்பை மீண்டும் அளித்தனர்.

வரலாற்றனுபவங்களின் பிரகாரம் விடுதலைப்புலிகள் சிங்கள அரசை நம்பத் தயாரில்லை. ஆனால் சிங்கள அரசு இம்முறை சர்வதேச சமூகத்தை ஏமாற்றிக் காரியம் சாதிக்க முற்படுகின்றது. கடந்த மூன்றாண்டு காலமாக பேச்சுவார்த்தைகளில் எதுவித முன்னேற்றமும் இல்லாமல் சிங்கள ஆட்சியாளர்கள் தமது ஏமாற்று வித்தைகளை சர்வதேச சமூகத்தின் முன் அரங்கேற்றி வருகின்றனர். உட்கட்சிப் பிரச்சினைகள் என்றும் அரசாங்கத்தை அமைத்துள்ள கூட்டணிக் கட்சிகளுக்கிடையேயான பிரச்சினைகள் என்றும் வசதிற்கேற்ப பிரச்சினைகளைக் கூறி, பிரச்சினைகளுக்கு வியாக்கியானங்களைக் கூறி ஒட்டுமொத்த ஏமாற்று வித்தையை ஜனாதிபதி சந்திரிக்கா அரசாங்கம் புரிந்துவருகிறது. தமது தொடர் ஏமாற்று வித்தைகளுக்கு சுனாமியை துணைக்கு இழுத்து அரசியற் தீர்வுகாணல், இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தல் என்பவற்றை எல்லாம் ஒத்திவைத்துவிட்டு சுனாமி நிவாரணப்பணி பொதுக்கட்டமைப்புத் திட்டம் ஒன்றை இப்போதும் ஒரு அரிய பெரிய விடயமாகப் பூதாகரப்படுத்திக் காட்டிவருகின்றது. இது மனிதாபிமான அடிப்படையிலான ஒரு சாதாரண நிவாரணப் பணித்திட்டமே தவிர ஓர் அரசியற்தீர்வு ஏற்பாடல்ல.

இந்த மனிதாபிமானப் பணிக்கான திட்டத்தை ஒரு பூதாகர விடயமாகக் காட்டி அதனைச் செயற்படுத்த முற்படுவதே ஒரு பகீரதப் பிரயத்தனம் என்று இயம்பும் சிங்கள ஆட்சியாளரிடம் இருந்து தமிழ்மக்கள் தமது உரிமைகளை பேச்சுவார்த்தை வாயிலாக அடையலாம் என்று நினைப்பது இலவு காத்த கிளியின் கதையாய் முடிந்துவிடும். இப்போது நிலைமை பொறுமையின் எல்லையை எட்டிப் பார்க்கின்றது.

1987ஆம் ஆண்டு இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் கீழான தீர்வு தமிழ்மக்களை ஏமாற்றுவதாகவே காணப்படுகின்றது என்ற நிலையில் தியாகி திலீபன் சாகும்வரையான உண்ணாவிரதத்தை மேற்கொள்ள முற்பட்டபோது தனக்கு நெருக்கமானவர்களிடம் பின்வருமாறு கூறினார், "கரும்புலி மில்லரை நான்தான் இறுதியாக வழியனுப்பி வைத்தேன். அப்படி வழியனுப்பும்போது 'உனக்குப் பின்னால் நாங்களும் வருவோம்'." என்று தான் கூறியதாகக் கூறி தொடர்ந்தும் இந்த அக்கிரமங்களைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்ற நிலையில் அவர் சாகும்வரை உண்ணாவிரதமிருந்து தன் அரிய உயிரைத் தியாகம் செய்தார். இத்தகைய யதார்த்தத்தின் பின்னணியில் போராளிகள் சிங்கள அரசின் ஏமாற்று வித்தைகளைத் தொடர்ந்தும் சகிக்கலாமா என்ற கேள்வியுடன் காணப்படுகிறார்கள். ●

# தமிழர் தாயகத்தைத் துண்டாக்கும் சிங்கள குடியேற்றங்கள்

**சென்ற இதழின் தொடர்ச்சி**

**திருகோணமலை** மாவட்டத்தில் பேரினவாத சக்திகள் நிலச் சூறையாடலுக்கு வெறுமனவே திட்டமிட்ட விவசாயக் குடியேற்றங்களை மாத்திரம் நம்பியிருக்கவில்லை. மாறாக அதனுடன் இணைத்து சட்டவிரோத குடியேற்றங்களிலும் கவனம் செலுத்தினர். சட்டவிரோத குடியேற்றங்கள் ஒருவகையாக மட்டும் நடைபெறவில்லை. பல வழிகளினாலும் நடைபெற்றது. சட்டவிரோத விவசாயக்குடியேற்றம் கோவில் காணிகளில் குடியிருப்புகளுக்கான குடியேற்றம், வியாபாரக் குடியேற்றம், மீனவர் குடியேற்றம் என பல வழிகளினாலும் நடைபெற்றது. சட்டவிரோத விவசாயக் குடியேற்றங்கள் இதில் முதன்மை வகித்தன. இக்குடியேற்றங்களைப் பொறுத்தவரை பௌத்த மதகுருமார்கள், கிராமசேவையாளர்கள், காணி அதிகாரிகள், உதவி அரசாங்க அதிபர், அரசாங்க அதிபர் உட்பட அரசாங்க உத்தியோகத்தர்கள், அரசியல்வாதிகள் என்போரின் கூட்டுப் பங்களிப்பு இருந்தது. பௌத்த குருமார்களே அதன் சிருஷ்டி கர்த்தாக்களாக இருந்தனர். ஏனையவர்கள் அவரின் செயற்பாட்டிற்கு உதவியாகவும், பக்கபலமாகவும் இருந்தனர். குடியேறிய மக்களோடு தொடர்ச்சியாக வசித்தவர்களும் பௌத்த மதகுருமார்களே ஆவர்.

முதலில் பௌத்த பிக்கு குடியேற்றத்திற்கான பிரதேசத்தினை தெரிவுசெய்வார். அப்பிரதேசம் நீர்ப்பாசன வசதிகளைப் பெறக்கூடிய வகையில் குளங்களுக்கு அருகாமையிலும் அருகிலுள்ள சிங்களப் பிரதேசங்களோடு போக்குவரத்துச் செய்யக்கூடிய நிலையிலும் தெரிவுசெய்வார்.

இரண்டாவது கட்டத்தில் 50பேருடன் அப்பிரதேசத்திற்கு வருவார். பிரதேசத்தின் மையத்தில் ஒரு பௌத்த விகாரையினைக் கட்டுவார். அவ்விகாரை யினைச் சுற்றி 50பேரின் குடும்பங்களுக்கும் 50 கொட்டில்கள் கட்டப்படும். அவர்கள் விவ சாயம் செய்வதற்கான விவசாய நிலங்களும் ஒதுக்கிக் கொடுக்கப்படும்.

**- மதுசங்கர் -**

மூன்றாவது கட்டத்தில் அந்த 50பேரும் தங்களுடைய உறவினர்களை அழைத்து வருவார்கள். அவர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுவதுடன் விவசாயம் மேற் கொள்ளுவதற்கான காணிகளும் ஒதுக்கிக் கொடுக்கப்படும். அப்பிரதேசத்துக்கென ஒரு சிங்களப் பெயரும் தெரிவுசெய்து சூட்டப்படும்.

நான்காவது கட்டத்தில் குடியேற்றப் பிரதேசம் அரசாங்க நிர்வாகத்தோடு தொடர்புபடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். குடியேற்றங்களை உருவாக்கிய பௌத்த பிக்கு தனது அரசியல் செல்வாக்கினைப் பயன்படுத்தி அக்குடியேற்றப் பிரதேசத்திற்கென ஒரு பாடசாலையினை உருவாக்குவார். தபால்நிலையம், சுகாதார நிலையம், கூட்டுறவுச் சங்கம், பொலிஸ் நிலையம் என்பவற்றையும் உருவாக்குவார். ஏனைய சிங்களப் பிரதேசங்களோடு தொடர்புபடக்கூடிய வகையில் வீதிகளை உருவாக்கி போக்குவரத்துச் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். அரசாங்க அதிகாரங்களைப் பயன்படுத்தி குளங்களைத் திருத்தல், வாய்க்கால்களை அமைத்தல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படும். அதேவேளை மக்களை இணைத்து சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், விவசாயச் சங்கங்கள் என்பனவும் உருவாக்கப்படும். இவற்றையெல்லாம் பயன்படுத்தி பௌத்த பிக்கு, கிராம சேவையாளர் பிரிவு ஒன்றினையும் உருவாக்குவார். இறுதியில் ஒரு சிங்களக் கிராமமாகவே பரிணமித்துவிடும்.

ஐந்தாவது கட்டத்தில் அக்கிராமத்திற்கு அரசியல் அந்தஸ்த்து கொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அக்கிராமம் ஏற்கனவே உள்ள சிங்களப் பிரதேச சபையுடன் இணைக்கப்படும். அது முடியாவிடின் இதுபோன்ற குடியேற்றப் பிரதேசங்களை இணைத்து புதிய பிரதேசசபை உருவாக்கப்படும். பிரதேசசபைகள் அரசியல் தன்மைகள் கொண்டவையாதலால் தெரிவுசெய்யப்படும் அரசியல்வாதிகள் மேலும் மேலும் அப்பிரதேசங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வர். இதனால் பொருளாதார ரீதியாக அப்பிரதேசம் மேலும் மேலும் ஸ்திரமுடையதாக வளர்ச்சியடையும். அதேவேளை இப்பிரதேசம் ஏற்கனவே உருவாக்கப் பட்ட சிங்களத் தொகுதியுடன் இணைக்கப்பட்டு மத்திய அரசாங்கத்துடன் தொடர்புபடுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். அரசியல் சக்திகளுடன் பிரதேசங்கள் தொடர்புபடத் தொடங்கியதன் பின்னர் குடியிருப்புக் காணிகளுக்கு சட்டரீதியான பத்திரங்களும் வழங்கப்படும். இதன் பின்னர் குடியேற்றவாசிகள் அப்பிரதேசத்தின் சட்டரீதியான பிரஜைகளாக மாறிவிடுவார்கள்.

ஆறாவது கட்டத்தில் ஏற்கனவே உள்ள அரசியல் நிலமைகளைப் பயன்படுத்தி அருகிலுள்ள தமிழ்க் கிராமங்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படும். அத் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தமிழ்மக்கள் கிராமங்களை விட்டு வெளியேறுவார்கள். சிங்களக் குடியேற்றவாசிகள் அதனையும் கைப்பற்றி தமது பிரதேசத்துடன் இணைத்துக்கொள்வார்கள்.


எல்லா சட்டவிரோத குடியேற்றப் பிரதேசங்களிலும் இவ்வாறு நடைபெறுகின்றது எனக் கூறமுடியாது. இது பொதுவாக நடைபெறுகின்ற முறை. வேறுசில பிரதேசங்களில் அவ்வவ் பிரதேசங்களுக்கு ஏற்ப அணுகுமுறைகள் மாற்றமடையலாம். குறிப்பாக போர் நடக்கும் எல்லைப் பிரதேசங்களில் படையினரே நேரடியாக ஆட்களைக் கொண்டுவந்து குடியேற்றுவது உண்டு. அக்குடியேற்றங்களைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளிலும் அரச இயந்திரம் நேரடியாக முழுமூச்சாக ஈடுபடும். இதற்கு நல்ல உதாரணம் மணலாறு என்ற தமிழ்ப் பிரதேசம் வெலி ஓயா என பெயர் மாற்றப்பட்டமையாகும். வெலி ஓயா குடியேற்றம் 1984இல் லலித் அத்துலத் முதலி தேசிய பந்தோபஸ்து அமைச்சராக இருந்தபோது உருவாக்கப்பட்டது. இதற்காக நால்வர்கொண்ட குழு அரசினால் உருவாக்கப்பட்டது. தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசநாயக்கா, கைத்தொழில் அமைச்சர் சிறில் மத்தியூ, மகாவலி அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவர் பண்டித்த ரத்தினா ஆகியோரே இந்நால்வர் ஆவர்.

1988ஆம் ஆண்டு மார்ச் 28ம்திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் மணலாற்றிலுள்ள 42 தமிழ்க் கிராமங்களில் வாழ்ந்த 13,208 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டனர். இதன் பின்னர் 1988 ஏப்ரல் மாதம் 16ம் திகதி தொடக்கம் மணலாறு என்பது வெலி ஓயா என மாற்றப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைந்திருந்த இப்பிரதேசத்தின் நிர்வாகச் செயற்பாடுகள் அனைத்தும் அனுராதபுர மாவட்டத்திற்கு மாற்றப்பட்டது. அனுராதபுரம் நகரத்துடன் தொடர்புபடக்கூடிய வகையில் உயர்தரத்துடன் கூடிய போக்குவரத்துப் பாதைகளும் அமைக்கப்பட்டன. பல தமிழ்க் கிராமங்களின் பெயர்களும் சிங்களத்திற்கு மாற்றப்பட்டன. மணலாறு வெலி ஓயாவாக மாறியதுபோல மண்கிண்டிமலை ஜானகபுர எனவும் தண்ணிமுறிப்பு பராக்கிரமபுர எனவும் மாற்றப்பட்டது.

1977இன் இன அழிப்பு நடவடிக்கைகளின்போது பாதிப்படைந்த இந்திய வம்சாவழி தமிழ்மக்கள் குடியேறிய கென்ற் பண்ணை, டொலர் பண்ணையிலிருந்து அவர்கள் வெளியேற்றப்பட்டு அவ்விடங்களில் சிங்கள கிரிமினல் குற்றவாளிகள் குடியேற்றப்பட்டனர்.

போர் நலன்களை மையமாக வைத்து உருவாக்கப்பட்ட குடியேற்றங்கள் இலங்கையில் மட்டும் நடப்பவையல்ல. பொதுவாக எல்லா விடுதலைப் போராட்டங்களிலும் நடைபெறுபவை. பாலஸ்தீன விடுதலைப் போராட்டம். இதற்கு முகம்கொடுப்பதற்காக அதிகவிலை கொடுக்கவேண்டி ஏற்பட்டது. தற்போதுங்கூட மேற்குக்கரை, காஸா போன்ற பகுதிகளில் விலைகளைக் கொடுத்து வருகின்றது. போர்ச் செயற்பாட்டிற்கு ஒரு மக்கள் பின் பலத்தினைப் பெறுவதே இதன் நோக்கம் ஆகும்.

மேற்கூறிய சட்டவிரோத விவசாயக் குடியேற்றங்களுக்கு புறம்பாக திட்டமிட்ட விவசாய குடியேற்றத் திட்டங்களின் நீட்டமாகவும், சட்டவிரோத விவசாயக் குடியேற்றங்கள் நடைபெறுவதுண்டு. இந்த நீட்டம் அருகருகே உள்ள அரசாங்க காணிகளை குடியேற்றவாசிகள் அடாத்தாகப் பிடிப்பதன் மூலமாகவும் தமிழர்களைத் துரத்திவிட்டு அக் காணிகளைக் கைப்பற்றுவதன் மூலமாகவும் நடைபெறுகின்றது. திருகோணமலை மாவட்ட குடியேற்றப் பிரதேசங்கள் அனைத்திலும் இவ் நீட்டங்களைக் காணலாம். இதற்கு அதிகளவு பலியாகுபவை இந்துக் கோவில்களுக்குரிய காணிகள்தான். ஆவணங்கள் போதுமானளவு இல்லாமலும், பராமரிப்பு போதுமானளவு இல்லாமலும் உள்ள இக்காணிகள் குடியேற்றவாசிகளுக்கு இலகுவான இலக்குகளாக மாறிவிடுகின்றன. இதற்கு நகர்புறக் காணிகள் மட்டுமல்ல நகரக்காணிகளும் இலக்காகி இருக்கின்றன. திருகோணமலை நகரக்காணிகள் இதற்கு நல்ல சான்று. திருகோணமலை காளிகோவில் அம்பாள் தீர்த்தமாடும் முற்ற வெளிக் கடற்கரை இன்று "சமுத்திரகம"வாக மாறியுள்ளது. இவைபற்றிய விபரங்களை அடுத்த இதழில் பார்ப்போம்.



# ஆனையிறவும் அந்தநாட்களும்

உண்ணிவெட்டை. அந்த வெட்டையில் உண்ணிகளோடு பட்ட துயர் தாளாமல் நாம் இட்ட காரணப்பெயர் இது.

பரந்தனிலிருந்து இயக்கச்சி போகும்போது ஆனையிறவுப் பெயர்ப் பலகையைக் கடந்தவுடன் வடகிழக்குத் திசையில் பாருங்கள் நீண்ட நீர்பரப்புக்கு அப்பால் திட்டாக ஒரு நிலம் தெரியும். அங்கே நாம் நின்றோம் 1992ஆம் ஆண்டின் கடுங்கோடை காலத்தில்.

ஆனையிறவை விடமாட்டோம் என்று சிறிலங்கா படையினரும், அவர்களை அங்கிருக்க விடவேமாட்டோம் என்று நாமும் வரிந்து கட்டிக்கொண்டு அந்த வெளியில் கிடந்தோம்.

எங்களுடைய கண்ணுக்கு இராணுவ நடமாட்டம் தெரியும். நாம் எழுந்து நடந்தால் எங்களையும் எதிரிக்குத் தெரியும். எனவே எழும்புவதில்லை. குந்தியிருந்து அவதானிக்க ஒரு அகழி. உணவுண்ண, ஓய்வெடுக்க அதனோடு இணைந்தபடி இன்னோர் அகழி. காலையிலிருந்து இருளும்வரை எங்களுடைய அனைத்துச் செயற்பாடுகளும் நடமாட்டங்களும் அந்த இரு அகழிகளுக்குள்ளே மட்டுமே. மூப்படைந்தோர் போல முதுகை வளைத்துத்தான் அகழிகளுள் நடந்தோம். நில மட்டத்தோடு விழிகளை வைத்துத்தான் கண்காணித்தோம். வீசுகின்ற காற்றில் செறிந்திருக்கும் உப்பு விழிகளோடு மோதி கண்ணீர் வடிந்துகொண்டிருக்கும். முகம், காது, கழுத்தெல்லாம் உப்பு படிந்துவிடும். வழியும் வியர்வையைக் கையால் வழித்துத் துடைத்தோமோ, அவ்வளவுதான். உப்புப் படிவுகளால் முகம் உரசப்பட்டு உரசல்களில் உப்புப்பட்டு, தீப்பற்றி எரிவதுபோல் முகம் எரியும்.

மட்டுப்படுத்தப்பட்டளவு தண்ணீர் சிறு கொள்கலன்களுள்ளே இருக்கும். அளந்து குடிக்காமல் அவசரப்பட்டு குடித்து முடித்தோமோ இருளும்வரை வாயுலரக் கிடக்கவேண்டியதுதான்.

வியர்க்கின்றது என்று வெளியில் எழுந்து உலாவமுடியாது. திறந்திருக்கும் அகழிகளில் கரந்துறையும் எங்களை வெயில் மட்டுமல்ல சுடும். சூரியன் மேலுயர மேலுயர நிலம் வெப்பமடையத் தொடங்கும். சூடேறிய நிலம் வெளிவிடும் வெப்பத்தால் அகழிகளுக்குள் வெந்துபோய்க் கிடந்தோம்.

**ஒருதடவை அது தவழ்ந்து உயர்ந்து சற்றுத் தொலைவில் குண்டுகள் விழுவது தெரிந்தது. Y-12 இப்போது பெரிய வட்டமெடுத்துச் சுற்றத் தொடங்கியது.**

**"இந்தச் சனியன் விழுந்து வெடிக்காதோ?"**

**யாரோ ஒருத்தியின் குரல் கேட்டது.**

**விழுந்துபோக! நாசமாய்ப் போக!**

**எல்லோர் மனங்களும் சாபமிட்டன.**

**உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தோம். தாழ்ந்து பறக்க எத்தனிக்கையில் அது வானில் வெடித்துச்சிதறி துண்டு துண்டுகளாக ஆடியாடி விழுந்து கொண்டிருந்தது.**

சற்றுத் தூரத்தே ஒரே ஒரு ஆலமரமும், எமக்கு அண்மையாக ஒரு காய்ந்த பூவரசு வேலியும் இருந்தது. அவற்றின் சருகுகள் காற்றிலே பறந்து நிலம் முழுவதும் பரந்து கிடந்தன. சருகுகளின் கீழே படைபடையாக உண்ணிகள் கிடந்தன. அவற்றின் இலக்கு எங்களுடைய கை, கால் விரல் இடுக்குகள் தொப்புள். எப்படித்தான் அவை எம்மேல் ஏறுகின்றனவோ?

அணிந்திருக்கின்ற ஒற்றை உடையைத் தொலைதூரக் கிணறொன்றுக்கு மூன்று, நான்கு நாட்களுக்கு ஒருமுறை தவழ்ந்துபோய் தோய்த்துலரவிட்டு குளித்துமுடிய அதையே அணிந்துகொண்டு வருகின்ற எங்களுக்கு, ஒரேயொரு சிறு கொள்கலன் நீரோடு ஒருநாள் முழுவதும் வாழும் எங்களுக்கு இது பெரிய சோதனை.

உண்ணிகள் எம் இரத்தத்தை உறுஞ்சும்போது உண்டாகும் வலிதான் அவை எம்மீது ஏறி நிற்கின்றன என்று உணர்ந்தும். உண்ணியைப் பிடுங்கியெடுத்தால் கடிகாயத்திலிருந்து இரத்தம் வடியும். இருக்கின்ற ஒரு கொள்கலன் தண்ணீரை ஊற்றிக் கழுவவா முடியும்? கைகளால் துடைத்துவிட்டு நிமிர வேறோரு விரலிடுக்கில் புதிதாக வலி தெரியும்.

அந்த உப்புவெளியை மீட்க சிங்களப் படைகளோடு மட்டுமா போரிட்டோம்...?

********

அந்தக் காலத்தில் ஆட்களின் தோற்றத்தைப் பார்த்து இவர் எந்தப்பகுதிக் காவலரணிலிருந்து வருகின்றார் என்று இனங்காணலாம்.



தோலின் நிறம் பெரியளவில் வேறுபடாமல், புத்துணர்வோடு நின்றால் அவர் பலாலிப் பகுதிக் காப்பரணிலிருந்து வந்தவராக இருக்கும்.

தலைமயிர் செம்படையாகி தோல் கறுத்து வரண்டு விழிகள் சிவப்பேறி பாதங்கள் பிளந்தபடி ஒருவர் வருகின்றாரா? ஐயம் வேண்டாம். அவர் ஆனையிறவிலிருந்துதான் வருகின்றார்.

பாலைவனப் பயணிகளாக எங்கள் வாழ்க்கை சிலகாலம் ஓடியது. இம்முறை எமக்கு ஒதுக்கப்பட்ட காப்பரண் பகுதியிலிருந்து கண்ணுக்கெட்டிய தொலைவில் ஒரு தென்னந்தோப்புத் தெரிந்தது. ஆஹா! அதுவே போதும்.

தென்னந்தோப்பிலே கிடந்த துரவிலிருந்துதான் எமக்குத் தேவையான நீரை எடுத்துவர வேண்டும். இன்று துரவுக்குப்போய் நீரள்ளிவருவது யார் என்று பலத்த போட்டியின் பின் முடிவெடுக்கப்படும். நீரள்ளப்போகின்ற இருவரும் துரவுத் தண்ணீரில் குளித்துவிட்டு தென்னைகளில் ஏறி இளநீர் பிடுங்கிக் குடித்துவிட்டுத்தான் வருவார்கள். இருள் பிரியமுன்னர் இத்தனையும் நடந்துவிடும்.

அதிகாலையில் அவர்கள் சுமந்துவரும் ஒருகலன் நீரில் ஒரு பகல் முழுவதும் நாங்கள் குடித்து உண்டபின் கைகழுவி (பின்னர் மட்டும்தான். முன்னர் கழுவுவது என்ற கதையே கிடையாது) துரவுக்குப் போகாத ஏனையவர்கள் பல் தீட்டி, முகம் கழுவி இயற்கைக்கடன் கழிக்கப் பயன்படுத்தி மறுநாள் அதிகாலைதான் மறுபடி நீரள்ளப் போவோம்.

அன்று அரைமிருட்டில் துரவுக்குப் போனவர்களுக்கு ஓர் அற்புதமான யோசனை பிறந்தது. திட்டம் உடனடியாக அரங்கேறியது. தேங்காய்கள் பிடுங்கி வீசப்பட்டன. தண்ணீருக்குப் பதிலாக இளநீரால் கலன் நிரப்பப்பட்டது.

காப்பரனில் நின்றவர்களுக்குப் புழுகம் தாளவில்லை. அரிய திட்டமொன்றை அரங்கேற்றிய இருவரையும் ஏனையவர்கள் மெச்சிக்கொண்டார்கள். இளநீராலே பல் தீட்டி, முகம் கழுவி, கைகழுவி, கால்கழுவி தேவைக்கும் மேலாக குடிகுடியென்று குடித்துத் தள்ளினோம். இரவு மறுபடி போய் நீரள்ளி வரும் திட்டம் ஏற்கனவே இருந்ததால் அளவுக் கட்டுப்பாடு பற்றி எவரும் அச்சமடையவில்லை.

வழமைபோல கலன் வெயிலுக்குள் கிடந்தது. எங்களுக்கே நிழல் இல்லை. நேரம் மதியத்தை நெருங்கத் தொடங்கியது. காப்பரணில் நின்றவர் கலனைச் சரித்து வாயில் ஊற்றினார். கடகடவென நாலைந்து மிடறு விழுங்கியவர் கடைசியாக வாயில் எஞ்சியதை பாய்ந்து துப்பினார்.

"கள்ளுக் குடிச்சமாதிரிக் கிடக்கு"

அதெப்படி காலையில் இளநீராக இருந்தது மதியம் கள்ளாகும் ? குடித்துப் பார்த்த எல்லோரும் முகத்தைச் சுளித்தார்கள். வெயில் ஏற ஏற இளநீர் நொதிக்கத் தொடங்கிவிட்டிருந்தது. புளித்த இளநீரைக் குடித்ததால் எல்லோருக்குமே நாவரண்டது. வாய் கழுவக்கூட நீரில்லை. எல்லாம் இனி இரவுதான்.

தண்ணீர் விடாயில் தாராளமாகக் குடித்தவருக்கு வயிறு குழப்பியது. இயற்கைக்கடன் கழிப்பதற்கும் இளநீர்தான், வேறு வழியேயில்லை.

இருளும்வரை எப்படியாவது சமாளித்தாக வேண்டும். கடும் யோசனையுடன் காப்பரணில் நின்றவரின் காலில் ஏதுவோ கடித்த வலி. குனிந்து பாத்தால் எறும்புப் பட்டாளம் ஒன்று கலனை மூடியிருந்தது. ஒன்றிரண்டு இவரின் பாதங்களையும் சுவைபார்த்தன. துள்ளிக் குதித்து இடம்மாறி நின்று உற்றுப் பார்த்தால் தொலைவில் இருந்து நீண்ட வரிசையில் அந்தக் கரிய பெரிய எறும்புகள் வந்துகொண்டேயிருப்பது தெரிந்தது.

அடுத்த இலக்கு நாங்கள்தான். குடிப்பது தவிர்ந்த ஏனைய வேலைகளுக்கு இளநீரைப் பயன்படுத்தியவர்களின் விழிகள் பிதுங்கின.

எதைச் சொல்ல? ஆனையிறவுக்காக நாம் பட்ட வலிகளில் எதைச் சொல்ல? எதை விட?

*********

இப்போது பலவேகய–02 நடந்துகொண்டிருக்கிறது. ஆனையிறவுப் படைத்தளத்தை விரிவாக்கும் முயற்சியில் சிறிலங்கா இராணுவமும், தடுக்கும் முயற்சியில் நாமும் அந்த வெளியில் மறுபடி ஒரு பெருஞ்சண்டை.

அன்றைய சண்டை அப்போதுதான் முடிந்தது. நல்ல பகல்வேளை. சண்டை செய்த களைப்பு, பசி, தாகம் எல்லாம் வாட்ட நடந்து வந்துகொண்டிருந்தோம். திடீரென வானத்தைக் கருமேகங்கள் மூடின. சடுதியில் மழை பெய்யத்தொடங்கியது. கையில் அகப்பட்ட காவோலைகளை (காய்ந்த பனையோலை) தலைக்கு மேலே குடையாகப் பிடித்தோம். மழையோ சிறு மழையல்ல. மாரிமழைபோல பொழிந்தது. காவோலையிலிருந்து வழிந்த நீரை ஏந்தி குடிக்கத் தொடங்கியவரும், முகம் கழுவியவரும், ஓலையை எறிந்துவிட்டு ஆனந்தமாக நனைந்தவருமாக எங்களை நாங்கள் மறந்தோம்.

"மழைக்க நனையாதே. மழைக்க நனையாதே" என்று தூரத்தே ஒலித்த அணித் தலைவியின் குரல் இப்போது எங்களை நெருங்கியது. அவரும் நனைந்தபடி. எங்களுக்குச் சிரிப்புவந்தது, அவரும் சிரித்துவிட்டார். எல்லோரும் பலமாகச் சிரித்தோம்.

வருடத்தின் நடுப்பகுதியில் உடலை வரட்டும் கடுங்கோடையில் எப்படி இப்போது மழை பெய்கின்றது.? இயற்கைக்கு நன்றி சொன்னோம்.

மழை விட்டது. களைப்புப் பறந்த இடம் தெரியவில்லை. மீண்டும் நடந்தோம். வானிலே பேரொலி எழுந்தது. Y-12 வருகின்றது.

அருகிருந்த அலம்பல் பற்றைகளுள் எம்மை மறைத்துக்கொண்டோம். மிகப்பெரிய அணி இது. ஒரு குண்டு அருகில் விழுந்தால்கூட இழப்பு அதிகம்தான். ஓடி வேறிடத்தில் மறைய நேரமில்லை. காப்புகளுமில்லை. எல்லோருடைய வாய்களும் Y-12 ஐச் சாபமிட்டன.

அது ஒருதடவை தாழ்ந்து உயர்ந்ததால் மூன்று குண்டுகள் ஆடியாடி வந்து வீழும். குண்டு வீழ்ந்து வெடித்த இடத்தில் தென்மராட்சியின் தென்னந்தோப்புக்களிடையே வெட்டப்பட்டுள்ள துரவுகள்போல் ஆழமும் அகலமுமான குழிகள் உருவாகும். எங்களிடையே அந்த மூன்றும் விழுந்தால் போர்முனையில் மகளிர் படையணியின் பலம் குறைந்துவிடும்.

ஒரு தடவை அது தாழ்ந்து உயர்ந்து சற்றுத்தொலைவில் குண்டுகள் விழுவது தெரிந்தது. Y-12 இப்போது பெரிய வட்டமெடுத்துச் சுற்றத்தொடங்கியது.

"இந்தச் சனியன் விழுந்து வெடிக்காதோ?" யாரோ ஒருத்தியின் குரல் கேட்டது. விழுந்துபோக! நாசமாய்ப்போக! எல்லோர் மனங்களும் சாபமிட்டன. உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தோம். தாழ்ந்து பறக்க எத்தனிக்கையில் அது வானில் வெடித்துச் சிதறி துண்டு துண்டுகளாக ஆடியாடி விழுந்துகொண்டிருந்தது.

நம்பவே முடியவில்லை. சிரித்துக் கூக்குரலிட்டோம். கடுங்கோடையில் பெய்த குளிர் மழையில் மறுபடியும் நனைந்தோம். "இது விழுந்ததுபோல ஆனையிறவும் ஒருநாள் விழும்" யாரோ ஒருத்தியின் குரல் கேட்டது. அது ஆன்ம வாக்கு. அண்ணனின் ஆற்றல் உணர்ந்தோரின் உள் மனக்குரல்.

இன்று எவருமேயில்லை அந்தப் பெருவெளியில். எதிரிகளுமில்லை, நாங்களுமில்லை.

அறுநூறு வருடங்களுக்கு முன்பிருந்ததுபோல, மறுபடியும் ஆனையிறவு நிம்மதியாக.

— மலைமகள் —

# நெஞ்சில் தீ சுமந்தும் சிரித்தவள்

– துளசிச்செல்வன் –

அவள் குறும்புக்காரி, ஏதாவது கதை சொல்லி மற்றவர்களை கொல்லெனச் சிரிக்கவைத்துவிடுவாள்.

சின்ன வயதில் சைக்கிள் ஓடப்பழகிய ஆரம்ப நாட்களில் இவளுக்குச் சைக்கிள் ஓடப்பழக்கியது அண்ணன்தான். மண் ஒழுங்கைகள் எல்லாம் அவன் சைக்கிளைப் பிடிக்க அவள் ஓடுவாள். ஒவ்வொரு அடிதூரம் போகவும், அவன் கையை விட்டுவிடுவானோ என்ற பயத்தில் திரும்பித் திரும்பிப் பார்ப்பாள்.

'நேர அந்த வீட்டைப்பார்... நேர அந்த வீட்டைப்பார்' என்று அண்ணன் அடிக்கடி கத்துவான். அவள் தயங்கித் தயங்கி நேரே பார்த்து ஓட முயன்றாள். அவன் கையை விட்டுவிடுவான். அண்ணன் பிடித்திருக்கிறான் என்று நினைத்தபோது ஓடியவள், திரும்பிப் பார்த்து அண்ணன் இல்லை என்றதும் அந்த இடத்திலேயே விழுந்து விடுவாள்.

இப்படி தத்தித் தத்தி ஓடிய சைக்கிள் வீட்டிற்கு கிட்டவுள்ள கடைக்குப் போகத்தொடங்கியது. வேலிப் பூவரசில் பிடித்து ஆரம்பமாகும் சைக்கிள் கடைக்குமுன் ஏற்றம் ஒன்றில் வேகம் குறைய குதிப்பாள். அந்த இடத்தில் ஆக்கள் நின்றுவிட்டால் சற்றுத் தூரம்சென்று வரும் மணலுக்குள் புதையவிட்டு வேகம் குறைத்து இறங்குவாள். அங்கிருந்து உருட்டியபடி கடைக்கு வந்துசேருவாள். கடையின் ஏற்றத்தடியில் இருந்து புறப்பட்டால் வேலிப் பூவரச மரத்தைப் பிடித்து நிறுத்துவாள். இப்படி அவள் தன் சைக்கிள் ஓடும் முயற்சியைக் கைவிடாமலும், உற்சாகம் குன்றாதும் தொடர்ந்தும் செய்துகொண்டேயிருந்தாள்.

இவளின் தோற்றத்தைப் பார்க்கும் யாரும் அத்தனை குறும்பு செய்வாள் என்று நினைக்கமாட்டார்கள். பாட்டியின் வளவுக்குள் களவாக இளநீர் பிடுங்கவென்று திட்டம் போட்டால் பாட்டியை சமாளிப்பது இவள்தான். பாட்டியிடம் பழைய கதை கேட்டு, தலை நுணாவச்செய்து, மடியில் படுக்க ஆசையென்று இவள் பாட்டியின் கவனத்தைத் திருப்ப, அண்ணன் இளநீர் பிடுங்கி மறைத்துவிட்டு சத்தம் இல்லாது சமிக்கை கொடுப்பான். இவளும் இரகசியமாய் போய் இளநீர் குடிப்பதில் பங்கெடுப்பாள்.

ஒருநாள் இளநீர் வெட்ட ஆரம்பிக்கின்றபோது அண்ணனின் கையில் மாறி வெட்டிவிட்டாள். இரத்தம் பெருக திட்டமெல்லாம் பிழைத்துப் போய்விட்டது. பிறகென்ன திரும்பவும் பாட்டியிடம்தான் ஓடிவரவேண்டியிருந்தது.

அப்பா கடற்தொழிலுக்குச் சென்றுவரும் காசில் அன்றாடப் பொழுதுகள் வறுமை இல்லாமல் கழிந்துகொண்டிருந்தன. இவள்தான் மூத்தபிள்ளை. இவளுக்குப்பின் இன்னும் இரண்டு தங்கைகள், சின்னக் குடும்பந்தான். ஆனாலும் சில நாட்கள் பசியோடும் கழிக்கவேண்டியிருந்தது.

வீட்டின் முழுச் சக்தியாக உழைத்துக்கொண்டிருந்த அப்பா திடீரென்று ஒருநாள் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டார். அப்பாவின் சாவோடு அம்மாவின் பூவும் பொட்டுமல்ல, எந்நேரமும் முகத்தில் தவழ்ந்த புன்னகையும்தான் உதிர்ந்துபோனது. வீட்டு நிலைமை நாளுக்கு நாள் மோசமானது.

வானம் கண்விழிக்க முன்னமே அம்மா கண்விழித்து எழத்தொடங்கினாள். வீட்டுக்குள் முடங்கிக்கொண்டு படுத்திருக்கும் மூன்று பிள்ளைச் செல்வங்களையும் கண்வளரும் கற்பனையோடு பார்ப்பாள். பின் தனது வேலைகளைச் சுறுசுறுப்பாக ஆரம்பிப்பாள்.

அரைகுறைத் தூக்கத்தில் இருக்கும் பிள்ளைகளிற்கு அம்மா பாத்திரம் தேய்க்கும் சத்தமோ, அல்லது வீடு கூட்டும் சத்தமோ மங்கலாகக் காதில்விழும். எழுந்துவந்து உதவிசெய்ய நினைத்தாலும் அம்மா விடமாட்டாள். "நீங்கள் படிச்சு நல்ல வேலை பார்க்கவேணும் போங்க... இதை நான் செய்யிறன்."

படித்து பயனுள்ளவளாகி இந்த மண்ணுக்குச் சேவைசெய்யும் ஒரு தாதியாக வரவேண்டும் என்ற ஆசையோடு அவள் வளரத்தொடங்கினாள். அம்மா எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு வயல் வேலைக்குப் போவாள். அங்கே சேற்றுக்குள்ளும் உச்சி வெயிலுக்குள்ளும் நின்று வேர்க்கக் களைக்க வேலைசெய்து வாட்டமாய் வீடு திரும்புவாள். வீடு வந்தாலும் மறுபடியும் வீட்டுவேலைகள் எல்லாவற்றையும் அவளே கவனிக்க வேண்டியிருந்தது.

நாளுக்கு நாள் அம்மா மெலியத் தொடங்கினாள். உருகி உருகி எலும்புகள் வெளியே தெரியும் அளவிற்கு வந்துவிட்டன. கன்னக்குழியும் ஆழமாகிக்கொண்டு போனது. எல்லாரும் சொன்னார்கள் வறுமையால்த்தான் இப்படியென்று. ஆனால் யாரினது கண்ணிலும் படாது பொல்லாத நோயொன்று அவளை மெல்ல மெல்லமாகத் தின்றுகொண்டிருந்தது. களைப்பும் சோர்வும் அவளை இயலாமைக்குள் தள்ளினாலும் தன் சக்திக்கு மீறியதாய் உழைப்பைத் தொடர்ந்தாள்.

ஒருநாள் அவளைவிட நோய் வலுக்காட்டியது. படுத்த பாயிலிருந்து எழும்ப முடியாமலே அம்மா கிடந்தாள்... பதறி அடித்துக்கொண்டு மருதங்கேணி சின்ன மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றவேளை அங்கு இயலாது என்று கைவிரித்து விட்டார்கள். யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டாள். அங்கேயும் சிறிதுகாலம் கழிந்தது. 'இதயத்தில் ஓட்டை. இஞ்ச வைத்தியம் செய்வதென்றால் நிறையக் காசு தேவைப்படும்' வைத்தியர் சொன்னபோது அது அவர்களின் குடும்பப் பொருளாதாரத்திற்கு ஒத்து வராததாகவே இருந்தது. அம்மா இன்னும் சிறிதுகாலமே உயிர்வாழ்வாள் என்று தெரிந்த பின்பும் வீட்டுக்கு அழைத்துவந்து எல்லோராலும் அழத்தான் முடிந்தது.

வீட்டில் இவ்வளவு ஒரு சோகம் இருந்தாலும் நாட்டு நிலைமை பற்றியே சிந்திக்கும் அவளது எண்ணம் உயர்வானது. தான் சுகவாழ்வில் இருந்துகொண்டு மற்றவர்கள் சோகத்தில் பங்கெடுப்பதிலும், தானே தன் சோகத்தைச் சுமக்கமுடியாமல் தள்ளாடுகின்றபோதும் மற்றவர்கள் சோகத்திற்குத் தோள்கொடுக்க நினைப்பதும் அதற்காக எத்தனை இடர்களையும் ஏற்கத் துணிவதும் எவ்வளவு மேலானது. சிறிலங்கா இராணுவம் ஒப்பறேசன் 'யாழ்தேவி' நடவடிக்கையை மேற்கொண்டிருந்தது. அந்தக் கிராமமே தற்காலிகமாக இடமாற்றம் செய்துகொண்டது. அந்த வெடியோசைகள்தான் அவளின் இதயத்தை மெல்லமெல்ல வைரமான சிற்பமாகப் பொழியத் தொடங்கியது. வேகமாக தான் போராடப் போகவேண்டுமென்ற தேவையை உணர்த்தியது.

அம்மா பாவம், அவளால் மகளின் மாற்றத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

> "அவள் இயக்கத்தில் இணைந்து பல வருடங்களின் பின் இயக்கவேலை காரணமாக ஒருநாள் வீதியால் சென்றுகொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக சந்தித்த கச்சான்காறி அம்மாதான் என்று அடையாளம் கண்டபோதும்... இவ்வளவு நேரமும் வியாபாரம் செய்து பெற்ற சிறுதொகைச் சில்லறைக் காசையும் கைச்செலவுக்கென்று அம்மா கைக்குள் திணித்தபோதும்... அதை வேண்டினால் வீட்டில் இரண்டு தங்கைகளும் பட்டினி கிடக்க வேண்டிவரும் என்று அழுதபோதும்... நெஞ்சுக்குள் எவ்வளவோ ஏக்கங்கள் எழத்தான் செய்தன."

'இண்டைக்கு எனக்கு மீன்கறி காச்சித் தரவேணும்' என்று வழமைக்கு மாறாய் அடம்பிடித்தபோதும் 'உங்கன்ர கையால தீத்திவிடுங்கோ' என்று செல்லம் பொழிந்தபோதும், அவள் தன்னைவிட்டுப் பிரிந்து போகப்போகிறாள் என்று அம்மா நினைத்திருக்கவில்லை. ஆனால் சுதர்சினிக்கு (ஆந்திரா) தெரியும் தான் அம்மாவை விட்டுப் பிரிந்து போகப்போகிறேன் என்று.

06.10.1993ஆம் ஆண்டு. ஒரு மாலைவேளை அவள் எல்லோருடனும் இருந்து விடைபெற்று அருகில் இருந்த போராளிகளின் பாசறை ஒன்றில் சேர்ந்துகொள்கிறாள்.

அதற்குப் பின் நீண்டகாலம் அம்மாவை அவள் காணவேயில்லை. அடிப்படை இராணுவப் பயிற்சிகள் கூட இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. புதிய போராளிகள் எல்லோரையும் ஒன்றாக்கி அவர்களது பொறுப்பாளர் கதைத்தபோது 'இதுக்குள்ள யார் கரும்புலி?' என்று கேட்டார். உடனே இவள் எழுந்துவிட்டாள்! இவளின் சிறிய தோற்றமும் எழுந்து நின்ற விதமும் அனைவரது பார்வையையும் இவள் பக்கம் திருப்பியது. ஒருகணம் அமைதி நிலவிக்கொண்டிருந்தது. மறுகணம் அவளைப் பார்த்து எல்லோரும் சிரிக்கத் தொடங்கினார்கள். அவளிற்கு அவர்கள்மேல் ஆத்திரமும் கோபமும்தான் வந்தது. எதுவும் பேசாமல் மௌனமாக நின்றாள்.

அடிப்படை இராணுவப் பயிற்சிகள் ஆரம்பமானது. நீண்டதூரம் வேகமாக ஓடக்கூடியவள் பயிற்சிகளில் சிறந்து விளங்கினாள். அடிப்படைப் பயிற்சிகள் முடிய சிறுத்தை சிறப்புப் படையணிக்குச் சென்றாள். அங்கே சிறப்புப் பயிற்சியும் வெடிமருந்து பற்றிய கல்வியும் கற்றாள். அங்கிருந்து முல்லைத்தீவுச் சண்டைக்குச் சென்றவள் மீண்டும் சிறுத்தை அணியில் இணைந்துகொண்டாள்.




முல்லைத்தீவுச் சண்டையில் பட்ட சிறுகாயம் மருத்துவமனையில் சிறிதுகாலம் ஓய்வில் நின்றாள். இந்த நாட்களில்தான் நினைவுகள் அவளை சிறிது சிறிதாய் சித்திரவதை செய்தன.

கொக்குத் தொடுவாய் சண்டைக்கு அணிகள் புறப்பட்டபோது முகாமின் வாசல் காவல்கடமையில் நின்றது இவள்தான். அணி சென்றபோது இவள்தான் முகாமின் தடை திறந்து வழியனுப்பிவைத்தது. அவர்கள் கையசைத்து 'அண்ண எதிர்பார்க்கிறதைச் செய்துபோட்டு வருவம்' என்று கூறிவிட்டுப் போனவர்கள் போனவர்கள்தான். வித்துடலாகப் பேழையில் வந்தார்கள். அதுவும்...

நினைவுகள் அவளை ஆக்கிரமிக்கின்றபோதும் அவற்றைக் கலைத்துவிட நினைத்து வேறு எதையாவது சிந்திப்பாள். ஆனால் நினைவுகளோ அவளை நிழல்களைப்போல பின்தொடரும். இந்த நினைவுகளின் வேதனைதான் அவளிற்குப் பெரும் சுமையாக இருந்தது. அதுவே அவளின் இலட்சியத்திற்கு வலுச்சேர்த்தது.

*****

அவள் இயக்கத்தில் இணைந்து பல வருடங்களின் பின் இயக்கவேலை காரணமாக ஒருநாள் வீதியால் சென்றுகொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாகச் சந்தித்த கச்சான்காறி அம்மாதான் என்று அடையாளம் கண்டபோதும்... இவ்வளவு நேரமும் வியாபாரம் செய்து பெற்ற சிறுதொகைச் சில்லறைக் காசையும் கைச்செலவுக்கென்று அம்மா கைக்குள் திணித்தபோதும்... அதை வேண்டினால் வீட்டில் இரண்டு தங்கைகளும் பட்டினிகிடக்க வேண்டிவரும் என்று அழுதபோதும்... நெஞ்சுக்குள் எவ்வளவோ ஏக்கங்கள் எழத்தான் செய்தன. ஆனால் அது குறுகிய வட்டத்திற்குள் நின்று சிந்திப்பதைப்போல அவளின் குற்ற உணர்வு உணர்த்தியது. இந்த உணர்வு பிறர் நேசத்தின் உச்சத்திலேயே உருவாகமுடியும். மற்றவர்களிற்காக வாழ்வதிலும் மற்றவர்கள் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்பதற்காக சாவைச் சுமக்கத் துணிந்த கரும்புலியல்லவா அவள்?

கரும்புலி அணியிலிருந்த ஒவ்வொரு நாளிலுமே தான் இலக்கை தகர்க்கப்போகும் நாளை எண்ணிக்கொண்டேயிருந்தாள். இவளிற்கு இருந்த வயிற்றுப்புண் காரணமாக கடுமையான பயிற்சிகள் செய்வது கடினமானதாக இருந்தாலும் அவள் ஒருநாள் கூட ஓய்வறியாள். காய்ச்சல் என்றோ உடற்சோர்வென்றோ பயிற்சிகளில் இருந்து நின்றது கிடையாது.

'என்ர கையால சாஜ் கட்டி நான் ஆட்டியைக் கட்டிப்பிடித்தபடி ஆட்டியை வெடிக்க வைக்கவேணும்' (சாஜ் – முக்கிய இலக்குகளை அழிப்பதற்குப் பயன்படுத்தப்படும் வெடிமருந்துப் பொதிகள்) என்று அடிக்கடி தோழர்களிடம் சொல்லிக்கொள்வாள். பயிற்சி முடிந்து ஓய்வான பொழுதுகளில் பூக்களைப் பறித்துவந்து முகாமில் அலங்கார வேலைகள் செய்வாள். ஒரு நாளைக்கு ஒரு மாதிரியான அலங்காரம் அப்படிச் செய்வதில் அவளுக்குத் தனிப் பிடிப்பு.

சிலவேளை கறி சமைப்பாள். ஏனைய போராளிகளையும் அழைத்து தான் சமைத்த உணவைத் தானே பரிமாறி அவற்றின் சுவையெப்படி என்று அறிவதில் ஆர்வம் காட்டுவாள். இவளிற்கு மீன் குழம்பு என்றால் மிகவும் விருப்பம். அந்தக் கறியை மிகவும் சுவைபடச் சமைப்பாள்.

*****

ஆந்திரா சண்டைக்குப் போய்விட்டாள். எவ்வளவு துடியாட்டமும் தான் நினைத்ததைச் செய்துவிடவேண்டும் என்பதில் ஆர்வமும் கொண்டவள்.

எப்பொழுதும் அவள் நினைத்தவற்றையே செய்துமுடிக்க வேண்டும் என்பதில் குறியாய் இருந்தவள். தன் இறுதி மூச்சிலும் தேசத்திற்குத் தேவையான வெற்றியை நிலைநாட்டிவிட்டு வீரகாவியமாகிவிட்டாள்.

31.03.2000 அன்று ஆனையிறவுத் தளத்தினைக் கைப்பற்றும் சமரிற்கு வலுச்சேர்ப்பதற்காய் தாமரைக்குளப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த ஆட்லறி தளத்தினுள் நுழைந்து நான்கு ஆட்லறிகளைத் தகர்த்தெறிவதற்கு வழியமைத்துவிட்டு வெற்றியோடு திரும்பிக்கொண்டிருந்தவேளை இடையிலேயே இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேருக்கு நேரான மோதலில் வீரச்சாவடைகின்றாள்.

தேசத்தின் அழியாத வரலாறாய் காலம் இவளது பெயரையும் குறித்து வைத்திருக்கும்.



## பகிரப்படாத பக்கங்கள்

### நீண்டெழுந்த இரவுகள்

*மயக்கம் தெளிந்து கண்களைத் திறந்து பார்த்தான். கண்ணெதிரே கம்பியில் குருதிப்பை தொங்கிக்கொண்டிருந்தது. கையில் குருதி ஏற்றப்பட்டிருந்தது. மருந்துமணம் மூக்கைத் துளைத்தது.*

*மெல்லக் கால்களை அசைக்க முயன்றான், முடியவில்லை. உணர்வற்று உயிரற்ற சடமாய் கால்கள் மரத்துப்போய்க் கிடந்தன.*

*முதுகு விண் விண்ணென வலித்தது. நினைவுகளை மீட்டுப்பார்த்தான்.*



*இராணுவ ஆக்கிரமிப்புக்கெதிரான முறியடிப்புச் சமரில் விழுப்புண்ணடைந்ததை உணர்ந்துகொண்டான். அவனது கரங்கள் கனரகத் துப்பாக்கியை இயக்கிக் கொண்டிருந்தபோது, ராங்கியொன்று அவர்களின் நிலையைத் தாக்கியது.*

*அவனுக்கு வயிற்றுப் பகுதியில் ஆழமான காயம் ஏற்பட்டிருந்தது. கால்கள் நிற்கமுடியாமல் சோர்ந்து துவண்டன. குருதி வெளியேறிக்கொண்டிருந்தது.*

*எதிரே இராணுவத்தினர் முன்னேறிக்கொண்டிருந்தனர். துப்பாக்கியைத் தோழனிடம் கொடுத்தான். தோழன் சிதைந்த காவல்நிலையை விட்டு மற்றைய நிலைக்கு மாறி இராணுவத்தை முன்னேற விடாமல் கனரகத் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டிருந் தான்.*

*ராங்கிகளின் உறுமல் அவனுக்கருகில் கேட்டது. கால்களை தடவிப் பார்த்தான். குளிர்ந்து போயிருந்தன. இராணுவத்தினரிடம் உயிரோடு பிடிபடக்கூடாது என எண்ணியவன் சயனைற் குப்பியை வாய்க்குள் வைத்தான். அங்குவந்த மருத்துவப் போராளி சயனைற் குப்பியைப் பறித்துவிட்டு வயிற்றுக் காயத்துக்குக் கட்டுப்போட்டான். களமருத்துவத்தை வெற்றிகரமாய் நிறைவேற்றி காவு குழுவிடம் அவனை ஒப்படைத்தான். அவனுக்கு கண்கள் இருண்டன. அப்போது மயங்கியவன் இங்குதான் விழித்துக் கொண்டான்.*

*அன்று அந்த மருத்துவப் போராளியின் முயற்சியினால் உயிர்தப்பியதை நினைத்துப் பார்த்தான். மருத்துவ வீட்டில் இரண்டு மாதங்கள் இருக்கவேண்டியிருந்தது. காயங்கள் மாறியபோதும் கால்கள் இயங்க மறுத்துவிட்டன. மருத்துவப் போராளிகளின் அரவணைப்பு அவனுக்கு அம்மாவை ஞாபகமூட்டியது.*

*இரண்டு மாதங்களின் பின் முகாமுக்கு வந்துசேர்ந்தான். அவனுக்கு எந்தக் குறையும் இருக்கவில்லை. தோழர்கள் முழு நிறைவாக கவனித்துக்கொண்டார்கள். அவனுடைய கால்களின் நரம்புகளைத் தூண்ட காலையும், மாலையும் பயிற்சிகள் செய்துவிட்டார்கள்.*

*எப்படியாவது மீண்டும் களத்துக்குப் போகவேண்டுமென்ற அவா அவனில் நிறைந்துபோயிருந்தது. படிப்படியாகத் தனது பணிகளைத் தானே செய்ய முயற்சித்தான். ஆறுமாதங்களின் பின் கால்களில் மாற்றம் ஏற்படுவதை உணர்ந்தான்.*

*கால் விரல்களை இப்போது அவனால் அசைக்க முடிந்தது. மெலிந்து குச்சியாய் இருந்த கால்கள் மெருகேறத்தொடங்கின. அவன் முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்து பயிற்சியிலீடுபட்டான்.*

*ஓராண்டின் பின் அவனால் மீண்டும் நடக்கமுடிந்தது. அவனுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. மீண்டும் களத்துக்குப் போவேனென சொல்லிக்கொண்டிருந்தான்.*

*ஆனால் அவன் இன்று உயிரோடு இருக்கக் காரணமாயிருந்த மருத்துவப் போராளியுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ள முடியாமையை எண்ணிக் கவலைப்பட்டான். அந்தப் போராளி பிறிதொரு சமரில் வீரச்சாவடைந்திருந்தான்.*

*ஒவ்வொரு மருத்துவப் போராளியும் போராளிகளின் உயிர்களைக் காப்பதற்காய் படும் பாடுகள் அவன் கண்முன்னே தோன்றின. முச்சக்கர வண்டியில் மாவீரர் துயிலுமில்லத்துக்குச் சென்று வந்தவன் இன்று கால்கள் பதித்து கல்லறை நோக்கி நடந்தான். மாவீரர் நினைவுப் பாடல்கள் காற்றில் கலந்து காதில் புகுந்து மனதை நிரப்பிக்கொண்டிருந்தன.*

**● ஆ.ந.பொற்கோ**

---

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

கால ஆட்சியில் SPLAஇன் தலைவர் மேஜர் ஜெனரல் ஜோண் கறாங் முதலாவது உப ஜனாதிபதியாகப் பதவி ஏற்பார்.

கென்யாவின் முன்னாள் ஜனாதிபதியான டானியல் அறாப் மொய் (DANIEL ARAP MOI) உருவாக்கிய மொய் ஆபிரிக்கா மையத்தின் ஏற்பாட்டில் நைரோபியில் இடம்பெற்ற தெற்கு - தெற்கு ஒப்புரவு மகாநாட்டில் தெற்கில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஆயுதம் தாங்கிய போராட்டக் குழுக்களுக்கு கறாங் ஒலிவ் கிளையை நீட்டியிருக்கின்றார்.

"இங்கு பிரசன்னமாயிராத ஆயுதம் தரித்த குழுக்களை இணைவுக்கென வரவேற்க SPLM/A காத்திருக்கிறது என்பதை உறுதிப்படுத்த விரும்புகிறேன். இந்த ஒப்பந்தத்தில் யார் கையெழுத்திட்டார்கள், யார்



அதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்தினார்கள் என்பதெல்லாம் முக்கியமல்ல. இது உங்களுடைய சமாதானம் இந்தப் பேச்சுவார்த்தைகளை எங்களுக்கிடையே இருக்கும் வேறுபாடுகளைக் களைந்து மீள ஒப்புரவாகி ஒருவரை ஒருவர் மன்னித்து எமது பிணைப்பை வலுப்படுத்திக்கொள்வோம்." என்று அவர் அழைப்பு விடுத்திருக்கிறார்.

ஆறுவருட இடைக்கால ஆட்சியின் பின் தென்புல மக்கள் ஒரு கருத்துக் கணிப்பு மூலம் சூடானின் ஒரு பகுதியாகத் தொடர்ந்தும் இருப்பதா அல்லது பிரிந்து செல்வதா என்று தீர்மானிப்பார்கள்.

தற்போது நியமிக்கப்பட்டிருக்கும் 60 உறுப்பினர் கொண்ட தேசிய அரசியலமைப்பு மீளாய்வு ஆணைக்குழுவில் ஜனாதிபதி ஓமார் அல் பெசீரின் தேசிய காங்கிரஸ் (NC) கட்சிக்கு 52% ஆசனங்களும் மேஜர் ஜெனரல் கறாங் தலைமையிலான SPLM இற்கு 28% ஆசனங்களும் ஏனைய தரப்பினர்களுக்கு 20% ஆசனங்களும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இந்த 20% பிரதிநிதிகளுக்கு முடிவுகளைத் தடைசெய்யும் அதிகாரம் இருக்காது.

இந்த ஒதுக்கீடுகள் குறித்து எதிர்ப்புக் குரல்கள் எழுந்திருக்கின்றன. ஆசனங்கள் வடக்குத் தெற்குக்கென ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமேயொழிய அரசியல் கட்சிகளுக்கு அல்ல என்று சனநாயக முறையில் இறுதியாக தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியான சாதில் அல் மாஹ்தி கூறியிருக்கிறார்.

ஏனைய தரப்புக்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்கள் போதாது. மீள் ஒதுக்கீடு செய்யப்படவேண்டும் என்று ஆயுதம் தாங்கிப் போரிட்ட ஏனைய குழுக்கள் கோரியுள்ளன.

சிறையிடப்பட்ட ஹஸன்-அல்-துராபி (HASSAN AL TURABI) தலைமையிலான மக்கள் காங்கிரஸ் போன்ற சில அமைப்புக்கள் இவ்வொதுக்கீட்டில் திருப்தியில்லாத போதிலும் அரசியலமைப்புச் செயற்பாட்டில் பங்கெடுக்கப்போவதாக அறிவித்துள்ளன.

இதற்கிடையே டார்பரில் போர்க் குற்றங்கள் புரிந்தவர்களை ஹேக்கில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கான ஐ.நா பாதுகாப்புச் சபையின் 1593ம் இலக்க தீர்மானம் இந்தப் பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்ட ஆபிரிக்க யூனியன் எடுக்கும் முயற்சிகளைக் கணக்கிலெடுக்காததாக இருக்கிறது என சூடான் முறைப்பட்டுள்ளது. இவ்வாறு சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கென 50 பேரின் பெயர்கொண்ட பட்டியல் ஒன்றை ஐ.நாவின் சிறப்புக் குழுவொன்று தயாரித்துள்ளது.

**ஏழு அம்ச ஏற்பாடுகளில் முக்கியமான அம்சங்களாக, தென்சூடானுக்கு 6 வருட இடைக்கால சுயாட்சியை வழங்குவதும் ஆறுவருட முடிவில் காட்டூம் அரசினால் தொடர்ந்து ஆளப்படுவதா அல்லது பிரிந்து செல்வதா? என்று தென்சூடான் மக்களிடையே கருத்துக்கணிப்பு இடம்பெறும் என்பதும் இருக்கின்றன.**

தெற்கில் ஏற்பட்ட போருக்கு தென்புல மக்களை காட்டூம் அரசு கவனிக்காமல் விட்டதே காரணமாக அமைந்தது. கென்யா - உகண்டா - றுவாண்டா ஆகிய நாடுகளின் மொத்தப் பரப்பளவினதான தென்சூடானில் அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதான நகரமான ஜூபாவில் 12 கிலோமீற்றர் தூர வீதிக்கு மட்டும் தார் போடப்பட்டிருக்கிறது என்பதை வைத்து தென்சூடானின் அபிவிருத்தி எந்த அளவுக்கு அலட்சியப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளலாம். திருச்சபையும் அரசசார்பற்ற நிறுவனங்களும் உருவாக்க முயன்றுகொண்டிருப்பவை தவிர வேறு பாடசாலைகளோ அல்லது மருத்துவமனைகளோ அங்கு இல்லை.

'சர்வதேச சமூகம் உண்மையிலேயே சூடானின் ஒருமைப்பாட்டை முன்னெடுக்கவும் அதற்கு அனுசரணையாக தென்சூடான் மக்களை 2011ம் ஆண்டில் வாக்களிக்க ஊக்கப்படுத்தவும் விரும்பினால் முதலில் அது இந்த ஒப்பந்தத்தை (வலுமிக்க ஐ.நா படை போன்ற பாதுகாப்பு மற்றும் நடைமுறைப்படுத்தல் பொறியமைப்பு மூலம்) நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துவதோடு தென்புலத்தில் நிலவும் அபிவிருத்திக் குறைபாட்டை நிரவிக்கொள்ள (மத்திய ஆட்சி மட்டத்தில் தென்புலத்தோரின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான மேலதிக முயற்சிகள் உள்ளிட்ட) உதவிகளை தென்சூடானிய மக்களுக்கு அளிக்கவும் வேண்டும். இப்படிச் செய்யும்போது தெற்கில் சனநாயக ஆட்சிமுறைக்கான தேவை மற்றும் தென்புலக் குழுக்களிடையேயான ஒருமைப்பாடு பற்றியும் வலியுறுத்தவேண்டும்.

இந்த முயற்சிகளை நிதி வழங்குனர்களும் ஆர்வம்கொண்ட அரசுகளும் மேற்கொள்ளும்போது அந்த முயற்சிகளின் பெறுபேறாக ஒருமைப்பாடுதான் அமையும் என்று எண்ணக்கூடாது. எனவே, வாக்காளர்களின் விருப்பை மதித்து பிரிவினை ஏதுநிலையை நடைமுறைப்படுத்தவும் முன்கூட்டியே திட்டமிட வேண்டும்.' என்று கிளிஞ்ஜென்டேல் முரண்பாட்டு ஆய்வுகள் பிரிவின் (CLINGENDAEL CONFLICT RESEARCH UNIT) முதுநிலை ஆய்வாளரான கலாநிதி எமறிக் றோஜியர் (Dr. EMERIC ROGIER) கூறியுள்ளார்.

ஒட்டுமொத்தமாகச் சொல்வதானால் மேற்படி அமைதி முயற்சிகள் வெற்றி பெறுவதற்குள்ள தடைகள் நீக்கப்பட்டு தென்சூடானின் பல நூற்றாண்டுகால அடிமைத்தளைகள் களையப்பட்டு தற்போதைய நிம்மதிப் பெருமூச்சுகள் நிரந்தரமானவையாக ஆகவேண்டும். அந்த ஏதுநிலைக்கு வாய்ப்பில்லாது போனால் கலாநிதி எமறிக் றோஜியர்



சொல்வதுபோல் பிரிவினை ஏதுநிலையை சர்வதேச சமூகம் உறுதியாக நடைமுறைப்படுத்துவதன் மூலமாவது இந்த நிம்மதிப் பெருமூச்சுக்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும். ●

# தனது உயிரைவிட தமிழர் தேசியத்தை மதித்த மாமனிதன்



தமிழ்நெற் இணையத்தளம் உலகப் பிரசித்தி பெற்றது. தமிழரின் நோக்குநிலையில் இருந்து இலங்கையின் அரசியல் - சமூக விவகாரங்களை, அன்றாடச் செய்திகளை ஆங்கில மொழிமூலம் வழங்கும் ஒரு இணையத் தளம் அது.

வெளிநாட்டு இராஜதந்திரிகளின் அலுவலக மேசைகளில் அதன் நாளாந்த கம்பியூட்டர் பிரதிகள் எப்போதும் இருக்குமளவுக்கு செய்திகளின் நேர்த்தியும் - செய்தி ஆய்வுகளும் தரம்வாய்ந்தவை. தமிழ்நெற்றின் இத்த கைய சர்வதேச கீர்த்திக்கு டி.சிவராம்தான் காரணம்.

சிவராம் தலைசிறந்த பத்திரிகையாளன். இனப்பற்றும், நேர்மையும், துணிச்சலும் நிறைந்த ஒரு ஊடகவாதி. தமிழ், ஆங்கிலம் இரு மொழியிலும் அறிவுசார் புலமை நிறைந்த ஒரு அரசியல் - இராணுவ ஆய்வாளன்.

அறிவுஜீவிகளே வியப்புறும் வண்ணம் அலாதியான வகையில் தனது ஆய்வுக்கட்டுரைகளை எழுதுவார். வாசிப்போரின் மனதில் கருத்துக்கள் பதியும் வண்ணம் அவரது கட்டுரைகள் எங்கும் பலமான தாக்கம் இருக்கும்.

ஊடகவியலாளனாக ஆரம்பத்தில் கொழும்பில் வசித்தபடி அவர் இராணுவ ஆய்வுக் கட்டுரைகளை எழுதியபோது மூன்றாந் தரப்பைச் சேர்ந்த ஒரு ஊடகவியலாளனைப் போன்றே எழுதினார். தமிழர் தாயகத்தின் புவி சரிதவியலை - போரியல் நோக்கில் ஆழமாக அலசி ஆராய்ந்து அவர் எழுதிய இராணுவ ஆய்வுக்கட்டுரைகளை சிங்களப் புத்திஜீவிகளும் - சிங்களத் தளபதிகளும் மிக விருப்புடன் படித்தனர். அவர் புலமைசார் வழியில் எழுதிய நடுநிலை இராணுவ ஆய்வுகளில் சிங்களத் தரப்பினர் தமக்குச் சார்பான அம்சங்களைத் தேட முற்பட்டபோது சிவராம் விழித்துக் கொண்டார்.

அத்துடன் சிங்களப் பத்திரிகை உலகம், சிங்களப் புத்திஜீவிகள் குழாம் என்பவற்றுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்ததால் அவர்களிடம் நீக்கமற நிறைந்து கிடந்த பேரினவாத உணர்வுகளைக் கண்டுகொண்டார். அவர்களுடன் கருத்துப்போர் புரிந்தும், அவர்கள் அறிவுக் குருடர்களாக இருந்ததையும் மாறா மனம்படைத்த இனவெறியர்கள் என்பதையும் கண்டறிந்து கோபம்கொண்டார்.

இதேசமயம், சிங்கள அரசின் அனைத்து முயற்சிகளையும் முறியடித்தபடி தமிழரின் விடுதலைப்போரை புலிகள் இயக்கம் வெற்றிகரமாக முன்னெடுத்தபோதும் கொழும்பை மையமாகக்கொண்ட பெரும்பாலான தமிழ்ப் புத்திஜீவிகளை புலிகளின் எழுச்சிகரமான செயற்பாடுகள் ஈர்த்தது போல சிவராமும் ஈர்க்கப்பட்டார்.

நாளடைவில் புலிகள் இயக்கத்தை தமிழரின் தனித்த போராட்ட சக்தியாக ஏற்றுக்கொண்டார். தமிழினத்தின் தேசியத் தலைவராக மேதகு வே.பிரபாகரனை ஏற்றுக்கொண்டார். அதன்பின் அவரின் பேச்சிலும் - எழுத்திலும் தமிழீழத் தேசியமே தொக்கிநின்றது. கிளிநொச்சி வந்து தலைவர் பிரபாகரனைச் சந்தித்து அவருடன் கருத்துப் பரிமாற்றம் செய்து தமிழீழத் தேசியத்தின் பால் மேலும் உத்வேகம் பெற்றார்.

சிவராமின் அரசியல் பார்வையில் ஏற்பட்ட இந்த மாற்றம் பேரின வாதிகளை எரிச்சலடைய வைத்தது. அப்போதே அவருக்குத் தொல்லைகள் கொடுக்கத் தொடங்கிவிட்டனர். அவரை மிரட்டிப் பணியவைக்க முயன்றனர். ஆனால் சிவராம் தமிழ்த் தேசியத்தின்பால் உறுதியுடனேயே இருந்தார்.

கருணாவின் துரோகச் செயற்பாடுகள் சிங்களப் பேரினவாதிகளை குதூகலிக்கச்செய்து தமிழ்த் தேசியத்திற்கு எதிராக இருதரப்பும் ஒன்றி ணைந்தபோது சிவராம் தனது உயிரைப் பணயம் வைத்து தனது புலமைசார் அறிவைப் பயன்படுத்தி ஒரு ஊடகப் போராளியாக தீவிர வடிவம் எடுத்தார்.

பிரதேசவாதம் என்ற செத்துப்போன கருத்துருவை தூசிதட்டி எடுத்த துரோகிகளை சிவராம் கருத்தாழம் மிக்க கண்டன விமர்சனம் செய்தார். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த முயன்ற சிங்கள அரசின் கபடத்தனத்தை வரலாற்று உதாரணங்களுடன் உலகிற்கு அம்பலப்படுத்தி வந்தார்.

இவ்விதம் சிவராம் இருதலை நாகத்தின் எதிரியானார். தனது உயிருக்கு ஆபத்து நெருங்கிவிட்டது என்பதையும் உணர்ந்தார். ஆயினும் தனது கொள்கையில் அவர் தளம்பவில்லை. ஊடகப்போராளி என்ற அந்தப் பொறுப்பான தேசியப் பணியில் சமரசம் காட்ட அவர் முயலவில்லை.

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தைப் போன்றே சிங்களத்தின் குகைக்குள் நின்றபடியே இனவாதிகளுக்கு எதிராக சீற்றத்துடன் கருத்துப்போர் புரிந்தார்.

சிங்களத்தின் உழுத்துப்போன இனவாத அரசியலை அதனுடைய அரசியல் நாடகங்களை அம்பலப் படுத்த சிவராம் பயன்படுத்தும் கடும்தொனி நிறைந்த பேச்சுவழக்குச் சொற்கள் சிங்களத்தின் இனவாத முகத் திரையை ஈவிரக்கமின்றிக் கிழித்தெறிவதுடன் தமிழ் மக்களை விழித்தெழவும் வைக்கும்

தமிழர் அரசியலின் அடிநாதமாக தமிழீழத் தேசியம் இருக்கவேண்டும் என்று அவர் உறுதிபட எழுதுவார். தமிழ்மக்கள் தேசிய விழிப்புணர்வுடன் இருந்து சிங்களத்தின் அரசியல் காய் நகர்த்தல்களை விளங்கிக்கொள்ள வேண்டும் என்று ஆலோசனைகள் கூறுவார். தமிழர் மத்தியிலுள்ள பிரதேசவாதம் மற்றும் சாதியவாதத்தையும் கடுமையாகச் சாடுவார்.

தமிழரின் இனப்பிரச்சினைக்கு சிங்களதேசம் ஒருபோதும் அரசியல்தீர்வு வழங்க முன்வரமாட்டாது என்பதை அண்மைக் காலமாக சிவராம் அழுத்தி, அழுத்தி எழுதிவந்தார்.

சிங்கள அரசியல்வாதிகளுடனும் சிங்கள அதிகார வர்க்கத்துடனும் சிங்களக் கருத்தியல் ஜாம்பவான்களுடனும் நெருக்கமாகப் பழகி அறிந்த தனது அனுபவ அறிவையே சிவராம் அவ்விதம் அழுத்தி எழுதிவந்தார்.

கோழைத்தனமாக சிவராமைக் கடத்தி - கொடூரமாகக் கொன்றவர்கள் அவரது உடலை சிங்களப் பாராளுமன்றுக்கு அருகில் போட்டுச்சென்றனர். தமிழரை இன அழிப்புச்செய்து தமிழர் தேசியத்தைச் சிதைக்க ஆணையிடும் அந்த சிங்கள அதிகாரச் சின்னத்துக்கு அருகில் சிவராமின் உடல் சிதிலமாகக் கிடந்த காட்சி இலங்கைத்தீவில் தமிழ் இனத்தின் அவலவாழ்வைச் சித்தரிக்கும் ஒரு சோகக் காட்சி... என்ற மனப் படிமத்தையே சர்வதேச இராஜதந்திரிகள் உணர்ந்திருப்பர்.

தமிழரின் விடுதலைப்போராட்ட கருத்தியல் வரலாற்றில் சிவராமிற்கு தனியிடம் உண்டு. அவரின் மகத்தான கருத்தியல் பணியை கௌரவிக்கும் வகையில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் சிவராமை ஒரு மாமனிதராக வரலாற்றில் நிறுத்தியுள்ளார். ●

தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers of Tamil Eelam

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
30/04/2005.

தமிழ் மண்ணையும் தமிழ் மக்களையும் ஆழமாக நேசித்த ஒரு உயர்ந்த மனிதரை தமிழர் தேசம் இன்று இழந்துவிட்டது. தமிழீழ மண்ணின் விடிவிற்காகவும் தமிழீழ மக்களின் விடுதலைக்காகவும் ஓங்கியொலித்த ஒரு உரிமைக் குரல் இன்று ஓய்ந்துவிட்டது. எதிரியின் கோழைத்தனமான தாக்குதலுக்கு ஒரு தலைசிறந்த தமிழ்ப் பத்திரிகையாளர் பலியாகிவிட்டார்.

திரு. தர்மரட்ணம் சிவராம் அவர்கள் எளிமையும் நேர்மையும் பொருந்திய ஒரு தனித்துவமான மனிதர். நிறைந்த அறிவு படைத்தவர். எழுத்துத்துறையில் மிகுந்த விற்பன்னர். உலக அரங்கில் மிகவும் பிரபலமான பத்திரிகையாளர். இவருக்கு அறிமுகமே தேவையில்லை.

இவர் தனது எழுத்துக்களால் தமிழரின் தேசியப் பிரச்சினையை உலக அரங்கிலே மிகவும் நேர்த்தியான முறையில் தெளிவாக எடுத்துக்கூறினார். சிங்கள அரசு மேற்கொண்டுவருகின்ற அப்பட்டமான பொய்ப்பரப்புரைகளை சர்வதேச சமூகத்திற்கும் இராஜதந்திர சமூகத்திற்கும் மிகச் சாதுரியமாகவும் சாமர்த்தியமாகவும் அம்பலப்படுத்தினார். சிங்களப் பேரினவாதத்தின் கோட்டையில் நின்றுகொண்டே அது தமிழர் தேசத்திற்கு எதிராகப் புரிகின்ற அநீதிகளையும் அக்கிரமங்களையும் உலகிற்கு உறுதியாக எடுத்துக்கூறினார். ஆபத்துக்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டபோதும், அஞ்சா நெஞ்சுடன் அநீதியை எதிர்த்துநின்றார். எல்லாவற்றுக்கும் மேலாக, எமது மக்களுக்கு ஓயாது அரசியல் விழிப்புணர்வூட்டி, தமிழ்த் தேசியத்தைத் தொடர்ந்து வலுப்படுத்தினார். அவர் ஆற்றிய அரும்பணி என்றுமே போற்றுதற்குரியது.

திரு. தர்மரட்ணம் சிவராம் அவர்களின் இனப்பற்றிற்கும், விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து, அவரது நற்பணியை கௌரவிக்கும் முகமாக "மாமனிதர்" என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன். உன்னத இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களை சாவு அழித்துவிடுவதில்லை. எமது தேசத்தின் வரலாற்றில் அவர்களுக்கு என்றும் அழியாத இடமுண்டு.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

(வே. பிரபாகரன்)
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

*(03ம் பக்கத் தொடர்ச்சி)*

உயிர்தப்பி விடுகின்றார். இவரைக் காப்பாற்றி இந்தியா கொண்டுசென்று பின் அவர் பிரான்சு செல்ல உதவியது இந்திய உளவமைப்பான "றோ" என்பதும் இங்கே குறிப்பிடவேண்டியது.

பல்வேறு காரணங்களால் இரண்டாம் புரட்சியும் தோற்றாலும் இவர்கள் உடனடி அழிவுக்கு ஜனாதிபதி பிரேமதாசா கைக் கொண்ட தனிமைப்படுத்தும் உத்தியே காரணம். இவ்வுத்தியை உணர்ந்த புலிகள் அதனை தமக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டனர். ஆனால் ஜே.வி.பியினரால் இதைத் தடுக்கமுடியவில்லை. இந்திய எதிர்ப்பு வாதத்தினை தானே கையாலெடுத்து புலிகளோடு இணக்கத்திற்கு வந்து பிரேமா ஜே.வி. பியினரின் அழிவிற்கு வழிவகுத்தார். எனவே சிங்கள சமூகத்தின் அடிப்படை முரண்பாட்டினை ஜே.வி.பியினர் பிரதிபலித்தாலும் வரலாற்றின் இயங்குவிதிகளை அவர்கள் புரியவில்லை. அவர்கள் என்றும் புரியமாட்டார்கள் என்பதற்கு இம்முறை அவர்கள் அரசியலுத்திகள் சான்றாகவுள்ளன.

எனவே இப்பொழுது சோமவன்சவின் முறை. வெளுத்துக்கட்டுகின்றார். 1971ல் புரட்சியில் தொடங்கிய பயணம் அமைச்சரவையில் வந்துநிற்கின்றது. 1964 சண்முகதாசனின் கட்சிக்குள் ஊடுருவத் தொடங்கிய உத்தி சிறிலங்கா சுதந்திரக்கட்சியைப் பணயக் கைதியாக்கும் நிலைக்கு வந்துள்ளது. சிங்கள பேரினவாதப் பயணமே இப்போது PNM எனப்படும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தில் வந்துநிற்கின்றது. ஆனால் தாம் புரட்சி செய்ய முயன்ற ஒவ்வொரு முறையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியைத் தூண்டும் எதிர்மறை நிலையெடுத்ததே அவர்கள் வரலாறாகிவிட்டது. எனவே இம்முறையோ அவர்கள் எதிர்நிலைச் செயற்பாடு சர்வதேசத்தின் முன் விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டின் நியாயத்தினை உணர்த்தவும் வரலாற்றின் ஆபூர்வ தருணங்களில் எடுக்கப்படும் அரியதொரு முடிவிற்கு அவர்கள் வந்தடையவும் வழியைப் பிறப்பித்ததுமாக அமைந்துவிட்டது. உலகின் முதல் மனிதப் பேரழிவாக வருணிக்கப்படும் சுனாமி ஆழிப்பேரலை அழிவுகூட எம்மை மாற்றமுடியாது என்பதை எவ்வளவு தெளிவாக உரத்து உலகிற்குக் கூறிவிட்டீர்கள். எனவே நாம் சொல்கின்றோம் "நன்றி நண்பர்களே! அடுத்த முறையாவது உங்களுக்கு வெற்றி கிட்டட்டும். எம்முடன் நிழல்போரை நிறுத்தி விட்டு நேரடியாக உங்கள் எதிரிகளோடு மோதுங்கள். ஏனெனில் எங்கள் தலைகளை அடுத்தமுறை உருட்ட வாய்ப்பிராது. அம்முறை நாங்கள் அருகிலிருக்கமாட்டோம். அன்டை நாட்டிலிருப்போம்". ●

# போர்க்குணத்தால் புகழ்பெற்ற படையணி

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு படைத்துறை ரீதியில் செயற்திறண்மிக்க, வலுவானதொரு போரிடும் சக்தியாகத் திகழ்கின்றது. ஒரு தேசத்தின் படைக் கட்டுமாணத் திற்கு நிகரான படைத்துறைசார் நியமங்களை தன்னகத்தே கொண்டதாக அது தன்னை தகவமைத்துக் கொண்டுள்ளது.



ஒப்பிட முடியாதளவு ஆட் பல மேலாண்மையையும், போர்க்கல மேலாண்மையையும் கொண்ட சிறிலங்காவில் முப்படைகளுக்கெதிராக தாக்கமான சமர்க்கள வெற்றிகளை விடுதலைப்புலிகள் அமைப்பு ஈட்டிவருகின்றது. சிறிலங்காவின் படைத்துறை இயந்திரத்தைச் செயலிழக்க வைக்கக்கூடிய தனது வலுவாற்றலை அது இந்தப் போர்நிறுத்த உடன்பாட்டிற்கு முன்னான சமர்க் களங்களில் சாதித்துக் காட்டியது.

விடுதலைப்புலிகள் அமைப்பு இவ்வாறு படைத்துறை ரீதியில் உயர்நிலை பெறுவதற்கு அடித்தளமாய் அமைந்தது, அதன் படைத் துறைக் கட்டமைப்பே ஆகும். இவ்வகையில் விடுதலைப்புலிகளின் படையணிகளின் உருவாக்கமும் அவற்றின் செயற்திறண்மிக்க செயற்பாடுகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. இதனடிப்படையில், விடுதலைப்புலிகளின் மரபுசார் படைத் துறை திறணாற்றலுக்கு வலுச் சேர்த்த படையணிகளுள் ஜெயந் தன் படையணி சிறப்பிடம் பெறுகின்றது.

பொதுவாக ஒரு மரபுவழிப் படையணியைப் பொறுத்தவரை அதன் ஆரம்பச் சமர்க்களங்களில் உயர்நிலைப் பெறுபேறுகளைப் பெறுவதென்பது மிக அரிதானதே. ஆனால் ஜெயந்தன் படையணியைப் பொறுத்தவரை அது தனது முதற் சமரிலேயே தன்னை ஒரு உயர் நிலை சமராற்றல் மிக்க, அதீத போர்க்குணம் மிக்க படையணியாக வெளிக்காட்டி நின்றமை வியப்பிற் குரியதே.

மட்டக்களப்பு - அம்பாறை போர்ப் பிராந்தியத்தில் ஒரு கரந்தடி அமைப்பின் உச்சநிலை வளர்ச் சியை எட்டியிருந்த சண்டை அணிகள், பூநகரி 'தவளை' நடவடிக்கைக் காக ஒன்றிணைக்கப்பட்டு தலைமையினால் ஒரு படையணிக் கட்டு மாணத்துள் கொண்டுவரப்பட்டன. புதிய சூழல், புதிய படையணிக் கட்டுமாணம், படைத்துறைசார் நடைமுறைகள், கடின பயிற்சிகள் என்பன ஒரு வேறுபட்ட நடைமுறைச் சூழலுக்கு அவர்கள் தம்மை உடன் இசைவாக்கிக் கொள்ளவேண்டிய தேவையை ஏற்படுத்தின.

ஒரு கரந்தடி வீரன் சந்திக்கக்கூடிய உச்ச கடின சந் தர்ப்ப, சூழ்நிலைகளுக்கு முகங் கொடுத்து அதில் போதிய பட்டறிவைப் பெற்றிருந்த அவ்வீரர்களுக்கு தங்களை இந்தப் புதிய நடை முறைச் சூழலுக்கு இசைவாக்கிக் கொள்வதில் எந்தவித பிரச்சினையும் எழவில்லை.

ஜெயந்தன் படையணி தோற்றம்பெற்ற காலத்தில் இருந்தே அப்படையணியில் ''படையணி மனோபாவம்'' அல்லது ''குழு உணர்வு'' ஒரு மேம்பட்ட நிலையில் காணப்படுவதை நாம் அவதானிக்க முடியும். அத்துடன் சமர்க்களங் களில் அதன் ''தீவிர மூர்க்கச் செயற்பாடுகள்'', ''போர்க்குணம்'' என் பன அப்படையணியின் தனித்துவ மான இயல்புகளாக இனங்காணப் பட்டன.

ஜெயந்தன் படையணி எத் தரையமைப்பிலும் சமரிடக் கூடிய, பட்டறிவை, தகைமையைப் பெற்றிருந்மையானது அதன் சமராற்றலுக்கு மேலும் வலுச்சேர்ப்பதாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. மட்டு - அம்பாறை போர்ப்பிராந்தியத்தின் தரைத்தோற்ற மானது காடுகள், மலைகள், பரந்த வெளிகள் போன்ற எத் தரையமைப் பிலும் செயற்படத்தக்க அறிவை, அனுபவத்தை அவர்களுக்கு ஊட்டியிருந்தது. நீர்சார்ந்த நடவடிக்கை களிலும் ஈடுபடக்கூடிய தமது இயலுமையை முதற்சமரிலேயே ஜெயந் தன் படையணி வெளிக்காட்டியது. மேற்குறித்த சாதகமான காரணிகள் பின்நாளில் அப்படையணி யாழ்.குடா நாட்டு வெளிகளிலும், வன்னிப் பெருநிலக் காடுகளிலும் ஊடறுத்த நட வடிக்கைகளிலும் திறம்படச் செய லாற்ற பேருதவியாய் அமைந்தன.

பூநகரி நடவடிக்கையைத் தொடர்ந்து யாழ்.குடாநாட்டின் குறிப் பிடத்தக்க சமர்க்களங்கள் அனைத் திலும் பங்குகொண்டு தனது சமராற் றலை மேலும் வளர்த்தெடுத்த ஜெயந்தன் படையணி, ஒவ்வொரு களத்திலும் தனது தனித் தன்மை யினை நிரூபித்தே வந்தது. தமிழீழ விடுதலைப்போர் வன்னிப் பெருநிலக் களங்களில் மையங்கொண்டதன் பின், வன்னிப் பெருநிலப்பரப்பில் ஓயாத அலைகள் ஒன்றுடன் புதிய போரரங்கு திறக்கப்பட்டபோது மிகப் பலம் வாய்ந்ததொரு படையணியாய் அது வளர்ச்சி கண்டிருந்தது.

ஜெயந்தன் படையணி வன்னிப் பெருநிலப்பரப்பில் சமர் முன்னெடுப்புக்களிலும், முறியடிப்புக் களிலும் தொடர்ந்து முக்கிய பங்கு வகித்தது. இப்படையணியின் பெயர் உள்நாட்டில் மட்டுமன்றி உலகநாடு களிலும் அடிபடத்தொடங்கிய ஆண் டாக 1997 அமைந்தது. சிறிலங்கா படைத்துறை வரலாற்றில் மிகப் பெரும் போர் நடவடிக்கையாக அமைந்த 'ஜெயசிக்குறு' படை நடவடிக்கை ஆரம்பமானபோது அதை எதிர்கொள்ள எம் தலைவன் வகுத்த வியூகத்தில் பிரதானமான தொரு சக்தியாக ஜெயந்தன் படை யணி திகழ்ந்தது. வருடக்கணக்கில் நீண்ட பாதுகாப்புச் சமர்களிலும் சரி, வலிந்த தாக்குதல்களிலும் சரி ஜெயந்தன் படையணி முன்னிலை வகித்துச் செயற்பட்டது.

இந்த வன்னிச் சமர்க்களத் தில் பாதுகாப்புச் சமர், படை முன் நகர்வு முறியடிப்பு, வலிந்த தாக்கு தல்கள் என மரபுவழிப் படை நட வடிக்கைகளில் ஈடுபட்டுவந்த ஜெயந் தன் படையணி, மரபுசாரா நடவடிக் கைகளையும் முன்னெடுத்தது. சிறு குழு நடவடிக்கை என்ற வகையில், ஆழ ஊடுருவி தாக்குதல் நடத்து வதிலும் ஜெயந்தன் படையணியின் பிரிவுகள் வன்னிச் சமர்க்களத்தில் தொடர்ந்தும் செயற்பட்டுவந்தன. விசேட வேவு அணியினருடன் இணைந்ததான இந் நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க பெறுமதியான விளைவுகளையும் பெற்றுத்தந்தன. ஓயாத அலைகள் - 03இன் போதும் இத்தகைய அணிகள் ஆழ ஊடுருவி நடவடிக்கைக்குப் பலம் சேர்த்தன. கரும்புலி அணிகள் முன்னெடுத்த சிறப்புத் தாக்குதல் நடவடிக்கை களில் ஜெயந்தனின் வீரர்கள், தள பதிகள் இணைந்து செயற்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும்..

'சமர்களுக்கெல்லாம் தாய்ச்சமர்' என பெருந் தலைவனால் குறிப்பிடப் பட்ட ஜெயசிக்குறு எதிர்ச் சமரிலும் ஓயாத அலைகள் - 2, 3 ஆகிய பாரிய வலிந்த தாக்குதல் முன்னெடுப்புக் களிலும் ஜெயந்தன் படையணி பல முனைகளிலும் ஒரே நேரத்தில் சண்டையிட்டமையானது அதன் பலத்தையும் வலுவாற்றலை யும் எடுத்துக்காட்டுவதாய் அமைந் தது. தொடர்ந்தும் ஆனையிறவிற் கான சமர், குடாநாட்டு நடவடிக் கைகள் என ஜெயந்தன் படையணி ஓய்வின்றி களமாடியது. பின்நாளில் ஜெயந்தன் படையணியின் வீரர்கள் மத்தியில் ஜெயசிக்குறு பற்றிக் கருத்துக்கூறிய தேசியத் தலைவர் ''இது உங்களின் சமர் என்று கூறக் கூடியளவிற்கு இச்சமரில் நீங்கள் சாதித்துள்ளீர்கள்'' என கூறியிருந் தமை வன்னிச் சமர்க்களத்தில் ஜெயந்தன் படையணியின் தாக்கம் எத்தகையது என உணர்ந்துகொள்ள போதுமானதாகும்.



படையணியின் பன்னிரண்டாம் ஆண்டு நிறைவு நிகழ்வின்போது இடம்பெற்ற அணிவகுப்பு

***'சமர்களுக்கெல்லாம் தாய்ச்சமர்' என பெருந்தலைவனால் குறிப்பிடப்பட்ட ஜெயசிக்குறு எதிர்ச்சமரிலும் ஓயாத அலைகள் - 2, 3 ஆகிய பாரிய வலிந்த தாக்குதல் முன்னெடுப்புக்களிலும் ஜெயந்தன் படையணி பல முனைகளிலும் ஒரே நேரத்தில் சண்டையிட்டமையானது அதன் பலத்தையும் வலுவாற்றலையும் எடுத்துக்காட்டுவதாய் அமைந்தது. தொடர்ந்தும் ஆனையிறவிற்கான சமர், குடாநாட்டு நடவடிக்கைகள் என ஜெயந்தன் படையணி ஓய்வின்றி களமாடியது. பின்நாளில் ஜெயந்தன் படையணியின் வீரர்கள் மத்தியில் ஜெயசிக்குறு பற்றிக் கருத்துக்கூறிய தேசியத் தலைவர், ''இது உங்களின் சமர் என்று கூறக்கூடியளவிற்கு இச்சமரில் நீங்கள் சாதித்துள்ளீர்கள்.'' என கூறியிருந்தமை வன்னிச் சமர்க்களத்தில் ஜெயந்தன் படையணியின் தாக்கம் எத்தகையது என உணர்ந்துகொள்ள போதுமானதாகும்.***

1993.05.04 அன்று கட்ட மைக்கப் பெற்ற ஜெயந்தன் படை யணி தனது 12 வருடகால ஓய்வற்ற சமர்க்களப் பயணத்தில் சாதித்தவை சாதாரணமானவையல்ல. இப் படை யணி இத் தேச விடுதலைப்போரில் ஆற்றிய பங்கு பற்றித் தேசியத் தலைவர் தன் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டவை ஜெயந்தன் படை யணி வரலாற்றில் மட்டுமன்றி எமது போராட்ட வரலாற்றிலும் மிக முக்கி யம் வாய்ந்த பதிவுகளாகும்.

'ஜெயந்தன் படையணி அது தோற்றம்பெற்ற காலத்திலிரு ந்தே எதிரியின் நிலைகள்மீது இடை விடாது தாக்குதல் தொடுத்தது.... கெரில்லாப் பாணியிலான தாக்குதல் களில் இருந்து மரபுவழிச் சமர்வரை ஜெயந்தன் படையணி சிறப்பாகச் செயலாற்றியது.... இப் படையணி யின் போராளிகளும் தளபதிகளும் போர்க்கலையில் வல்லவர்கள், அபார துணிச்சல் மிக்கவர்கள். இவர்களின் இந்தப் போர்ப்பண்பு களுக்கு எதிரி பயப்படுகின்றான்'. என தேசியத்தலைவர் இப்படையணி பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

எமது இலட்சியப் பயணத் தில் என்றுமில்லாதவாறு ஒரு மாபெரும் துரோகம், மட்டக்களப்பில் கருணா என்ற பெயரில் அரங்கேறிய போது, ஜெயந்தன் படையணி அதை எதிர்கொண்ட விதம், அதன் கடந்த கால சமர்க்களச் சாதனைகளை விஞ்சிநின்றது. இதுபற்றி தலைவர் குறிப்பிடுகையில்,

'ஜெயந்தன் படையணி யின் பேராற்றலையும், இலட்சிய உறுதியையும் கடந்த ஆண்டின் முற்பகுதியில் உலகமே தன் கண் ணால் நேரடியாகக் கண்டது. மட்டக் களப்பு மண்ணிலே எமது போராட்டத் திற்கெதிராகப் பெரும் துரோகம் நிகழ்ந்தபோது ஜெயந்தன் படை யணி வெளிக்காட்டிய வீரமும், கொள்கைப்பற்றும் என்றுமே பாராட் டிற்குரியவை.'

தலைமையின் இந்த உள் மனவெளிப்பாட்டிற்கு ஏற்றவகையில் ஜெயந்தன் படையணி என்றும் செயற்படும் என்பதை 04.05.2005 அன்று மட்டக்களப்பு தரவைப் பகுதி யில் சிறப்புற நடைபெற்ற படை யணியின் 12வது வருட நிறைவு நிகழ்வுகள் எடுத்துக்காட்டின. வன மும் வயலும் மலையும் சூழ்ந்த ஜெயந்தன் படையணியின் அந்தப் பிரதான தளத்தில் தமிழீழ தேசியக் கொடி உயர்ந்து பறந்துகொண்டி ருக்க ஜெயந்தன் வீரர்கள் கம்பீர மாய் அணிவகுத்து வந்த காட்சி எதிரி களுக்கும் துரோகிகளுக்கும் உயிரொடுங்கும் செய்தியொன்றை உறைக்க உரைத்திருக்கும்.

**''எங்கும் செல்வோம் எதிலும் வெல்வோம்''**

– சுரேன் –



# கவசம் தரிப்போம் சபதம் முடிப்போம்

நல்ல காலம் வருகுது
நல்ல காலம் வருகுது
குடுகுடுப்பைக்காரனின் இங்கிதக் குரலில்
மையல் கொண்டிருந்தது போதும்.
இனியும் பொறுத்தல் இழிவு
இழிவுமட்டுமல்ல பழியும் கூட.
காலக்கடமையில் வழுவோமெனும் கச்சிதத்துக்கு
காத்திருப்பால் பழிசேர்த்தோம்.
குடுகுடுப்பைக்காரனுக்கு எந்தச் சேதாரமும் வராது
வாவென்றோம் வந்தான்
போவென்றால் போய்விடுவான்.
இழிவும் பழியும் எமக்கல்லவா?
பச்சை – நீலம் – சிவப்பு – மஞ்சள்
கறுப்பு –வெள்ளை –ஊதா என
கலர்கலரான புகை நடுவே
கண்ணாமூச்சி விளையாடினாய்.
ஊதிப்பெருத்த பலூன் ஒன்றின் மீதேறி
உல்லாச உலாப் போனாய்.
பகை வென்றோமெனும் மிதப்பில் பெருத்து
வாகைமாலை தரித்து
அலங்கார ஆடைதாரியான கூத்துக்காரனாய்
வட்டக்களரி வலம் வந்தாய்.
விழுத்தத் தோண்டிய படுகுழிகளை அலட்சியப்படுத்தி
காலில் விலங்கேறுவதும் அறியாமல்
நேற்றுவரை நித்திரையிற் கிடந்தாய்.
இன்று மெல்லமெல்லக் கனவு கலைந்ததும்
கவடுகிழியக் கிடக்கிறாய் நிலத்தில்.
மூன்று வருடங்களுக்கு மேலாகி
ஆயிரத்து நூற்றி ஐம்பது நாட்களாயின.
வெறும் புல்லையும் நாயுருவியையும் தவிர
விளைச்சலென என்ன கிடக்கிறது எம் வயலில்?
காடுமண்டியது களனி
கட்டாந்தரையானது பொன்விளையும் பூமி.
அடைபட்டிருந்த அந்த ஏழு வருடங்களும்தான்
எம்மில் அழகிருந்த காலம்.
எவருக்கும் குனியாமல்
எதுவரினும் பணியாமல்
புயலின் பிள்ளைகளாய் உலவினோம்.
ஒளி இலங்கிய காலமல்லவா அது.
வெற்று வயிறெனினும் என்னமாய் விளங்கினோம்.
நிலவு இறங்கி ஒளிதர
முகில்கள் வந்து முத்தமிட்டுப் போயின எமக்கு.
வாயு புத்திரரொப்ப வலிமைகொண்டு
தேசுலவியது எம்மில்.
ஒற்றை விரலால் உலகைச் சுற்றும் பலம்
பெற்றிருந்தோமல்லவா அப்போது?
ஊரெல்லாம் பலத்திலும்
உறவெல்லாம் களத்திலுமாக
வா பகையே! என்று வழிபார்த்திருந்தது
ஏவுகணையுடன் எல்லைப்படை.
காலடியில் சாவு கிடந்ததெனினும்
உயிரை உள்ளங்கையில் வைத்தல்லவா
ஊதி விளையாடினோம்.
வீரத்தின் முடிதரித்த தலையராய்
குருதியின் ஈரத்திடையே குதித்தோம்.
விடுதலை இலக்கில் விழியகலாதோராய்
இருந்தோமே தோளில் காண்டீபம் தரித்து.
அம்பகாமம் வரையும் வந்தவனைத் துரத்தி
ஆனையிறவையும் எடுத்துத் தோளிற் கிடத்தி
பளை நோக்கிப் போனது புலிவீரம்.
வையப்பரப்பு வாயில் விரல்வைத்து
வன்னிக்கு வளைகாப்புக் கொண்டாடியது.
அதிகாரக் கொம்பன்களின் அடிவருடாமல்
புதிய நாடொன்று புலர்வதை
'வால்கா' நதிக்கரை ஏற்காது
'நயாகரா' நீர்வீழ்ச்சி அனுமதிக்காது
'இமயமலை' வாழ்த்தாது
'பெருஞ்சுவருக்கு'க்கூடப் பொறுக்காது இது.
சந்தையைப் பங்கிடுவதில் சண்டையே தவிர
உண்மையில் இவர்களெல்லோருமே
நண்பர்கள்தான்.
கள்ளரசுகளென்பதையே
வல்லரசுகளென்கிறது வரலாறு.
தீச்சுவாலையை வென்று நிமிர்ந்து
நாங்கள் முன்னேறியபோது
ஓடி விழித்த உலகம் கூடிக் கதைத்த பின்னர்
பேச வந்தது பனிதேசம்
எமக்குப் பிடித்தது சனிதோஷம்.
சமாதான மேசையைத் தூக்கிக்கொண்டு
சரசக்காரிகள் சமரசத்துக்கு வந்தனர்.
இவர்கள் ஏவல் மோகினிகள்
தளுக்கிக் குலுக்கி வருவார்கள்.
ஒப்பனை எதுவும் கலையாமல்
அற்புதமாய் ஆடுவதில் கில்லாடிகள்.
எம்மை அழகென்றனர்.
ஆணழகர் என்றனர்.
உங்கள் எச்சிற் பருக்கையே ருசியென்றனர்.
எம்முடன் வருக
முகிலேறி குளிர்நாடுகள் இறங்கி
தாமரைக் குளங்களில் ஜலக்கிரீடை என்றனர்.
எமக்கும் போகவேண்டிய தேவை இருந்தது
அப்போது
அது பிழையல்ல.
போராட்ட வியாபகத்தின் பொறிமூட்ட
எமக்கும் கையொப்பமிடும் கட்டாயமிருந்தது
அது குற்றமல்ல.
உலகத்தின் முகத்தில் உண்மையை வரைய
எமக்கு வர்ணமும் தூரிகையும் வேண்டியிருந்தது
அது தவறுமல்ல.
ஓரிரண்டுபேர் உலங்குவானூர்தி ஏறியதும்
மற்றவர்களின் ஒட்டுமொத்த வல்லமையும்
ஏன் இடிந்துபோனது?
கனவுகளின் ஊர்வலத்திற் கலந்தது போதும்
விட்ட இடத்திலிருந்து புறப்பட்டு
மீதிவழி கடந்தாக வேண்டும்.
அவர் வருவார் அள்ளித் தருவார்
இவர் வருவார் எடுத்துக் கொஞ்சுவாரென
இனியும் நம்புவதற்கு என்ன இருக்கிறது.
சமாதானத்தின் சாவுக்கும்
போருக்கான புறப்பாட்டுக்கும்
ஒன்றாகவே  ஒலிக்கட்டும் சங்கு.
முழங்கட்டும் வெற்றிமுரசு.
காலக்கடமையைத் தோளிலேற்றி
அஸ்திரங்களை எடுத்துக்கொள்வோம்.
வில் வளைத்து நாணேற்றும் சத்தமே
பேசவர மறுத்தவருக்கான பேதியாகட்டும்.
சாவும் அதன் வலியும் சகிக்க முடியாதுதான்.
தாயரின் ஒப்பாரிக்கு முன்னே
தாக்குப்பிடித்து நிற்க முடியவில்லைத்தான்
எனினும் புறப்படு.
விடுதலை என்பது  பூப்பறிப்பது அல்ல
புல்லாங்குழல் வாசிப்பதுமல்ல.
தலைமகன் தளரானெனும் நம்பிக்கையில்
நிலையெடுத்து நிமிர்ந்தபடி நில்.
இது புலிகளின் தேசம்
பிரபாகரனின் காலம்
ஒரு மயிரைக்கூடப் புடுங்கமுடியாது மற்றோரால்.
எனவே கவசம் தரிப்போம்
எங்களின் சபதம் முடிப்போம்.




வியாசன்

## புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்